www.padippakam.com

Jude

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

ஒக்.10-16,1999

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 330

## சந்தேகவலை

## தமிழ்க் கட்சிகளுக்குள் உளவறியும் புலிகள்



## பனை வடலிகளும் பதுங்கும் புலிகளும்

எக்ஸ்ரே ரிப்போர்ட்



## ரஜினியோடு ஷாருக்கான்

## கௌசல்யாவுக்கு பிடித்த இனிய இருபது



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## மௌனம் ஏன்?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

"இலங்கை இனப்பிரச்சனையில்
ஐ.நா.சபை
தலையிடக்கூடாது!"
என்றுள்ளார் வெளிநாட்டமைச்சர்!

என்ன கூறியுள்ளார்
என்பதைவிட,
எப்போது கூறியுள்ளார்
என்பதுதான் முக்கியம்!

புதுக்குடியிருப்பு
படுகொலைகள் தொடர்பாக
ஐ.நா.கருத்துக் கூறியதுதான்
மாண்புமிகு அமைச்சருக்கும்
ஆட்சியாளருக்கும்
பற்றிக்கொண்டு வந்துள்ளது!

கோணகல தாக்குதலை
மட்டும் கண்டித்திருந்தால்,
'தலையிடாதே!' என்று கூறியிருக்க மாட்டார்!

புதுக்குடியிருப்பையும்
சேர்த்துக் குறிப்பிட்டதுதான்
ஆட்சியாளரால்
சகிக்க இயலவில்லை!

இது ஒன்றே
பல உண்மைகளை
உள்ளங்கை நெல்லிக்கனியாக
உணர்த்திவிட்டது!

தமிழ்பேசும் தரப்புக்கு
சர்வதேச அனுதாபமஏற்படுவதை
எப்பாடுபட்டாவது தடுப்பதே
வெளிநாட்டமைச்சுக்கு
இடப்பட்டுள்ள பணி!

'புலிகளுக்கு ஆதரவளிக்காதீர்'
என்ற கோஷத்தின்
உள்ளார்ந்த உண்மை அதுதான்!

புதுக்குடியிருப்பில்
பலியானவர்கள் புலிகளல்ல!
அப்பாவிக் குடிமக்கள்!

அதனையிட்டு
ஐ.நா.சபை குறிப்பிட்டால்
ஆட்சியாளருக்கு ஏன்
இத்தனை கோபம்?

இதே ஆட்சியாளரும்
வெளிநாட்டமைச்சரும்தான்,
புலிகளைத் தடை செய்யுமாறு
உலக நாடுகளைக் கோரி வருகிறார்கள்!

அண்மையில்கூட
பிரிட்டனில் நடைபெற்ற
துப்பாக்கிச் சூடு தொடர்பாக
பிரிட்டன் அரசுக்கே
ஆலோசனைகள் கூறவும்
தலைப்பட்டிருந்தது
வெளிநாட்டமைச்சு!

தமக்குத் தேவையானால்
உலக நாடுகளின்
உதவி கேட்பார்கள்!
தமது நலன்பொருட்டு
ஆலோசனைகளும் கூறுவர்!

அதுமட்டுமன்றி,
இலங்கை விவகாரத்தில்
பிரிட்டனை இழுத்து
அமெரிக்காவிடம்
புகார் கூறியதும்
வெளிநாட்டமைச்சுத்தான்!

இந்தப் புகார் கூறப்பட்டதே
இலங்கை பிரச்சனை
சர்வதேசப் பிரச்சனையாக
விஸ்வரூபம் கொண்டுள்ளதை
வெளிப்படுத்திவிட்டது!

பிரிட்டிஷ்
நாடாளுமன்ற உறுப்பினர்களை
நோக்கி ஜே.ஆர்.ஜெயவர்த்தனே
அன்று கூறியது நினைவிலுள்ளது,
"உங்கள் வேலையை
நீங்கள் பாருங்கள்"

தமிழ் பேசும் மக்களுக்காக
உலக அரங்கில்
எக்குரல் ஒலித்தாலும்,
ஆட்சியில் இருப்போர்
துள்ளிக்குதிப்பதே வழக்கம்.

இக்கால ஆட்சியாளரும்
அதற்கு விதிவிலக்கல்ல!

கொசோவாவில்
அமெரிக்கா தலையிட்டதையோ,
கிழக்குத் திமோரில்
ஐ.நா.உட்பட
உலக நாடுகள்
தலையிட்டதையோ
இலங்கை அரசாங்கமும்
ஆதரித்துக் கொண்டிருக்கிறது!

கொசோவா,
கிழக்குத் திமோர்
பிரச்சனைகளுக்கு சற்றும்
குறைந்ததல்ல,
ஈழத் தமிழர் பிரச்சனை!

மனித உரிமைகள்
மீறப்படுவதையோ,
இனப்படுகொலைகளையோ,
உள்நாட்டு போர்களையோ
கட்டுமீறும்போது
தட்டிக் கேட்பதற்கே
ஐ.நா. சபை இருக்கிறது!

அப்பணியை
ஐ.நா.சபை
செய்யத் தவறும்போதுதான்
அதன்மீதே
நம்பிக்கையீனங்கள் உருவாகின்றன!

இராணுவத்தீர்வை
முடுக்கிவிட்டபடி,
சமாதானத் தீர்வுக்கான
சர்வதேச உதவிகளை,
ஆட்சியாளர்கள்
மறுத்து வருகின்றனர்!

இந் நிலையில்
சமாதானம் எங்கிருந்து
வந்து குதிக்கப்போகிறது!

சமாதான முழக்கமிடுவோரும்,
சமாதானத் தூதுக்குழுக்களும்
ஆட்சியாளரது இத்தகைய
நிலைப்பாடு பற்றி
மௌனம் சாதிப்பது ஏன்?

*மீண்டும் மறுமடலில் ■■ ■■*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*


## சைவத் திருமுறைகள்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் சைவசமயமாகும். சைவநெறியில் வழிபடுபவர்கள் சைவர்கள் எனப்படுவர். சைவர்களாகிய நாம் சிவனை அடையவழி காட்டுவது சைவத் திருமுறைகளாகும். இது பன்னிரு திருமுறைகள் ஆகும். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்தும் திருமுறைகள் எனப்படும்.

இராஜ இராஜனின் வேண்டுகோளுக்கிணங்க திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரின் திருவருள் பெற்ற நம்பியாண்டார் நம்பி என்பவர் தில்லைக் கோயிலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த திருமுறைகளை எடுத்து அவற்றைப் பதினொரு திருமுறைகளாக்கினார். பின்னர் பன்னிரண்டாந் திருமுறையாகப் பெரியபுராணம் சேர்க்கப்பட்டது. தெய்வத் தன்மையுள்ள பாடல்களின் தொகுப்பே திருமுறைகளாகும். ஆகமங்களின் உட்பொருளை விளக்குவதால் தமிழ்வேதம் என்ற சிறப்பைப் பெறுகின்றது. திருமுறைகள் மூலம் நாயன்மார்கள் பற்பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளனர். வேதத்திலும் பார்க்க இத்திருமுறைகளில் தான் இறைவனுக்கு அதிக விருப்பம் என சிவ இரகசியத்தில் கூறப்பட்டுள்ளது. இத் திருமுறைகளை நாள் தோறும் ஓதிவருதல் வேண்டும். இவற்றைப் பக்தி சிரத்தையுடன் ஓதுவதாலும் கேட்பதாலும் பாராயணம் செய்வதாலும் இறைவன் பேரருள் கிட்டும் என்பதில் ஐயமில்லை. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் பஞ்சபுராணங்களாகிய திருமுறைகளை ஆலயங்களில் ஓதுதல் வேண்டும் என்று விதித்துள்ளார்.

தொகுப்பு: திருமதி.சி.பாலம்பிகை, சிலாபம்.

# ஆன்மீகம்



## இறைவனின் நேசமும் வெறுப்பும்

நன்மைகளை பூரண அழகுடன் செய்பவர்களை (முஹ்ஸின்களை) இறைவன் நேசிக்கின்றான் (திருக்குர் ஆன் 2:195)

திண்ணமாக இறைவன் தீமைகளிலிருந்து விலகி இருப்பவர்களையும் தூய்மையை மேற்கொள்பவர்களையும் நேசிக்கிறான். (2:222)

எவர் தனது வாக்குறுதியை நிறைவேற்றி, தீவினையிலிருந்து விலகிக் கொள்கின்றாரோ அவரே இறைவனின் நேசத்திற்குரியவராவார். (3:76)

மேலும் அல்லாஹ் தஆலா திருக்குர் ஆனிலே கூறுகின்றான்:

"உண்ணுங்கள்; பருகுங்கள் ஆனால் வீண் விரயம் செய்யாதீர்கள். திண்ணமாக விரயம் செய்வோரை அல்லாஹ் நேசிப்பதில்லை." (7:31)

"இறைவன் உனக்கு உபகாரம் செய்திருப்பது போல் நீயும் உபகாரம் செய். மேலும் பூமியில் அராஜகம் செய்யாதே! அராஜகம் விளைவிப்பவர்களை திண்ணமாக இறைவன் நேசிப்பதில்லை." (28:77)

செல்வத்தைக் கண்டு நீ பூரித்து விடாதே! ஏனெனில்-பூரித்திருப்பவர்களை இறைவன் நேசிப்பதில்லை. "இறைவன் உனக்கு வழங்கியுள்ள செல்வத்தின் மூலம் மறுமையின் வீட்டைப் பெற அக்கறை கொள்: மேலும் இம்மையிலும் உனது பங்கை மறந்து விடாதே" (28:76)

தொகுப்பு: மருதமுனை மினாலேன் அழூகிஷோர்

## கவிதைப் போட்டி இல.327

### பரிசுக்குரிய கவிதை

### முகாம்?

தமிழா!
நீ விடிழந்தாய்!
உனக்கு இருக்கிறது
அகதிமுகாம்!
உன்னுடன் இருந்ததால்
நாங்கள் காடிழந்தோம்! (வன்னி)
எங்களுக்கு எங்கே முகாம்?

வி.பிரதீபன்-புத்தளம்.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### பாஸ்!

வழி மாறி
இங்கு வந்து
'பாஸ்' இன்றி
முழிக்கிறேன்!

கயல் வண்ணன்-வவுனியா.

### நகல் செய்கிறது

எட்டாத தீர்வுப் பொதிக்காக
நம்மவர் கொட்டாவி விடுவதனை
நன்றாக இந்தக் குரங்கு
நகல் செய்து காட்டுகிறது!

அ.அச்சுதன்-சேனையூர்-மூதூர்.



### என்னிடம்

சிரிக்கத் தெரிந்த மனிதா
உன் சிரிப்பு
உன்னிடம் இல்லை!
என்னிடம் இப்போ!

ஜ.யுவராஜா-கொழும்பு-12

### சிரிப்பு

"மனிதர்கள்தான்
கவலைகளோடு!
மிருகங்களாவது
சிரிக்கட்டும்!"

தஸ்கர ராஸீக்-கொழும்பு-12.

### அ(இ)ங்கும்

மனிதக் குரங்கும் மனம்
மகிழ்கிறது அங்கே!
இனியொரு பிறவியும்
வேண்டாமென
இறைவனை இறைஞ்சுகிறோம்
இங்கே!


ரவீந்திரநாத் அரவிந்தன்-அக்கரைப்பற்று-08.

### மனித மனம் ஒன்று

ஆண்டு இரண்டாயிரம்
ஆகையிலே
அழிவுகள் என்ன
செய்திடலாம்
என்று
ஆழ்ந்து சிந்திக்கிறது
மனித மனம் ஒன்று!

ஜிகே.யோகச்சந்திரன்-அக்கரைப்பற்று.

## கவிதைப் போட்டி இல.330



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 16.10.1999

முகவரி: கவிதைப் போட்டி இல.330
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### ஆதி மனிதன் சிரிக்கிறான்!

'நாகரிகம்'
வளர்ந்தது என்றீர்
செம்மணி...
எப்படி வந்தது?

சுஜோ-மல்லாவி.

### சின்னம்

எதிர்வரும் தேர்தலுக்கான
தமிழ்க்கட்சிக்
கூட்டமைப்பின்
தேர்தல் சின்னம்!

சுந்தரலிங்கம் முகுந்தன்-நட்பிட்டி முனை.

### எங்கே ஒளிக்கலாம்?

காட்டிலே பிரச்சனையாம்;
நாட்டுக்குள் ஓடி வந்தேன்!
நாட்டிலும் பிரச்சனையாம்;
நான் எங்கே ஒளிப்பதுவாம்!

ரி.லஷ்மிதேவி-மட்டக்களப்பு.

### மாற்றம்

நாங்களெல்லாம்
நாட்டுக்குள்!
நீங்களெல்லாம்
காட்டுக்குள்!

இரா.இராமகிருஸ்ணன்-பொகவந்தலாவை.

### ஏன்...?

மனிதா!
என்னைத் தெய்வமாக்கிவிட்டு
நீயேன்
மிருகமானாய்?

அ.சந்தியாகோ-கண்டி.

# வாசக(ர்)சாலை

## சிக்கனமும் நேர்த்தியும்

விடுதலைப் புலிகள் எப்போது தாக்கினாலும் ஆட்டிலெறியால் தாக்கினார்கள் என்று செய்திகள் வருவது பற்றி நாரதரின் விளக்கம் நன்று. ஆட்டிலெறி ஷெல் ஒன்றின் விலை கிட்டத்தட்ட 40 ஆயிரம் ரூபாய். புலிகள் ஆட்டிலெறி ஷெல்களை மழைபோல் பொழிந்ததாக செய்திகள் பார்க்கிறோம். மழை போலப் பொழிந்தால் புலிகள் நிதிக்கு எங்கே போவது? பணம் காய்க்கும் மரம்தான் வைத்திருக்க வேண்டும். அதேபோல பல குழல் பீரங்கி என்பது 'சண்டே ரைம்ஸில்'தான் முதன் முதல் கூறப்பட்டது. படையினர் கூறிய தகவலே அது. தாம் புலிகளிடம் பின்னடைவதற்கு நவீன ஆயுதங்களே காரணம் என்று படைத்தரப்பு சித்தரிக்க முனைவது இயல்புதானே. பல குழல் பீரங்கிகளைவிட பலமான 'மோட்டார் குரூப்' புலிகளிடம் உண்டு. சிக்கனம் அதே நேரம் சிறப்பு தேர்ச்சி என்பதுதான் புலிகளது தாக்குதலில் முக்கிய அம்சம்.

எம்.ராஜ்குமார், கிளிநொச்சி.

## நிர்ப்பந்தம்

உனது ஆக்கங்கள் யாவும் சிறப்பு. இராஜதந்திரியின் அலசல் ஒவ்வொன்றும் தனிச் சிறப்பு. 'கல்லோயாக் குடியேற்றம்' பற்றிய இராஜதந்திரியாரின் அலசல் வெகு நேர்த்தி. ஆயுதப் போராட்டம் என்பது தமிழ் மக்கள் தாமாக விரும்பி ஏற்றதல்ல; திணிக்கப்பட்ட நிர்ப்பந்தம் என்பதற்கு கல்லோயாக் குடியேற்ற வாசிகளுக்கு எதிரான நடவடிக்கை தக்க உதாரணம்.

பி.முருகேசு, அம்பாறை.



## அங்கும் குடியேற்றம்

அன்புள்ள முரசுக்கு:

'வீரன் தான் பிரீன்' தொடர் மிக நன்றாக உள்ளது. அயர்லாந்து போராட்டத்திற்கும், நமது போராட்டத்திற்கும் பல ஒற்றுமைகள் உள்ளமை கண்கூடு. அங்கும் குடியேற்றங்கள் மூலமே அயர்லாந்தை அபகரிக்க பிரிட்டிஷ் ஆட்சியினர் சூழ்ச்சி பல செய்தனர். இங்கும் அதே வழிமுறையினை சிறீலங்கா ஆட்சியினர் செய்தனர். உலகப் போராட்ட வரலாறுகளை நாம் அறிந்துகொள்வது ஆரோக்கியமானதே.

எஸ்.வசந்தராஜா, மட்டக்களப்பு.

## தந்தி அடிக்காமலேயே

கோணகல குடியேற்றவாசிகள்மீது தாக்குதல் நடந்ததும் ஜனாதிபதி உடனடி அறிக்கை விட்டார். 'வந்தேறு குடிகள்' விடயத்திலும், 'வலிகாமம் குடியேற்ற விடயத்திலும், இவ்வாறு தமிழ் மக்களை மிகப் பாதிக்கும் எவ்விடயத்திலும் ஜனாதிபதி எக்கருத்தையும் தமிழ் மக்களுக்கு கூற முன்வரவில்லை. அதுதான் போகட்டும். செம்மணிப் புதைகுழி பற்றிக்கூட ஒரு ஆறுதல் வார்த்தையாவது கூறப்பட்டதா?

எதற்கெடுத்தாலும் ஜனாதிபதிக்கு தந்தி அடிக்கின்றன தமிழ்க் கட்சிகள். ஏதோ இவை சொல்லித்தான் அவர் அறிய முடியுமாம். 'கோணகல' கொலைகள் பற்றி யாரும் தந்தி அடிக்காமலேயே தெரிந்து கொண்டார்கள். தேவையான நடவடிக்கைக்கு ஆணையிட்டனர். இது எப்படி இருக்கிறது?

பூ.பாலசிங்கம், யாழ்ப்பாணம்.

அன்பின் முரசே!

நீ வழங்கும் அத்தனை அம்சங்களும் சூப்பர். அதில் என்னை வெகுவாக கவர்ந்தது 'மோனிக்கா என்மோனிக்கா' இதை வழங்கும் புவனாவிற்கு எனது நன்றிகள்.

செல்வி இளங்கேஸ்வரி மருதை, அக்கரப்பத்தனை.

இனிய முரசுக்கு:

'இடி அமீன்', 'மோனிக்கா' இரண்டும் போட்டி போடுகின்றன. மோனிக்கா பற்றிய அறியாத பல தகவல்களை திரட்டித் தருகிறார் புவனா. முரசு கிடைத்ததும் எக்ஸ்ரேக்கு அடுத்து முழு மூச்சில் படிப்பது மோனிக்காவைத்தான்.

பா.சுமதி, பண்டாரவளை.

## காரியக் கரிசனை

ஒரு கொலைக்கு அனுதாபம் தெரிவித்து அறிக்கை விட்ட அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன், குண்டு வீச்சில் 22 உடல் சிதறிய மக்களுக்கு தனது கவலையைக்கூட தெரிவிக்கவில்லை. இது அமெரிக்காவின் காரியக் கரிசனையைக் காட்டுகிறது அல்லவா?

ஜிகே.யோகச்சந்திரன், அக்கரைப்பற்று-07.

'நில் கவனி முன்னேறு' நம்பிக்கை தருகிறது. விற்றமின் மாத்திரைகளாக ஊக்கமும் தந்துவிட்டது. முரசே தொடர்க பணி. வாழ்க தமிழ்.


இ.சங்கரன், மாத்தளை.

## புதுக்குடியிருப்பு கோரம்

புதுக்குடியிருப்பு மனிதப்படுகொலைகள் நடந்த போது நான் அங்கிருந்தேன். அதனை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. ஆனால் புலிகளது முகாம் தாக்கப்பட்டு புலிகளே இறந்ததாக அரச வானொலி கூறியது. சர்வதேச செஞ்சிலுவை சங்க வதிவிடப் பிரதிநிதி நேரில் பார்த்து, இறந்தது மக்களே என்று கூறினார்.

அம்பாறைச் சம்பவம் நடந்த பின்னர்தான் புதுக்குடியிருப்பிலும் மனிதப் படுகொலை நடைபெற்றுள்ளதை அனைவரும் ஒப்புக்கொண்டனர்.

அ.நவரட்ணராஜா, கிளிநொச்சி.



மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.


படிப்பகம்

www.padippakam.com

# திருமலை வர்த்தக தலைநகர்!

## அமைச்சர் மங்கள அறிவிப்பு!

# விடுதலைப் புலிகள் கடும் கண்டனம்

திருமலையை சமாதான நகராகப் பிரகடனம் செய்துள்ளமை இன ஒழிப்பின் ஒரு கட்டமே என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள செய்தியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"அமைதிப் பூமியாகத் திகழ்ந்த திருகோணமலையின் அமைதியைப் பறித்த சிங்கள அரசாங்கமே அதனை அமைதி நகராக மாற்றுவதாகக் காட்டுகிறது. இந்த நாடகத்திற்கு சர்வதேச நிறுவனமான கல்வி கலாசார நிறுவனம் மேடை அமைத்துக் கொடுப்பதை தமிழ் மக்கள் ஏற்க மாட்டார்கள்.

அந்த மேடையில் வைத்து சிறீலங்கா அமைச்சர் மங்கள சமரவீர திருமலையை சிறீலங்காவின் வர்த்தகத் தலைநகராக மாற்றப்போவதாக அறிவித்துள்ளதையும் தமிழீழ மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

தமிழீழ மக்களது தாயகத்தின் தலைநகரான திருமலையை, அவர்களது விருப்பு இன்றி சிறீலங்காவின் வர்த்தகத் தலைநகராக மாற்றப்போவதாக அறிவித்துள்ளமை இன ஒழிப்பின் ஒரு கட்டமே.

மனித உயிர்களை மட்டுமல்ல, அவர்களது வாழ்க்கை இருப்பை மறுக்கக்கூடிய செயல்களும் இன ஒழிப்பே என்பது ஐக்கிய நாடுகள் சபையின் பிரபலமான மனித உரிமைச் செயற்பாட்டாளரான லியோ கூப்பரின் கருத்தாகும்.

**தளம்**

சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கைகளைப் பலப்படுத்தக்கூடிய வகையில் திருமலைத் துறை முகத்தை அபிவிருத்தி செய்ய முயற்சிகள் நடக்கின்றன. இதற்கு ஜப்பானிய அரசாங்கம் 150 பில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளது என்று சிறிலங்கா அமைச்சரே கூறியுள்ளார்.

இது யுத்தத்தைத் தொடர்வதற்கு சிறீலங்காவின் இராணுவ, கடற்படை, விமானப் படையினருக்கான கடற்தளம் ஒன்றை ஜப்பானிய நிதியுதவியில் மேற்கொள்ளும் செயற்பாடாகும்.

தமிழர்களைப் பொறுத்தவரை இந்த அமைதி நகர் நாடகத்தை அவர்களது தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான சதிச் செயலாகவே கருதுகின்றனர்.

தமிழீழத் தாயகத்தின் தலைநகரான திருக்கோணமலையை சிறீலங்காவின் ஓர் அலகாக நிரந்தரமாக மாற்றுவதற்கு எடுக்கும் முயற்சியே வர்த்தகத் தலைநகரமாக்கும் சதித்திட்டமாகும்.

பிரித்தானியக் காலனித்துவத்தின் பின்னர் பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் திருக்கோணமலையை சிங்கள நாட்டின் ஒரு பகுதியாக்கும் செயற் திட்டங்களை மேற்கொண்டு வந்தன.

இந்த இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையே போர்த்தப்பட்டது.

கடந்த காலத்தில் அரச படைகளது உதவியுடன் சிங்களக் குடியேற்ற வாசிகளால் தமிழர்கள் திருமலையில் விரட்டியடிக்கப் பட்டனர்.

இவை எல்லாம் யுத்தத்தின் விளைவுகள் அல்ல; யுத்தம் சிறீலங்கா அரசால் ஆரம்பமாக முன்னரே நடந்த ஆக்கிரமிப்புக்கள். இவற்றால்தான் திருமலையின் அமைதி குலைந்தது.

தற்போது சிறீலங்கா அரசும் அதன் அமைச்சர்களும் திருமலையை சமாதான நகராகப் பிரகடனம் செய்யும் விழாவில் கலந்துகொள்வதும், வர்த்தகத் தலைநகராக மாற்றப்போவதாகக் கூறுவதும் திருமலையை முற்றாக ஆக்கிரமிப்பதற்கான திட்டமேயாகும்" என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

# வன்னி மக்கள் பழிவாங்கப்படுகின்றனர்

## நவசமசமாஜக் கட்சி கண்டனம்

வன்னிமக்கள் சந்திரிக்கா அரசால் பழிவாங்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு நவசமசமாஜக் கட்சியின் 'சமதர்மம்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி விக்கிரமபாகுவை பொதுச் செயலாளராகக் கொண்டுள்ள நவசமசமாஜக் கட்சி தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து குரல் கொடுத்து வருவது தெரிந்ததே.

'சமதர்மம்' பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது! "பௌத்த குருமார் சிலர் அடங்கிய தூதுக்குழு ஒன்று வன்னி சென்று அங்கு வாழும் மக்களது வேதனைகளை, பசி பட்டினியின் கோரத் தாண்டவத்தை நேரில் கண்டு வந்தது. ஜனாதிபதி சந்திரிக்காவிடம் விளக்கியது. யுத்தத்தை நிறுத்துமாறு கோரியது.

அம்மையார் ஒரேயடியாக அதனை நிராகரித்துவிட்டார். உணவு, மருந்து இரண்டுமே தமிழ் மக்களுக்கு எதிரான யுத்த கருவிகளாகப் பயன்பட்டு வருவதை எவரும் மறுக்க முடியாது.

கடந்த நான்கு வருடங்களாக வன்னி மக்களுக்கு போதிய உணவு, மருந்து வகைகள் வழங்கப்படவில்லை. அங்குள்ள சனத் தொகை தொடர்பான புள்ளிவிபரங்கள் ஜனாதிபதி அம்மையாராலும், கொழும்பு அதிகாரிகளாலும் நிராகரிக்கப்பட்டன. அதற்கான முழுப் பொறுப்பும் ஜனாதிபதி செயலகத்தைச் சேர்ந்ததாகும்.

சரியான புள்ளி விபரங்களைக் கணித்து ஒரு மாதத்தில் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கொழும்பிலிருந்து ஒரு குழு ஏறத்தாழ இரு வருடங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்டது. அக்குழு இன்னமும் தனது அறிக்கையைச் சமர்ப்பித்ததாக நாம் அறியவில்லை" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணிக்கதாசன் அணியினர் கைது!

## மலர் மாளிகையில் தடுப்பு

வவுனியாவில் மாணிக்கதாசன் அணியைச் சேர்ந்த 20க்கு மேற்பட்டோர் சித்தார்த்தன் அணியினரால் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து மாணிக்கதாசன் அணியின் முக்கியஸ்தர்கள் பலர் ஜெகன் தலைமையில் தலைமறைவாகியுள்ளனர்.

மாணிக்கதாசனின் ஆட்களது சித்திரவதைக்கு பெயர் பெற்ற மலர் மாளிகையில் தான் இப்போது பிடிப்பட்டவர்கள் பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

புளொட்டின் மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரான எஸ்.வேலாயுதம் என்னும் ரங்கனையும் அவருடன் ஐந்து புளொட் உறுப்பினர்களையும் கொழும்பில் வைத்து சித்தார்த்தன் அணியினர் பிடித்தனர். அவர்கள் அனைவரும் மாணிக்கதாசனது விசுவாசிகள். இவர்கள் மலர் மாளிகையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பிடிபட்டது தொடர்பாக முறைப்பாடு செய்யக்கூடாது என்று அவர்களது குடும்பத்தினர் மிரட்டப்பட்டுள்ளனர்.

02.10.99 வவுனியாவில் புளொட் இயக்கத் தலைவர் த.சித்தார்த்தன் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தியிருந்தார். அதில் இதுவரை ஐந்து பேர் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், அதுகூட அவர்களது பாதுகாப்புக்காகவே அவர்களைத் தடுத்து வைத்திருப்பதாகவும் கூறினார்.

# தேசியத் தலைவர் பின்னால் மக்கள்

## போர் எழுச்சிக் கூட்டத்தில் உரை

போர் எழுச்சி போராளர் மாநாடு ஒன்று வன்னியில் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் 03.10.99 அன்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளது அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

"தமிழ் மக்களது புதிய வடிவிலான எழுச்சியும், வளர்ச்சியும் சந்திரிக்கா அரசை தடுமாற செய்திருக்கிறது. இந்த எழுச்சியுடன் விடுதலையை வென்றெடுக்க எமது தேசியத் தலைவரின் வழி காட்டலில் நாம் ஒன்றிணைந்து போராட வேண்டும்.

தமிழ் மக்களது எழுச்சியை முறியடிக்க இராணுவ நடவடிக்கைகள், பொருளாதாரத் தடை போன்ற வழிகளை கையாள்கிறார்கள். நம் மக்களை அடி பணியவைக்க சிறீலங்கா ஆட்சியாளர்கள் எண்ணுகிறார்கள்.

மக்கள் இன்று சகல தடைகளையும் எதிர்த்து தேசியத் தலைவரின் வழி நடத்தலில் அணி திரண்டிருப்பது உலகை வியக்க வைத்துள்ளது.

முயற்சி இன்றி பலன் கிட்டாது. கடும் முயற்சியும், உழைப்புமே தேச விடுதலையை வென்றெடுக்கும்" என்று தமிழ்ச் செல்வன் தனது உரையில் தெரிவித்தார்.

# உதவி போதுமாம்

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு மூன்றாம் தரப்பாரின் உதவி பெறப்படலாம் என்று ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பதும், மூன்றாம் தரப்பாரின் உதவி என்பதும் வேறானதாகும்.

லியாம் ஃபொக்ஸ் ஊடாக ஜனாதிபதிக்கும், ரணிலுக்குமிடையே கடிதப் போக்குவரத்து நடந்தமை தெரிந்ததே. அது மூன்றாம் தரப்பாரின் உதவி என்று கொள்ளப்படலாம்.

விடுதலைப் புலிகளும், தமிழ்க் கட்சிகள் பலவும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தையே கோரியுள்ளன.

# காடுமண்டிக் கிடக்கும் இடம்- புனிதப் பிரதேசம்!

## கோயில்கள் உள்ள இடம்- இராணுவ முகாம்கள்!

வடக்கு-கிழக்கு தமிழர் பிரதேசங்களிலுள்ள கோயில்கள், பாடசாலைகள், குடியிருப்புக்கள் என்பன இராணுவ வலயங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

ஆனால் காடுமண்டிக் கிடக்கும் பூர்வீகமே அல்லாத இடங்கள் அம்பாறையில் பௌத்த புனிதப் பிரதேசமாக பிரகடனம் செய்யப்படுகிறது.

மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்புக்குள் அடங்கும் இந்துக் கோயிலையும், பாடசாலையையும் மற்றும் குடியிருப்புக்களையும் மேலும் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்துக் கோயில் நிருவாகத்தினர் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டால், அப்புறப்படுத்தப்படும் கோயிலுக்குப் பதிலாக வேறோர் இடத்தில் அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மட்டக்களப்பில் இடம் பெயர் சேவையின்போது ஆளுநர் அசோகா ஜெயவர்த்தன அரசசார்பற்ற நிறுவனங்களின் பொது மன்றத்திடம் தெரிவித்திருந்தார்.

ஏற்கெனவே 1985ஆம் ஆண்டிலிருந்து விமான நிலைய விஸ்தரிப்புக்காக காணி சுவீகரிப்பு நடந்து வருகிறது. இப்பொழுது இந்துக் கோயில், பாடசாலை, உட்பட தனியார் குடியிருப்புக்கள் மேலும் சுவீகரிக்கப் படவுள்ளன. ஏற்கெனவே சுவீகரிக்கபட்ட காணிகளுக்கு இழப்பீடுகள்கூட வழங்கப்பட்டு முடியவில்லை.

வடக்கு-கிழக்கில் இந்துக் கோயில்கள் உள்ள பகுதிகளில் இராணுவத்தினர் முட்கம்பி போட்டு வேலி அமைத்துள்ளனர். இதனால் கோயில்களின் புனிதமே பாழ்பட்டுப் போகிறது.

இந்துக் கோயில்கள் இருந்த இடங்களே தெரியாமல் சரித்திரத்தை மாற்றும் நடவடிக்கைகளே தொடர்ந்து வருகின்றன.

இவ்வாறு மட்டக்களப்பில் நடந்த அரச சார்பற்ற நிறுவனங்களின் பொது மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்ட பேராசிரியை மனோ சபாரெட்ணம் கவலை வெளியிட்டார்.

# டாங்கியை தகர்த்த குண்டு

## ஆராய ஐரோப்பிய உதவி

கடந்த செப்டம்பர் 24ம் திகதி வெள்ளி பகல் 10.30க்கு பரந்தன் முகாமின் கிழக்கே படையினர் பயிற்சியிலீடுபட்டிருந்தபோது, அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரு டாங்கிகள் நிர்மூலமாக்கப்பட்டன. இதே காலகட்டத்தில் இம் முகாமுக்கு அருகே இருந்து 120 எம்.எம்.ரக மோட்டார் தாக்குதல்களையும் புலிகள் மேற்கொண்டனர்.

டாங்கிகள் சேதமடைந்தமைக்கு புலிகள் புதிதாகக் கொள்முதல் செய்து கடத்தி வந்த டாங்கி எதிர்ப்பு ஏவுகணைதான் காரணமாக இருக்க வேண்டும் என்று சந்தேகிக்கப்பட்டது.

ஆனால் வெடித்துச்சிதறிய ஒரு டாங்கியின் அருகில் காணப்பட்ட, வயர் சுருள்கள் பலவிதமான சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

இது தவிர இந்த முகாம் எல்லைக்குள் வீழ்ந்து வெடித்த ஒரு குண்டினைத் தொடர்ந்து இரு சிப்பாய்கள் மயக்கமடைந்தனர். இவர்கள் உடனடியாக பலாலி மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு முகாமுக்குள் வீழ்ந்து வெடித்த குண்டின் அலுமினிய உறையும், ஏற்கனவே டாங்கியை உடைத்த வெடி பொருளுடன் இருந்ததாகக் கருதப்படும் வயர்ச் சுருளும் கொழும்புக்குப் பகுப்பாய்வுக்காக அனுப்பப் பட்டன.

இவற்றின் மூலத்தைக் கண்டு பிடிக்க முடியாத பகுப்பாய்வாளர்கள், அவற்றை ஐரோப்பிய நாடொன்றுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

மயக்கமடைய வைத்த குண்டு நச்சுவாயுக் குண்டாக இருக்க முடியாது என்ற முடிவினை ஆய்வாளர்கள் எட்டியிருக்கிறார்கள்.

கலகக்காரர்களை விரட்டியடிக்க பொலிசார் பயன்படுத்தும் கண்ணீர்ப் புகைக் குண்டைப் போன்ற ஒரு குண்டினால்தான் இவர்கள் மயக்க மடைந்திருக்கலாம் என்று பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றனர். இவ்வாறு 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

ரசியா, பல்கேரியா நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் புலிகளிடம் உள்ளன என்றும் சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

புலிகளிடம் நீண்ட காலமாகவே டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# போலி முகவர் நிலையம் முற்றுகை

## இந்தியப் பெண்களுக்கு முஸ்லிம் வேடம்

மன்னாரைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவரினால் இயக்கப்பட்டு வந்த போலி முகவர் நிலைய நடவடிக்கைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இம்முகவரினால் இந்தியாவில் இருந்து வரவழைக்கப்பட்ட 64 தமிழ் யுவதிகள் கடந்த 29.09.99 அன்று கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள சிறிய வீடொன்றில் இருந்து பொலிஸாரினால் மீட்கப்பட்டனர்.

மறைவாக இயங்கி வந்த இந்தப் போலி முகவர் பற்றித் தெரியவருவதாவது: இவர் நீண்ட காலமாக தனக்குள்ள வெளிநாட்டு நேரடித் தொடர்புடனும் மற்றும் ஒரு சில ஒத்தாசையுள்ள சீருடைத் தரப்பாரின் ஒத்துழைப்புடனுமே செயற்பட்டு வருபவராம்.

இந்தியாவில் உள்ள ஒரு முகவரின் ஊடாக அங்கிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் வாய்ப்புப் பெற விரும்பும் தமிழ் யுவதிகளை இலங்கைக்கு வரவழைப்பார். பின்னர் அவர்களுக்கு முஸ்லிம் பெயர்களில் இலங்கைக் கடவுச் சீட்டுத் தயார் செய்வார். முஸ்லிம் பெண்களைப் போன்று நடிப்பதற்கு பயிற்சிகளும் கொடுத்து அரபு நாடுகளுக்கு அனுப்பி வைப்பார்.

இதன் மூலம் இம்முகவர் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஒவ்வொரு பெண்ணுக்கும் தலா 60 ஆயிரம் ரூபாவைப் பெற்றுள்ளார்.

வழக்கமாக இந்தியாவிலிருந்து 5 அல்லது 10 பெண்களே ஒரே தடவையில் அனுப்பப்பட்டு இலங்கையிலிருந்து போலிக் கடவுச் சீட்டு தயார் செய்து கொடுப்பதுண்டாம். ஆனால் இம்முறை மொத்தம் 64 யுவதிகள் ஒரே தடவையில் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டனர்.

கொட்டாஞ்சேனை யில் உள்ள முகவரின் சிறிய வீட்டில் பராமரிப்பு மற்றும் வசதிகள் போதாக்குறைவாக இருந்துள்ளன. அயலவர்களுக்கும் பலத்த சந்தேகம் எழுந்திருக்கிறது. அதனால் பொலிஸாருக்கு தகவல் எட்டியதைத் தொடர்ந்தே இந்த வீடு பொலிஸாரின் முற்றுகைக்கு உள்ளானது.

# ஊர்காவல்படை மிரட்டல்

திருமலை, அன்புவழிபுரம் பொலிஸ் காவல் நிலையம் 01.10.99 அன்று புலிகளது அதிரடித் தாக்குதலுக்கு உள்ளானது.

இதனையடுத்து அன்றிரவு அக் காவல் நிலையத்துக்கு அருகிலுள்ள பாலையூற்று என்னும் தமிழ்க் கிராம மக்கள் ஊர்காவல் படையினரால் அச்சுறுத்தப்பட்டனர்.

மட்கோ என்னும் சிங்களக் குடியேற்றக் கிராமத்தை சேர்ந்த ஊர்காவற்படையினரே தமிழர்களை அச்சுறுத்தியுள்ளனர்.

'பறத் தெமள' என்றும் மேலும் பல தூஷண வார்த்தைகளாலும் தமிழ் மக்களை திட்டித் தீர்த்தனராம்.

தையல் கடைக்காரர் ஒருவரும் ஊர்காவல் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தார்.

# கட்டில் சலாகை காட்டிக் கொடுத்தது

## மட்டக்களப்பு- பதுளை வாசிகள் கைது!

பதுளை-பசறை 2ஆம் கட்டைமில் கடந்த 29.09.99 அன்று மின்மாற்றி தகர்ப்பு சம்பவம் தொடர்பாக தேடுதல்களையும், விசாரணைகளையும் நடத்திய பொலிஸார் 6 தமிழர்களைக் கைது செய்துள்ளனர். இவர்களில் இருவர் மட்டக்களப்பு-களுவாஞ்சிக் குடியைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்களே மின் மாற்றித் தகர்ப்பில் சம்பந்தப்பட்ட புலி உறுப்பினர்கள் என்றும் பொலிஸார் தெரிவிக்கிறார்கள்.

தகர்க்கப்பட்ட மின்மாற்றித் தூண்களுக்கருகில் கட்டப்பட்டிருந்த கட்டில் சலாகைகள் இரண்டு கண்டெடுக்கப்பட்டன. அவற்றைத் தடயப் பொருளாகக் கையிலெடுத்துக் கொண்டு ஹொப்டன் தோட்டப் பகுதியில் பொலிஸார் வீடு வீடாகத் தேடுதலை நடாத்தினர்.

அப்பொழுது ஒரு கட்டிலின் சலாகைகள் இரண்டு அகற்றப்பட்டிருந்தது. மேலும் தேடப்பட்டபோது அதே கட்டிலின் கீழ் இரண்டு கைக் குண்டுகளும், மற்றும் சில வெடிமருந்துப் பொருட்களும் கண்டெடுக்கப் பட்டன.

அவ்வீட்டிலிருந்த களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த இருவரும், இவர்களுக்கு அவ்வீட்டில் தங்குமிடம் கொடுத்ததாகக் கூறப்படும் ஹொப்டன் தோட்டத்தைச் சேர்ந்த நான்கு தமிழர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின் பின்னர் பசறை, லுணுகலை, மடுல்சீமைத் தோட்டப் பகுதிகளில் தேடுதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

தற்சமயம் மலையகப் பகுதி தமிழ்த் தோட்டப் பிரதேசங்களில் கெடுபிடிகளும், நெருக்கடிகளும் அதிகரித்துள்ளன.

# ஆசிரியர் குடும்பம் கைது

சமீபத்தில் மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று வந்த ஆசிரியை ஒருவரும் அவரது சகோதரன் ஒருவரும் கைது செய்யப்பட்டு கண்டிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அதன் பின்னர் தனது பிள்ளைகளைப் பார்க்க கண்டி சிறைச்சாலைக்குச் சென்ற அவர்களது தாயும் கைது செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டிருக்கும் தனது தாயையும், சகோதரியையும் சகோதரனையும் பார்க்கச் சென்ற மூத்த மகனும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் மட்டக்களப்பு-வாகரையைச் சேர்ந்தவர்கள். வாகரைப் பகுதி அவ்வப் போது படையினரதும், புலிகளதும் கட்டுப் பாட்டில் மாறி மாறி இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே மஹரகம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்று வந்த மட்டக்களப்பைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரும் அவர் தங்கியிருந்த வீட்டில் சமையல் வேலை செய்து வந்ததாகக் கூறப்படும் தமிழ்ப் பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். 29.09.99 அன்று மஹரகம பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

சமீப சில மாதங்களுக்கு முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியான மட்டக்களப்பு-பதுளை வீதி கரடியனாறு வித்தியாலயத்தில் கற்பித்த ஆசிரியர் ஒருவரும் கொழும்பில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

www.padippakam.com

## பயணிகளிடம் பணம் பறிக்கும் கும்பல்

(நமது நிருபர்)

வடபகுதி மக்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் கும்பல் ஒன்று திருக்கோணமலை நகரப்பகுதியில் உலவி வருகிறது. தாங்களாகவே வந்து வலியப் பேச்சுக் கொடுத்து உதவுபவர் போல் நடித்து, கடைசியில் இவர்களது உடைமைகளைச் கொள்ளையடித்துக் கொண்டு இக்கும்பல் நழுவி விடுகிறது.

நாளுக்கு நாள் ஏற்படும் நடைமுறை மாற்றங்கள், வதந்திகள் என்பவற்றல் சிக்கி விளக்கமில்லாமல் தவிக்கும் மக்களே இக்கும்பலின் கைவரிசைக்கு இலக்காகி வருகின்றனர்.

"பாஸ் எடுத்துத் தருகிறேன். கப்பல் பயணத்தை ஒழுங்கு செய்து தருகிறேன்" என்று கூறிக் கொண்டு வரும் இவர்கள் சாகசமாகப் பேசி இளநீரிலோ குளிர் பானத்திலோ மயக்க மருந்தைக் கலந்து கொடுத்துவிட்டு பணம், நகைகள் என்பவற்றைச் சுருட்டிக் கொள்கின்றனர்.

ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவருடன் முரசு தொடர்பு கொண்டு இது பற்றி விசாரித்த போது "அண்மைக் காலத்தில் இவ்வாறு உடமைகளைப் பறி கொடுத்து மயக்க நிலையில் கொண்டு வரப்பட்ட மூன்று வடபகுதிப் பயணிகள் எம்மிடம் சிகிச்சைபெற்றுள்ளார்கள்" என்று தெரிவித்தார்.

இது பற்றிப் பொலிஸாரிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளபோதிலும் இதுவரை எவரும் கைதானதாகத் தெரியவில்லை.

இந்தக் கும்பலின் செய்கையால் திருக்கோணமலை மக்களல்லவா தலைகுனிய வேண்டியுள்ளது என்று பிரமுகர் ஒருவர் மனவருத்தத்துடன் குறிப்பிட்டார்.

## சைக்கிள் குண்டு

(நமது நிருபர்)

மன்னார் நகரில் முதற் தடவையாக புலிகளின் சைக்கிள் குண்டுத்தாக்குதல் நடைபெற்றுள்ளது. கடந்த 25.09.99 சனிக்கிழமை பிற்பகல் 3:05 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதலில் ஒரு பொதுமகனும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளும் காயமடைந்தனர்.

மன்னார் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மத்தியில் குண்டு பொருத்தப்பட்ட 12590163 இலக்கமுடைய லுமாலா சைக்கிள் ஒன்றை சாத்திவிட்டுச் சென்ற பின்னரே அது வெடித்தது.

இப்பகுதியில் காணப்படும் இரு பொலிஸ் காவலரண்களைக் குறி வைத்தே தாக்குதல் திட்டமிடப்பட்டுள்ளது. ஆயினும் சரியான சந்தர்ப்பம் கிட்டவில்லை. இது பரீட்சார்த்தமாக இருக்கலாம் எனவும், இனி இவ்வாறான தாக்குதல்கள் தொடரும் சாத்தியங்களும் தென்படுகின்றன எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவத்தையடுத்து வழமையான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன. அதன்பின் கடைகள் யாவும் இழுத்து மூடப்பட்டதுடன் சோதனைகளும் நடைபெற்றன. நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

மறுநாள் நகர சைக்கிள் கடை வியாபாரிகள் பாதுகாப்புத் தரப்பினரால் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர். அப்போது குறித்த இலக்க சைக்கிள் யாருக்கு விற்கப்பட்டதென துருவித் துருவி விசாரித்தனர்.

இது பழைய சைக்கிளாகும். தற்போது ஐந்து என ஆரம்பிக்கும் தொடர் இலக்க சைக்கிளே விற்கப்படுகிறது. குண்டுத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட சைக்கிள் புது மெருகூட்டி காணப்பட்டது. இது சுமார் 10 வருடங்களுக்கு முற்பட்ட சைக்கிள் எனவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

## அம்பாறையில் வன வளப் பாதுகாப்புத் திட்டம்
## காணிகள் சிங்கள மக்களுக்கு பகிர்வு!

அம்பாறையில் வனவளப் பாதுகாப்புக்காக ஐந்தாண்டுத் திட்டமொன்றை அமுல்படுத்த விருப்பதாக வன வள சுற்றாடல் அமைச்சு அறிவித்துள்ளது.

குடியேற்றம், விவசாயம், பாதுகாப்பு போன்ற வேறு பல திட்டங்களாலும் அம்பாறை மாவட்டத்தில் வன வளங்கள் அழிக்கப்படுகின்றன.

இதனை ஈடு செய்யுமுகமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள லஹூகல (LAHUGALA) பிரதேசத்தில் மரங்கள் நாட்டப்படும். இதற்காக அப்பகுதியிலிருந்து 500 ஏக்கர் காணிகள் வழங்கப்படவுள்ளன. தலா இரண்டு ஏக்கர் விகிதம் பகிர்ந்தளிக்கப்படும். மரங்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக இரண்டு ஏக்கர் காணியைப் பெறும் பொதுமக்களுக்குச் சகல வசதிகளும் அளிக்கப்படுமென்றும் சுற்றாடல் வனவள அமைச்சு அறிவித்துள்ளது.

வனவளப்பாதுகாப்பு என்ற போர்வையில் அம்பாறை மாவட்டத்தில் பெரும்பான்மை சமூகத்தின் அடர்த்தியைக் கூட்டுவதே இதன் நோக்கமாக இருக்கக்கூடும் என்று தமிழ் பேசும் மக்கள் கருதுகிறார்கள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கந்தசாமி இரத்தினம்

தோற்றம்: 10.03.1936 | மறைவு: 05.10.1998

**திதி: 24.09.1999**

தாலாட்டுப் பாடியெம்மை தவள விட்டாய் தாயே இவ்வுலகில்.

நாம் தோள்முட்ட வளர்ந்தென்ன, தாயே நீங்கள் இல்லை நாம் தாலாட்ட.

தாயே இது நீங்கள் மறைந்த ஓர் வருடமல்ல; எம்மனதில் நிறைந்துவிட்ட ஒரு வருடம்.

அம்மா நீங்கள் இவ்வுலகை விட்டு மறைந்தாலும் எம் மனதை விட்டு மறையவில்லை. நாம் பார்க்குமிடமெல்லாம் உங்கள் உருவம் தாயே! உங்களை அந்த இயற்கை தான் பிரித்து விட்டதோ?

நீங்காதிடம் பெற்றுவிட்ட உங்கள் நினைவால் நீங்காதம்மா உங்கள் பிரிவின் துயர். கடந்து போனது ஓர் வருடமல்ல; தெய்வமே நாம் வணங்குகின்றோம் காலமெல்லாம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்.

பாசமிகு மகள்மார்கள், மருமகள்மார்கள், பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள் மற்றும் உற்றார் உறவினர்.

தகவல்: மகன் க.விநோத்.


சுவிற்ஸர்லாந்தில் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மற்றும் அனைத்து சஞ்சிகைகள், ஒரிஜினல் வீடியோ கொப்பிகள் வாடகைக்கும்–விற்பனைக்கும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்–

**Tarmu Trading**

Aarauer Strasse-76
4600-Olten- Swiss.
T.P.& Fax : 062-2971070 Natel :- 079-2771573



### மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை

**கொழும்பில் ஒக்டோபர் 20முதல் 27 வரை சந்திக்கலாம்**

Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
(5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388

**கல்முனை நவம்பர் 06, 07ம் திகதிகளில் சந்திக்கலாம்**

T.M.M. பார்மசி–கல்முனை. T.P. 067-29329

**வவுனியாவில் ஒக்டோபர் 10, 11 ம் திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074,

கடிதத்தொடர்பு:- Resident T.P. 065-24019
Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.



என்றும் முதல் தரம். 'சன்வே' கிர..பிக்ஸ்

SUNWAY GRAPHICS

Photographer, Videographer, Wedding Album Makers, Laminating and Duragard

Contact:
K.S. JAYAKODI (MANI)
25/1A, Sagara Road,
Bambalapitiya. Colombo-04.
Tel: 597879 Hot Line: 0722-72119.



உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களே சிறப்பாக உங்களுக்காகவும் ஏனையோருக்காகவும் நாம் வழங்கும்

Quality COMPUTER COURSES

ஆரம்பம் 02.10.1999 சனி காலை 4.00 மணி | விரிவுரைகள் யாவும் தேர்ச்சி பெற்ற விரிவுரையாளர்களினால் நடாத்தப்படுகின்றன.

DIPLOMA IN COMPUTER STUDIES
DIPLOMA IN INFORMATION TECHNOLOGY
MICROSOFT OFFICE 97
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN SOFTWARE ENGINEERING
DIPLOMA IN HARDWARE ENGINEERING

INDIVIDUAL TRAINING PROGRAMME
Visual Basic, Word Processing, Spread Sheet Application, DataBase Management System, Operation System, Children Course


INTERNATIONAL COURSES
City & Guilds, ACS, ICM

ACA
ACADEMY OF COMPUTING & ACCOUNTING
55, ST. LUCIA'S ST,KOTAHENA. COLOMBO - 13.
TEL : 470519, 335287



### மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது ஃபெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHRIKA
UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



சகல விதமான வாத்தியக் கருவிகளையும் உதிரிப் பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும் அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள் –

ஒலிப்பதிவு நாடாக்களும் விற்பனைக்கு உண்டு.



SAI SANGEETHA
L.G. 123, Peoples Park, (நிலத்தளம்)
Gaswork St. Colombo-11. Tel : 445102



K.N.S SHOPPING CENTRE & TAKE AWAY
SWISS

உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள ஒறிஜினல் வீடியோ–ஓடியோ கசற்றுக்கள், COMPACT டிஸ்குகள் வீடியோ CDகள், 22 கரட்டில் நம்பிக்கைக்கு உத்தரவாதமளிக்கும் தங்க நகைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் இலங்கை–இந்திய, சுவிஸ் உணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் இலகுவாக நீங்கள் பெற்றுக்கொள்ள.

K.N.S SHOPPING CENTRE
K.N. SUKUMARAN
ANKER- STR- 16
8004- ZURICH
SWITZERLAND.

☎ 01-242 7111- FAX 01- 2427144 வாரத்தில் 7 நாட்களும் (ஞாயிறு உட்பட) திறந்திருக்கும். நேரம் காலை 9 மணிமுதல், இரவு 12 மணிவரை.



நில்மா
நறுமணச் சொட்டுநீலம்




ஒளிவீசும் வெண்மைக்கு நவீன தாய்மாரின் புதிய தெரிவு.

தூய அன்புக்கு அம்மா, அம்மாதான்
ஒளிவீசும் வெண்மைக்கு நில்மா, நில்மாதான்.

சந்தைப்படுத்துவோர்:
ஏஜே டிரேடிங் கொம்பனி
95, ஜெயந்த வீரசேகர மாவத்தை, கொழும்பு - 10.

LOTUS



உங்கள் வீடியோ கசற்றில் உள்ளதை C.D.க்கு மாற்றி 100 வருடங்களுக்கும் மேலாக பாதுகாத்துக் கொள்ளுங்கள்

STUDIO CHHAYA
40 -1/1, Galle Road,
(Next to Hong Kong Bank)
Wellawatta, Colomb-06.
T.P.:- 594492


## 40வது நாள் நினைவஞ்சலி, நன்றி நவிலல்



### திரு. முத்து சின்னத்துரை

அன்புத் தாய் மடியில்
*01.01.1926*
இறைத்தந்தை மார்பில்
*13.08.1999*

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. முத்து சின்னத்துரை அவர்கள் கொழும்பில் மண்ணின் மடியில் அடைக்கலமானார்.

தேவன் அருளிய இவ்வுலகத்தில் திருவிளக்காய் பிரகாசித்து அனைத்து இதயங்களின் உறவினுள் சங்கமமாய் வாழ்ந்த அவர் நித்திய வாழ்வு வாழ பிரிவு எய்தி சென்றுவிட்டார். அன்னாரின் இறுதி மூச்சு வரை உடனிருந்து பெலன் கொடுத்து சேர்த்துக்கொண்ட தேவகுமாரன் இயேசு கிறிஸ்துவுக்கு முதல் நன்றியும், கூடவே இருந்து துணை புரிந்தோருக்கும், பிரிவின் பின்னால் உதவிகளை நல்கிய அனைவருக்கும் இதயம் நிறைந்த நன்றிகளும் உரித்தாகுக.

என்றும் நீங்காத நினைவுடனும், கண்ணீருடனும் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னாரின் நித்திய ஜீவ வாழ்வுக்காக தேவனிடத்தில் வேண்டிக்கொள்கிறோம்.

*தகவல்: ரெஜினசாந்தி.*



படிப்பகம்

www.padippakam.com

# புலிகளோடு இணைந்து நிற்கும் துணைப்படை!

வன்னியில் பருவ மழைக் காலம் ஆரம்பமாகிவிட்டது. அடை மழை பொழிந்துள்ளது.

பருவமழைக்கு முன்பாக தற்காப்பு அரண்களை பலப்படுத்த மேற்கொள்ளப்பட்ட ரணகோஷ 05 இலக்கை எட்டாது முடிவுற்றது.

இப்போது மழைக்காலம் ஆரம்பமாகி விட்டதால் இனிமேல் வேகமான படை நகர்வுகளுக்கு புவியியல் சூழ்நிலை ஒத்துழைக்காது.

முன்னரங்க காவலரண்களில் நிற்போர் பலத்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

காவலரண்களுக்குள்ளும் வெள்ளம் பாயும். சேறும் சகதியும், துளம்பும் சுகாதாரக் கேடுகளும் ஏற்படும்.

இந்நிலை இரு தரப்பாருக்கும் ஏற்படக் கூடியதே. ஆயினும் புலிகள் சமாளித்துக் கொள்வார்கள்.

ஜனவரி மாதத்திற்குள் மழைக்கால தாக்குதல் ஒன்றை புலிகள் தொடுக்கக்கூடிய சாத்தியங்கள் உள்ளன.

சிறு தாக்குதல்களும், பெரும் தாக்குதலும் களமுனையில் மழைக்காலம் முடியுமுன்பாக நடத்தப்படலாம்.

வன்னிச் சமரில் குவிக்கப்பட்டுள்ள படைத் தரப்புக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுக்க வேண்டும் என்பதே புலிகளது திட்டம்.

எனவே மழைக்கால இடி முழக்கத்துடன் சமர் முழக்கங்களும் இணைந்து வன்னிக் களத்தில் கேட்கக்கூடும்.

✣ ✌ ✣

வன்னியில் பொது மக்களுக்கு அவர்களது விருபத்தின் பேரில் புலிகள் பயிற்சி கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறான நெருக்கடிகளை சந்திப்பதும், அனுபவிப்பதும் புலிகளுக்கு பழக்கப்பட்ட ஒன்றுதான்.

ஆனால் படையினரில் எத்தனைபேர் அத்தகைய மனநிலையில் இருப்பார்கள் என்பது கேள்விக்குறிதான்.

மழைக்காலத்தில் புலிகளால் பெரும் தாக்குதல்களை நடத்தமுடியும். ஆனால் படைத் தரப்புக்கு அத்தகைய சாதகம் கிடையாது.

படையினர் டாங்கிகள், கவச வாகனங்கள் போன்ற கனரக வாகனங்களை முதுகெலும்பாக நம்பியே பாரிய நகர்வுகளில் ஈடுபடுகின்றனர்.

மழைக்காலத் தரையில் டாங்கிகள் இறங்கினால் புதையுண்டுபோகும். நகர முடியாது. அதனால் புலிகளது டாங்கி எதிர்ப்பு அணிகள் அவற்றைத் தகர்த்தெறியவும் வாய்ப்பாகிவிடும்.

புலிகள் குறும்தூர ஆயுதங்கள், மோட்டார்கள் என்பவற்றைப் பயன்படுத்தியே ஊடறுப்பு சமர்களில் ஈடுபடுகின்றனர். அவசியம் ஏற்பட்டால் மட்டும் பாதுகாப்பான ஏவு தளத்தில் உள்ள ஆட்டிலெறிகள் குறிப்பிட்டளவு ஷெல்களை சிக்கனமாகப் பொழியும். ஆட்டிலெறிகளை நகர்த்த வேண்டிய அவசியம் இல்லாததால் ஈரமான தரை பற்றிய கவலை புலிகளுக்கு இருக்காது.

மழைக்காலத்தில் வன்னியில் புலிகள் இரண்டுவிதமான போர் முறையை கைக்கொள்ளமுடியும்.

ஒன்று; மரபுப் போர் முறை. படைத்தரப்பை முன்னேறவிடாது தடுத்து நின்று கொண்டிருப்பது மரபுப் போருக்குள் அடக்கம்.

இரண்டாவது: கெரில்லாப்போர்முறை. படையினரின் பலம் பலவீனம் அறிந்து ஊடுருவித் தாக்குதல்கள் நடத்துவது கெரில்லாப் போர்முறையில் அடங்கும்.

மழைக்காலத்தில் காடு சார்ந்த கள முனைகளில் கெரில்லாப் போர் உத்திகளுக்கு அதிக வாய்ப்புண்டு.

சென்ற மழைக்காலத்தைவிட இம்முறை வன்னியில் படைத்தரப்பு அகலக் கால் வைத்து நிலைகொண்டுள்ளது.

எனவே இம்முறை புலிகளது கெரில்லாத் தாக்குதல்களுக்கு இலக்குகளும் சுலபமாக இருக்கலாம்.

புலிகளது தாக்குதல்களை முன்கூட்டியே தடுப்பதற்கான தற்காப்பு நகர்வுகளில் படைத்தரப்பும் இறங்கக்கூடும். முகாம்களுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தால் விழிப்பாக இருக்க முடியாது என்பதால், நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் உத்தியை சென்ற மழைக்காலத்தில் படைத்தரப்பு கையாண்டது.

ஆனால் இத்தகைய நகர்வுகளை மட்டுப் படுத்தப்பட்ட அளவில்தான் மேற்கொள்ள முடியும்.

மழைக்காலத்தில் வன்னியின் புவியியல் சூழலில் படைத்தரப்பு எத்தகைய நகர்வுகளை மேற்கொள்ளும் என்பதை புலிகள் முன் கூட்டியே கணித்து வைத்திருப்பர்.

அதனால் படைத்தரப்பின் மழைக்கால உத்திகள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த இயலாது.



துணைப்படையினர் பயிறசி

போர் எழுச்சி நிகழ்வுகளோடு பெரும் எண்ணிக்கையான ஆண்களும், பெண்களும் பயிற்சிகள் பெற தாமாக முன்வந்தனர்.

அவ்வாறு பயிற்சி பெற்றவர்களில் பலர் துணைப்படையாக புலிகளோடு இணைந்து களத்திலும் நிற்கிறார்கள்.

அண்மையில் மணலாற்றுப் பகுதியில் நடைபெற்ற மோதல் ஒன்றில் ஒரு புலியும், துணைப் படை வீரர் ஒருவரும் பலியாகியுள்ளனர்.

மணலாற்றுப் பகுதி உட்பட பல முன்னரங்க முனைகளில் புலிகளுக்கு உதவியாக துணைப்படையினரும் ஆயுதங்களோடு காவல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

புலிகளுக்கு ஆட்பற்றாக்குறை ஒரு பிரச்சனையாக இருக்கும். குறிப்பிட்ட அளவுக்கு மேல் புலிகளால் ஆட்பலத்தை உயர்த்த முடியாது என்று படைத்தரப்பு கணக்கிட்டது.

எனவே, வன்னியில் தமது பலத்தை ஒன்று குவித்து புலிகளை சண்டைக்கிழுத்து ஆட்பலத்தில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்திவிடலாம் என்று கருதினார்கள்.

அக் கணிப்பு பொய்த்ததோடு, படைத் தரப்புக்கும் பலத்த ஆட்பல, ஆயுதபல இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் படைத்தரப்புக்கு ஆட்பலம் ஒரு பிரச்சனையாக மாறியுள்ளது.

ஆனால் புலிகள் குறைந்த ஆட்பலத்தோடு வன்னிச்சமரில் மட்டுமல்லாது, நாடெங்கும் தாக்குதல்களை தொடுத்து வருகின்றனர்.

வன்னியில் தமது ஆட்பலத்தை அதிகரிக்க துணைப்படையை உருவாக்கியுள்ளார் பிரபாகரன். வன்னிச் சமரில் புலிகளோடு மக்களும் இணைந்து கொள்ளும் புதிய கட்டம் இதன் மூலம் ஆரம்பமாகியுள்ளது.

துணைப்படையில் எல்லைக்காவல் படையினர்தான் மணலாறு போன்ற எல்லைப்புற பகுதிகளில் புலிகளோடு இணைந்து நிற்கின்றனர். ஐம்பது வயதுக்கு மேற்பட்டோர்கூட புலிகளிடம் தாமாகச் சென்று ஆயுதப் பயிற்சி பெற்று தம்மை எல்லைக்காவல் படையில் இணைத்துக் கொள்கிறார்களாம்.

துணைப்படை உருவாக்கம் மூலம் வன்னியில் மேலும் பல ஆயிரம்பேர் சமரில் பங்கு கொண்டுள்ளனர்.

சமீபத்தில் புதுக்குடியிருப்பில் நடைபெற்ற குண்டு வீச்சின்பின்னர் பெருமளவு மக்கள் தற்காப்புக்கான ஆயுதப் பயிற்சிகளை தாமே விரும்பி பெறத் தொடங்கியுள்ளனர்.

இதனால் புலிகளும் உளவியல் ரீதியாக உற்சாகம் பெற்றுள்ளனர். தம்மோடு இணைந்து மக்களும் களத்தில் நிற்பதும், தமக்கு உதவிகள் செய்வதும் புலிகளுக்கு பன்மடங்கு பலமாக மாறியுள்ளது.

புலிகளையும், வன்னி மக்களையும் பிரிப்பதற்கு மேஜர் ஜெனரல் பலகல்ல பல உத்திகளை கையாண்டு பார்த்தார். பாதைத் தடையும், நிவாரணப் பொருள் தடையும் அதில் பிரதானமானது.

ஆனால் புலிகளுக்கு எதிராக பயன்படுத்த நினைத்த அந்த உத்திகள், படையினருக்கும், அரசாங்கத்துக்கும் எதிரான வெகுஜன எழுச்சியாக வன்னியில் மாறியது.

பல்லாயிரம் மக்கள் வீதிகளில் இறங்கி அரசாங்கத்துக்கும் படையினருக்கும் எதிராக முழக்கமிட்டனர். ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதங்கள் என்று மக்கள் தாமாகவே போராட்டங்களை நடத்தினர்.

பாதைத் தடையும், நிவாரணத்தடையும் போடப்பட்டிருக்காதுவிட்டால் இத்தகைய எழுச்சி ஏற்பட்டிருக்குமா என்பது சந்தேகமே.

எனவே, வன்னிச் சமரில் வெல்வதற்கு இராணுவரீதியாக செய்யப்படும் முயற்சிகள் மட்டுமன்றி, அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் செய்யப்படும் முயற்சிகளும் புலிகளை பலப்படுத்துவதாகவே முடிந்துள்ளன.

# திருமலையில் தொடர் தாக்குதல்கள்

விடுதலைப் புலிகள் தோன்றுவதற்கு மட்டுமல்ல, அவர்கள் இன்று பலம் பெற்றுக் கொள்ளவும் அரசாங்கமும், அதன் படைகளுமே காரணமாக இருக்கின்றன. இதுதான் உண்மையான நிலவரம்.

வன்னியில் புலிகளை தனிமைப்படுத்த உணவை ஆயுதமாக பயன்படுத்த நினைத்தனர். அதே உணவும், தடைகளும் புலிகளைச் சுற்றி துணைப்படையாக மக்கள் இணைந்து கொள்ள வழி செய்து கொடுத்துவிட்டது.

○▲●

யாழ் குடாநாட்டிலும் இது மழைக் காலம். அங்கும் புலிகளது தாக்குதல்கள் தீவிரமாகும் சூழ்நிலைதான் உள்ளது.

யாழ் குடாநாடு முழுவதும் படையினரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறப்படும்போதும் வடமராட்சியில் பல பகுதிகள் புலிகளின கட்டுப்பாட்டில் இருக்கின்றன.

இப்பகுதிகளை கைப்பற்ற ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி படைத்தரப்பு நகர்வு ஒன்றை மேற்கொண்டது.

எழுது மட்டுவாள், மாமுனை, நாகர் கோவில் முகாம்களைச் சேர்ந்த படையினர் செம்பியன் பற்று, நெல்லியான், மாமுனைப் பகுதிகளில் நகர்வுகளை மேற்கொண்டனர்.

அந்த நகர்வுகளுக்கு எதிராக புலிகள் முறியடிப்பு தாக்குதல் நடத்தியிருந்தனர். மோட்டார்கள் மூலமும் தாக்குதல் நடத்தினர்.

இதன் பின்னர் படை நகர்வுகள் நிறுத்தப்பட்டன. புலிகள் தற்போதும் அப்பகுதிகளில் நிலைகொண்டுள்ளனர்.

இதேபோல தென்மராட்சியிலும், வலிகாமத்திலும் புலிகளது கெரில்லா பிரதேசங்கள் இருக்கின்றன.

இப்பகுதிகளில் படையினர் பலத்தை திரட்டிக் கொண்டு செல்லும்போது புலிகள் அகன்றுவிடுகின்றனர். படையினர் திரும்பிச் சென்ற பின்னர் மறுபடி வந்து நிலை கொள்ளுகின்றனர்.

சூரியக்கதிரின் பின்னர் புலிகளுக்கு உணவு கொடுக்கக்கூட குடாநாட்டில் பலரும் பயந்தனர்.

குடாநாடு படையினரிடம் சென்றதால் ஏற்பட்ட நம்பிக்கையீனங்களால் புலிகளுக்கு ஆதரவும் குறைந்திருந்தது.

தற்போது அந்நிலை மாறியுள்ளது. புலிகளுக்கு துணிந்து உதவும் நிலை மறுபடி தோன்றியுள்ளது.

செம்மணி புதைகுழிகளும், குடாநாட்டில் சீருடையினரின் நடவடிக்கைகளும் மாபெரும் மனமாற்றம் ஒன்றை ஏற்படுத்தி இருக்கின்றன.

செம்மணி புதைகுழியும், ராஜபக்ஷவின் வாக்குமூலங்களும் படையினர் தொடர்பான அந்நிய மனப்போக்கை ஆணியடித்ததுபோல குடாநாட்டு மக்களிடம் பதித்துவிட்டது.

எனவே குடாநாட்டில் பனை வடலிகளுக்குள் மட்டுமல்ல, மக்களுக்கு உள்ளேயும் புலிகள் பதுங்கி இருக்கின்றனர்.

இதனால் குடாநாட்டில் எங்கு வேண்டுமானாலும் புலிகள் தாக்கலாம் என்ற நிலமை இருக்கிறது.

யாழ் குடாநாட்டில் நகர்ப்பகுதியில் புலிகள் நீண்ட பல மாதங்களாக தாக்குதல் எதனையும் நடத்தவில்லை. ஆனால் புலிகளது நடமாட்டம் தாராளமாக இருக்கிறது.

எனவே புலிகள் பதுங்குவது பாரிய இரை ஒன்றுக்காகவே என்றும் கருதப்படுகிறது.

***

திருமலையை சமாதான நகராக பிரகடனம் செய்துள்ளதால் அங்கு புலிகள் தாக்குதல்களை தீவிரப்படுத்துவார்கள் என்று 'முரசு' கூறியிருந்தது அல்லவா.

சமீபத்தில் பரவலான தாக்குதல்கள் திருமலை மாவட்டம் எங்கும் நடந்துள்ளன. சமாதான நகர் என்ற பிரகடனத்துக்கு எதிர்ப்புக் காட்டும் வேட்டோசைகள் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

வடக்கு-கிழக்கில் யுத்தம் நடந்து கொண்டிருக்கையில், திருமலையை மட்டும் சமாதான நகராக்குவது என்பது கேலிக்குரிய ஒன்றுதான்.

திருமலையில் துறைமுக அபிவிருத்தி உட்பட பல்வேறு திட்டங்கள் வெளிநாட்டு உதவிகளுடன் நடத்தப்பட இருக்கின்றன.

இத்திட்டங்களில் பணியாற்ற என்று மேலும் தென்னிலங்கை வாசிகள் திருமலையில் குடியேறவும் செய்யலாம்.



வன்னியில் பாதைத் தடைக்கு எதிரான எழுச்சி

ஏற்கனவே உள்ள குடியேற்றங்களுக்கும், இனிமேல் நடக்க உள்ள குடியேற்றங்களுக்கும் உலக அங்கீகாரம் பெறுகின்ற புத்திசாலித்தனமான நடவடிக்கைதான் சமாதான நகர் பிரகடனம் என்று புலிகள் நினைக்கிறார்கள்.

இதனை கருத்தில் கொண்டே திருமலை மாவட்டத்தில் தாக்குதலை தீவிரப்படுத்தும்படி அம் மாவட்ட தளபதிக்கு பிரபாகரன் உத்தரவிட்டுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

திருமலையில் தாக்குதல்கள் நடத்த உதவியாக வன்னியில் இருந்து அணி ஒன்றும் பிரபாகரனால் அனுப்பிவைக்கப்பட்டது.

திருமலை மாவட்ட புலியணியும், வன்னியில் இருந்து வந்த அணியும் இணைந்தே 12.09.99 அன்று மூதூர் ஷாபி நகர் பொலிஸ் நிலையத்தை தாக்கினார்கள். மூதூரில் இருந்து மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதுதான் ஷாபி நகர்.

இரவு 12.30 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் தமது தரப்பில் நான்கு பேர் பலியானதாகவும், பதினைந்து பேர் காயமடைந்ததாகவும் பாதுகாப்புத் தரப்பு கூறியிருந்தது. இந்த பொலிஸ் நிலையம் மூன்றுமணிநேரம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

பெருமளவு ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலில் பலியான இளம் கதிர், புலிகளின் தளபதி தேவனின் உதவியாளர்களில் முக்கியமானவர்.

இத்தாக்குதலின் பின்னர் மூதூரிலும், அன்புவழி புரத்திலும் பரவலான தாக்குதல்கள் புலிகளால் நடத்தப்பட்டுள்ளன.

இத் தாக்குதல்களில் புலிகளது தரப்பில் இழப்புக்கள் ஏற்படவில்லை.

01.10.99 அன்று திருமலை அன்புவழிபுரம் பொலிஸ் காவல்நிலை புலிகளால் தாக்கியளிக்கப்பட்டது. பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கொல்லப்பட்டார். நான்கு பொலிசார் காயமடைந்தனர்.

முதலில் காவல் நிலைமீது கைக்குண்டுகள் வீசப்பட்டன. கைக்குண்டுகள் வெடித்ததும் பொலிசார் பதுங்கி நிலை எடுக்க முனைந்த போது, புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி காவல் நிலையத்தை நோக்கி முன்னேறினார்கள்.

இதனால் அங்கிருந்த பொலிஸார் காவல் கோபுரத்தைக் கைவிட்டு பின் நகர்ந்தனர். காவல் கோபுரத்தை கைப்பற்றிய புலிகள் நேரக் கணிப்பு குண்டொன்றையும் அதில் பொருத்தி விட்டுச் சென்றனர்.

குறிப்பிட்ட பகுதிக்கு பொலிசாரும், படையினரும் வரும்போது வெடிக்கக் கூடியதாகவே குண்டு பொருத்தப்பட்டது. ஆயினும் அவர்கள் செல்வது தாமதமாகியதால் குண்டு முன்னரே வெடித்துவிட்டது.

புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்ட காவல் கோபுரம் இருந்த பகுதிதான் முக்கியமானது.

திருமலையை சமாதான நகராக பிரகடனம் செய்து அமைச்சர்கள் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்ட சமாதான வளைவுக்கு எதிரே இருந்த காவற்கோபுரமே புலிகளால் தகர்க்கப்பட்டது.

இத் தாக்குதலுக்கு எல்.ப் லொறி ஒன்றிலேயே புலிகள் சென்றனர். பின்னர் அந்த லொறி அன்பு வழிபுரம் கலைமகள் வித்தியாலயத்திற்கு அருகே கைவிடப்பட்டிருந்தது.

தற்போது அதன் உரிமையாளர் சாரதி, கிளீனர் ஆகியோரை பொலிசார் பிடித்து வைத்துள்ளனர். அவர்களிடம் இருந்து புலிகள் லொறியை பறித்துச் சென்றிருந்தனர்.

அவ்வாறு இருந்தும் தடுத்துவைத்து விசாரிக்கப் படுகிறார்கள்.

இத் தாக்குதலுக்கு முன்பு 28.09.99 அன்றும் திருமலை மாவட்டம் கந்தளாயில் இராணுவ ரோந்து அணிமீது புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

கந்தளாய் இராணுவ முகாம் அருகே பதுங்கியிருந்த புலிகளே தாக்குதல் தொடுத்தனர்.

இத் தாக்குதலில் நான்கு படையினர் பலியானார்கள். இருவர் கரயமடைந்தனர்.

வடக்கு-கிழக்கு முழுவதற்கும் சமாதானத்தை ஏற்படுத்தாது நாட்டின் எந்தவொரு பகுதியிலும் சமாதானம் நிலவமுடியாது. அப்படிக் காண்பிக்கவும் புலிகள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதையே திருமலை தாக்குதல்கள் வெளிப்படுத்துகின்றன.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

# அதிரடி அப்பாத்துரை



***தமிழ் மாணவர்களுக்கு*** *சிங்களமும், சிங்கள மாணவர்களுக்கு தமிழும் கற்றுக் கொடுக்கப்போவதாக தமிழுக்கு தலைமுழுக்குப் போடுவதற்கான முயற்சிகள் நடக்குதல்லோ? இதுபற்றி பேராசிரியர் ஒருவர் கூறிய கருத்து இது: "சிங்கள மாணவர்களுக்கு தமிழ் கற்பிப்பது இருக்கட்டும். முதலில் அரச மட்டக் காரியங்களில் நடக்கும் தமிழ்க் கொலைக்கு முடிவு கட்டட்டும் பார்க்கலாம். தமிழ்ப் பிள்ளைகளுக்கு சிங்களம் படிப்பித்துப் போட்டால் தமிழை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியமே இருக்காதல்லோ? அதுதான் சூத்திரம்!" என்றார் பேராசிரியர். பின்னே சோழியன் குடுமி சும்மாவோ ஆடும்?!*

***பிரிட்டிஷ் பிரதிநிதியை*** *தமிழ்க் கட்சிகளது பிரமுகர்கள் கொழும்பில் சந்தித்தவை. பிரேமை உள்ள சந்திரன் அந்தப் பிரதிநிதியிடம் அழாக் குறையாக முறையிட்டாராம். அவருக்கு சில தினங்களுக்கு முன்புதான் ரெண்டு எழுத்தாரிடம் இருந்து எச்சரிக்கைக் கடிதம் வந்துள்ளதாம். அதைத்தான் முறையிட்டாராம்.*

***கிழக்கின் தனித்துவக்*** *கட்சித் தலைவர்மீது அதிகாரத் தரப்பார் கடும் அதிருப்தியில் உள்ளனராம். அவருக்கும் ஜனநாயகக் கட்சியினருக்கும் இடையே கடும் மோதல் நடக்குதல்லோ? அதிகாரத் தரப்பார் பலர் 'விடாதேயுங்கோ, அவர் உப்பிடித்தான் மிரட்டுவார், வெளியேறமாட்டார்' என்று ஜனநாயகக் கட்சித் தலைவரிடம் கூறியுள்ளனராம். சபாஷ், சரியான போட்டி!*

***முன்னாள் முதல்வரான*** *தமிழ்க் கட்சித் தலைவருக்கு அதிகாரத்தரப்பு பல உதவிகளை வழங்கியுள்ளதாம். இதனால் அவரது எதிர்த்தரப்பு கடுப்பில் இருக்கிறதாம். இரு தரப்புக்குமே போட்டி- எதிலே தெரியுமோ? அதிகாரத் தரப்பிடம் இருந்து அதிக உதவி பெறுவது யார் என்றுதான் போட்டி. இதில் தோல்விகண்ட மறுதரப்பு 'சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்ற கதையாக அதிகாரத் தரப்பை மெல்லச் சாடிவருகிறது. சாடுவது இருக்கட்டும்; அதிகாரத் தரப்பு கொடுத்த ஆலோசகர் பதவியை மட்டும் உதற மனமில்லையாம்!*

***யாழ்ப்பாணத்தில் உள்ள*** *வெளிநாடுகளில் உள்ளோரின் காணி, வீடுகளை பலரும் சொந்தம் கொண்டாடி, பிடித்து வைத்திருப்பது தெரிந்த கதைதானே? இப்போது இன்னொரு காரியமும் நடக்குதாம். தாங்கள் காணியை வாங்கியதாக கள்ள உறுதி தயாரிக்கும் வேலைகளும் நடக்குதாம். பல காணிகளது தாய் உறுதிகள் தொலைந்து போனது இந்த சுத்துமாத்துக்கு தோதாக இருக்குதாம். இதனைப் பற்றி யாழ் பத்திரிகையிலும் செய்தி வந்திருக்குது.*

***புதுக்குடியிருப்பு சம்பவத்துக்கு*** *நஷ்டஈடு கொடுக்கப் போவதாகக் கூறியது உலகின் காதுகளுக்கு கூடைக்கணக்காக பூவைத்தமாதிரித்தான். "இலக்குத் தவறாமல் போட்டனாங்கள்" என்று கூறியவரே, உண்மை என்னவென்று ஆராயலாம் என்று கூறுமளவுக்கு 'கோணகல' சம்பவம் நெருக்கடியைக் கொடுத்திருக்குது. போய்ப் பார்க்கக் கூடிய இடமல்ல என்பதால் உண்மையை அறிய முடியவில்லையாம். நல்லது, மட்டக்களப்பு களுவங்கேணியில் நடந்ததைக்கூடத் தப்பாகத்தான் சொல்லியிருக்கினம். அங்கு நடந்துபோயே உண்மையை அறிந்து சொல்லியிருக்கலாம்தானே?*

***செம்மணியில் எடுத்த*** *எலும்புகளை ஆராய நிபுணர்கள் வந்திருக்கினம். முக்கியமான விஷயம் யாதெனில், செம்மணியில் நடந்த முடிமறைப்புக்களை ஆராயவல்லோ நிபுணர்கள் அப்போதே வந்திருக்க வேணும்? அதுக்குக் கூப்பிடாமல் சமாளித்துப்போட்டு, இப்போது எலும்புகளை ஆராய அனுமதித்திருக்கினம். வெளிநாட்டு நிபுணர்கள் ஆராய்ந்தவை என்று கூற வசதியாக இருக்குமல்லோ? ஆனால் ஆராய வேண்டிய முக்கியமானதை ஆராயவில்லையே! அது யாருக்குத் தெரியப்போகுது.*

***வெளிநாட்டு விடயங்களுக்கு*** *பொறுப்பானவர் பொல்லைக் கொடுத்து அடி வாங்கிக் கொண்டிருக்கிறார். அடி என்றால் அடி செம்மையான அடி. வெளிநாடுகள் பலவற்றில் நுளம்பும், மலேரியாவும் எப்போதோ ஒழிக்கப்பட்டுவிட்டது. நம்நாடு போன்ற ஊத்தை பெருக்கும் சில நாடுகளில்தான் நுளம்புகள் ராஜ்ஜியம். இதுகூட அவருக்குத் தெரியவில்லையே! வெளிநாட்டில் எங்கெங்கு புலி இருக்குது? என்ற விபரம் தேடுவதுடன், நுளம்பு எங்கெங்கு இருக்கிறது என்ற விபரத்தையும் இனிமேல் திரட்டவேண்டியிருக்குமாம்!*

***இந்தவாரப் பொன்மொழி:***

> "சண்டையிடும்போது
> பணக்காரன்
> தன் முகம் கிழியாமல்
> இருக்கக் கவலைப்படுவான்;
> ஏழையோ தன் உடை
> கிழியாமல் இருக்கக்
> கவலைப்படுவான்!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

254



# படைக்குள் ஏற்பட்ட அதிகாரப் போட்டிகள்

அநுராதபுரம் மாவட்டத்தில் தந்திரிய மலைப்பகுதியில் சிறீலங்கா இராணுவ முகாம் ஒன்று இருந்தது.

இந்த முகாமைத் தாக்குவதற்கான தகவல் சேகரிப்பில் புலிகள் ஈடுபட்டனர். அநுராதபுரத்தில் முகாம் இருந்ததால் புலிகளது தாக்குதலை பெரிதாக எதிர்பார்க்கவில்லை.

ஞாயிற்றுக்கிழமை மாலை நேரத்தில் புலிகளது அணிகள் முகாம்மீது தாக்குதலைத் தொடுத்தன.

முதலில் முகாமின் முன்பகுதிக் காவலரண்கள்மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. காவலரண்கள் புலிகளின் கையில் வீழ்ந்தன.

அதேநேரம் முகாமில் உள்ள படையினர் உஷாராகிவிட்டனர். பதில் தாக்குதலில் ஈடுபட்டனர். கடும் சண்டை மூண்டது.

புலிகள் முகாம் நோக்கி முன்னேற முடியவில்லை. அதனால் தாம் கைப்பற்றிய காவலரண்களை குண்டுவைத்து தகர்த்துவிட்டுத் திரும்பினார்கள்.

இச்சண்டையின்போது இராணுவத்தினர் பத்துப்பேர்வரை பலியானார்கள். சிலரைக் காணவில்லை என்றும் படைத்தரப்பு கூறியது. பதினாறு படையினர் அனுராதபுரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காவலரணில் இருந்து ஆயுதங்கள் பலவும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் இழப்பு ஏதுமில்லை.

## மாற்றங்கள்

இக்காலகட்டத்தில் படைத்தரப்புக்குள் ஏற்பட்ட அதிகார மாற்றங்களை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.


யோகி-பிரபா-பாலசிங்கம்

ஆயுதப்படைகளைக் கட்டுப்படுத்தும், கட்டளையிடும் முறைகளில் புதிய மாற்றங்களை ஜனாதிபதி பிரேமதாசா அறிவித்தார். வர்த்தமானி மூலம் இந்த மாற்றங்கள் அறிவிக்கப்பட்டன.

அதுவரை கூட்டுப்படை தலைமையகமே இராணுவ நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்தது.

இந்தக் கூட்டுப்படை தலைமையகத்திற்கு ஜெனரல் ஹமில்டன் வணசிங்க பொறுப்பாக இருந்தார். போர்முனையில் உள்ள முப்படைகளும், தளபதிகளும் ஹமில்டன் வணசிங்காவின் கட்டளையில் தங்கியிருந்தனர்.

1987இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்போது கைவிடப்பட்டிருந்த கூட்டுப்படை தலைமையகம், 1991ம் ஆண்டில் மறுபடி புத்துயிர் பெற்றது. அதன் பொறுப்பும் அதிகாரங்களும் ஹமில்டன் வணசிங்காவிடம் தரப்பட்டன.

இராணுவத் தளபதியாக இருந்த ஹமில்டன், ஜனாதிபதி பிரேமதாசாவின் நம்பிக்கையைப் பெற்றவர்.

ஹமில்டன் இராணுவத் தளபதியாக இருந்து ஓய்வு பெற்றால், அடுத்த தளபதி யார் என்று சர்ச்சை எழுந்தது.

சிசில் வைத்தியரட்ன, டென்சில் கொப்பேக்கடுவ ஆகியோரது பெயர்கள் அடிபட்டன.

இறுதியில் மேஜர் ஜெனரலாக இருந்த சிசில் வைத்தியரட்ண லெப்டினன்ட் ஜெனரலாக பதவி உயர்வு பெற்று இராணுவத் தளபதியானார்.

டென்சில் கொப்பேக்கடுவ சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சார்பானவர் என்று கருதப்பட்டதால், பிரேமதாசாவுக்கு அவரைப் பிடிப்பதில்லை.

விடுதலைப் புலிகளோடு பேச்சு நடந்த காலத்தில், புலிகளுக்குக் கொடுத்த ஆயுதங்கள் பற்றிய தகவல் எதிர்க்கட்சிக்கு கிடைத்திருந்தது.

தகவல்களைக் கொடுத்தவர் டென்சில் கொப்பேக்கடுவ என்றுதான் பிரேமதாசா நம்பினார். அதில் உண்மையும் இருந்தது.

டென்சில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடும் என்னும் கதைகளும் அப்போது உலாவின.

சிசில் வைத்தியரட்ண பிரேமதாசாவுக்கு வேண்டப்பட்டவர். ஜே.வி.பி. கிளர்ச்சி நேரத்தில் கடும் போக்குடன் நடந்துகொண்டவர்.

அதனால் சிசிலை இராணுவத் தளபதியாக்கிய பிரேமதாசா, ஹமில்டனை கூட்டுப் படைத் தளபதியாக நியமித்தார்.

ஹமில்டன் மென்மையான போக்காளர். சிசில் கடும் போக்காளர். இதனால் இருவருக்கும் இடையே அடிக்கடி முரண்பாடுகள் ஏற்பட்டன.

ஹமில்டனின் உத்தரவுகளை சிசில் அலட்சியம் செய்ததும் உண்டு. பிரேமதாசாவின் ஆதரவு பெற்றவர் சிசில் என்பதால் ஹமில்டன் விட்டுக் கொடுத்துப் போக வேண்டியிருந்தது.

அதேசமயம் ஹமில்டனுடன் டென்சில் நல்லுறவைக் கொண்டிருந்தார். இதனையும் சிசில், பிரேமதாசாவின் காதில் போட்டுவைத்தார்.

'வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது.' என்று ஹமில்டன் வெளிப்படையாகவே கூறிவந்தார்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பாரிய கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

அதனால் படைகளைக் கட்டுப்படுத்தும் பொறுப்பில் மென்போக்காளர் என்று கருதப்படும் ஹமில்டன் இருப்பதையே பிரேமதாசா அப்போது விரும்பினார்.

கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்தை பொறுப்பேற்ற ஹமில்டன் புதிய தந்திரோபாயத்தைக் கடைப்பிடிக்கப் போவதாக அறிவித்தார்.

புலிகள்மீது தாக்குதல் நடத்தும் அதே வேளை, பொதுமக்கள்மீது காருண்யமாக நடந்து கொள்வது என்பதே அவரது தந்திரோபாயம்.

ஹமில்டன் வணசிங்கா படையினர் மத்தியிலும் இதனைப் பற்றி பலமுறை எடுத்துக் கூறினார். படை அதிகாரிகளை அழைத்து புதிய தந்திரோபாயம் பற்றியும், அதனைப் படைவீரர்களுக்கு விளக்கும் படியும் கூறியிருந்தார்.

ஆனால் இத் தந்திரோபாயம் பேணப்படவில்லை. தமிழர்கள் என்றால் புலிகள் என்று கருதும் மனப்போக்கு மாறவில்லை.

புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்கள் காரணமாக 1992இன் ஆரம்பத்தில் கூட்டுப் படைத் தலைமைச் செயலகம் நெருக்கடியில் சிக்கியது.

1992 இன் ஆரம்பத்தில் கிழக்கில் பல அதிரடித் தாக்குதல்களைப் புலிகள் நடத்தியிருந்தனர்.

தரையில் மட்டுமன்றி கடலிலும் பல தாக்குதல்கள் புலிகளால் நடத்தப்பட்டன.

## குற்றச்சாட்டு

புலிகளது துல்லியமான தாக்குதல்களால் படையினருக்கு ஏற்பட்ட பின்னடைவுகளை ஹமில்டன் வணசிங்காவினதும், கூட்டுப்படைத் தலைமையகத்தினதும் தோல்வியாக இராணுவத் தளபதி சிசிலும், அவரது ஆதரவாளர்களும் பிரசாரம் செய்தனர்.

தொடர்ந்து ஏற்படும் தோல்விகளுக்கு இராணுவத் தந்திரோபாயத்தில் உள்ள குறைகளும், கூட்டுப்படைத் தலைமையகத்திடம் அதிகாரங்கள் குவிந்து கிடப்பதுவுமே காரணம் என்று குற்றம் சாட்டினார்கள்.

அதுமட்டுமன்றி ஹமில்டனின் நிர்வாகத்தில் பல உயர் இராணுவ அதிகாரிகள் போர்முனைக்குச் செல்லாமல் கொழும்பில் தங்கியிருப்பதாகவும், இதனால் போர்முனையில் தொடர்ந்து ஈடுபடும் அதிகாரிகளும், இராணுவத்தினரும் சலிப்படைந்துள்ளதாகவும் பிரச்சனைகள் கிளப்பப்பட்டன.

இவற்றை ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளுக்கும் நைசாக கூறினார்கள். அவையும் அவற்றைப் பெரிதாக வெளியிட்டன.

சிங்களப் பேரினவாதிகளுக்கு ஹமில்டனின் மென்போக்கு பிடிக்கவில்லை. இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் தமிழர்களின் உயிர் உடமைகள் அழிவது பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. வெற்றி பெற்றால் போதும்.

இதனால் ஹமில்டனுக்கு எதிராக கடும் விமர்சனங்களைப் பத்திரிகைகளும் வெளியிட்டன.

ஜனாதிபதி பிரேமதாசாவும் தனது நிலைப்பாட்டில் இருந்து மாறத் தொடங்கினார்.

தனக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டு வந்தவர்கள், இராணுவத்துக்குள்ளும் கொப்பேக்கடுவ போன்றோரின் துணையுடன் தனக்கு எதிராகச் சதி செய்யலாம் என்று நினைக்கத் தொடங்கிவிட்டார்.

தென்னிலங்கையில் தனக்கு எதிராக அரசியல் நெருக்கடி ஏற்பட்டால் சமாளிக்கக் கூடிய விதமாகவும், தனக்கு உதவக் கூடியவருமான சிசிலின் கையைப் பலமாக்க விரும்பினார்.

அதுதவிர தென்னிலங்கையில் எதிர்க் கட்சிகள் யுத்த தோல்விகள் குறித்துப் பெரும் பிரசாரம் செய்து வந்தன.

இதனால் வடக்கு-கிழக்கு யுத்தத்தில் சில வெற்றிகளையாவது பெறக்கூடிய கடும் போக்குள்ள சிசிலின் கைகளை சுதந்திரமாக செயற்பட வைக்கவும் முடிவு செய்தார்.

இவற்றின் பின்னணியிலேயே கூட்டுப்படை நடவடிக்கை தலைமையக அதிகாரங்கள் மீளப்பெறப்பட்டன.

முப்படைகளின் தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும் அதிகாரங்களைப் பெற்றனர். அவர்கள் தாமாக முடிவுகளை எடுத்துச் செயற்பட அதிகாரம் கிடைத்தது.

புதிதாக தேசிய பாதுகாப்புச் சபை ஒன்று அமைக்கப்பட்டது. இந்தச் சபையில் முப்படைத் தளபதிகளும், பொலிஸ் மா அதிபரும் அங்கம் வகித்தனர்.

இந்த தேசிய பாதுகாப்புச்சபை வகுக்கும் யுத்த தந்திரங்களில் கூட்டுப்படைத் தலைமையகம் எந்தத் தலையீடும் செய்ய முடியாது.

ஆனால் யுத்த தந்திரோபாயம் தொடர்பாக ஆலோசனைகளை வழங்கலாம். இந்த ஆலோசனைகள் தொடர்பாக தேசிய பாதுகாப்புச் சபையே இறுதி முடிவு எடுக்கும்.

இந்த மாற்றங்கள் முப்படை அதிகாரிகளுக்குள் ஏற்பட்ட அதிகாரப் போட்டிகளை மறைமுகமாக வெளிப்படுத்தின.

இராணுவத்திற்குள் மட்டுமன்றி அரசியலிலும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணவின் கை மேலோங்கியது.

பிரேமதாசாவுக்காக சிசில் எதை வேண்டுமானாலும் செய்வார் என்று பிரேமதாசாவின் அரசியல் எதிரிகள் பயந்து போனார்கள்.

ஜே.வி.பி. கிளர்ச்சி நேரத்தில் பலரை உயிரோடு டயர்களில் போட்டு எரித்த சம்பவங்களில் சிசிலின் பெயரும் கூறப்பட்டது.

இதனால் சிசில் என்றாலே பொல்லாதவர் என்று பயம் இருந்தது. சிசிலும், பிரேமதாசாவும் சேர்ந்து திட்டம் போட்டால் என்னாகும்? என்று நினைத்தே அரசியல் பிரமுகர்கள் பயந்து நடுங்கினார்கள்.

எதிர்முகாமில் இருந்த அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்தோருக்கும் பிரேமதாசாவிடம் பயம்.

முப்படைத் தளபதிகளிடம் அதிகாரம் குவிந்து, இராணுவத் தளபதி சிசில் சுதந்திரமாகச் செயற்பட்டும்கூட போர்க் களத்தில் திருப்பம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை.

அன்று மட்டுமல்ல இன்றும் போர்முனைத் தோல்விகளுக்கு உயர் அதிகாரிகளை குறைகூறுவதும், இராணுவத் தளபாடங்கள்மீது பழி போடுவதும்தான் படைத்தரப்பின் வழக்கமாக இருக்கிறது.

இதனால் அடிக்கடி கட்டமைப்புக்களில் மாற்றங்கள் செய்கின்றனர். படை அதிகாரிகளை மாற்றுகின்றனர். புதிய புதிய இராணுவத் தளபாடங்களை வாங்கிக் குவிக்கின்றனர்.

ஆனாலும் புலிகளை வெற்றிகொள்ள முடியாமல் இருக்கிறது. இது ஏன்-எப்படி? என்ற கேள்வியே படை அதிகாரிகளை தொடர்ந்து ஆட்டிப்படைக்கிறது.


ஹமில்டன்

## பெண்புலிகள்

1992 இல் பெண்புலிகள் பல தாக்குதல்களில் பங்கு கொண்டனர். விடுதலைப் புலிகளின் பெண்கள் படையணி தொடர்பாக அரச படை அதிகாரிகள் பலர் வியப்புத் தெரிவித்ததாக 'ஐலண்ட்' பத்திரிகை கூறியிருந்தது.

இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி அப்பத்திரிகை பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:

"புலிகள் இழப்புக்களைச் சந்தித்தாலும் அவர்களது மனோதிடம் உயர்ந்த நிலையிலேயே உள்ளது. களப்போரில் புலிகள், குறிப்பாக பெண் புலிகள் வியத்தகு போராடும் திறனும், உறுதியும் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

இராணுவ அதிகார பீடத்தில் அண்மையில் செய்யப்பட்ட மாற்றங்கள் சில இராணுவப் பிரிவினரிடம் விரக்தியையும், கசப்பையும் உருவாக்கியுள்ளது.

நிலமையைக் கையாள்வதில் ஏற்பட்டுள்ள மனக்கசப்பு அதிகாரிகள் மட்டத்தில் பெரும் இராஜினாமாக்களுக்கும், படையினரின் மனோநிலைப் பாதிப்புக்கும் வழிகோலலாம் என்று கருதப்படுகிறது."

மேற்கண்டவாறு ஐலண்ட் தெரிவித்திருந்தது.

புலிகளது பலம் மேலோங்குகிறது. படையினரோ உட்பூசல்களால் பலவீனமாகின்றனர் என்று எச்சரிக்கவே மேற்படி செய்தியை ஐலண்ட் வெளியிட்டிருந்தது.

## அமெரிக்கா கோரல்

இந்திய இராணுவத்திற்கு நவீனரக போர் ஆயுதங்களை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. அப்போதைய இந்திய வெளிநாட்டமைச்சர் சரத் பவார் அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார்.

இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்ட அமெரிக்கா இந்தியாவிடம் கோரியது என்ன தெரியுமா?

இந்தியப் படைகள் இலங்கையில் விடுதலைப் புலிகளுடன் நடத்திய போர் பற்றிய அனுபவங்களை தம்மோடு பகிர்ந்து கொள்ளுமாறுதான் அமெரிக்கா கோரியது.

இந்த அனுபவங்களைப் பெறுவதற்காக அமெரிக்காவின் இராணுவக் குழு ஒன்று இந்தியா சென்றிருந்தது.

அந்த அனுபவங்களைப் பெறுவதுமூலம் அவற்றுக்கு எதிரான போர்முறைகளை உருவாக்குவது தான் அமெரிக்காவின் நோக்கமாகும்.

(தொடர்ந்து வரும்)

# மறுபிறவி

**ரா**ஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன்முறையீட்டில் விடுதலையானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள், விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.

**ந**ளினியிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம் இந்த வழக்கில் மிக முக்கியமானது அதில்..

ஒரு சர்தார்ஜியை கண்டதும் சுபா முஷ்டியை மடக்கிக்கொண்டு ஆவேசமாக பாய்கிறார். நளினி அவரைத் தடுக்கிறார்.

சுபாவின் கோபம், நளினியின் வாக்குமூலத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது ராஜீவ் கொலை வழக்கில் A-1 குற்றவாளியான நளினியிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலம் முழுவதும் ஆங்கிலத்திலேயே உள்ளது. எம்.ஏ.பட்டதாரியான நளினி, ஆங்கிலத்தில் வாக்குமூலம் அளித்தது ஆச்சரியமானதல்ல.

அந்த வாக்குமூலத்தில், ராஜீவ் கொலைக்கு முன்பாக தனு, சுபாவுடன் தான், எங்கெங்கே சென்றுவந்தேன், எத்தனை திரையரங்குகளில் படம் பார்த்தேன், என்பதையெல்லாம் விரிவாகத் தந்திருக்கிறார் நளினி.

வாக்குமூலத்தின் ஒரு பகுதியில், "ஒரு சமயம் நான், தனு, சுபா மூவரும் ஷாப்பிங் சென்றிருந்தபோது, ஒரு சர்தார் (சீக்கியர்) போய்க்கொண்டிருந்தார்.

அப்போது நான் சுபாவின் கையை பிடித்தபடி நடந்து கொண்டிருந்தேன். அவள் மிகவும் பதட்டமானதைத் தொடர்ந்து அவள் கை இறுக்கியது. அவள் அந்த சர்தார்ஜியை நோக்கிச் சென்று தன் வெறுங்கையால் ஓங்கித் தாக்க முயன்றாள்.

சர்தார்ஜி மேல் சுபாவுக்கு கோபம் வரக்



காரணம், இலங்கைக்கு சென்ற இந்திய அமைதி காக்கும் படையில் சர்தார்ஜிகள்தான் நிரம்பியிருந்தனர்" என்று வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அமைதிகாக்கும் படை, இலங்கைக்கு சென்றபோது அதில் நிறைந்திருந்த சர்தார்ஜிகள் நடந்துகொண்ட விதம் சுபா போன்ற ஈழப் பெண்ணுக்கு கோபத்தை உண்டாக்கியதையும், அதன் விளைவாக உருவான பழி உணர்ச்சியின் காரணமாக, சாலையில் பார்த்த ஒரு சர்தார்ஜியை தாக்க முற்பட்டதையும் வாக்குமூலமாக பெறுவதன் மூலம் இந்தக் கொலைச் சதியின் நோக்கம் பற்றி ஒரு முடிவுக்கு வரலாம் என்பதே சி.பி.ஐ.யின் வியூகம் என்றனர் வழக்கறிஞர்கள்.

இத்தகைய வாக்குமூலங்களைப் பெறுவதற்காக, 'மல்லிகை'யில் மட்டுமின்றி, பூந்தமல்லி சிறப்பு முகாமிலும் கடுமையான விசாரணைகள் தொடர்ந்தன.

பூந்தமல்லி சிறையில் இரவு நேரங்களில் நிறைய படிப்பதையும் எழுதுவதையும் நான் வழக்கமாகக் கொண்டிருந்தேன். அந்த அமைதியான நேரம், எனது மனத்துயரத்திற்கு ஆறுதல் மருந்து தடவிக்கொண்டிருந்தது.

ஒரு இரவு நேரத்தில்... சிறை வளாகத்தின் அமைதியை கிழித்துக்கொண்டு அலறல் சத்தம் கேட்டது. எனது செல்லில் இருந்து எட்டிப்பார்த்தேன். ராபர்ட் பயாஸை கடுமையாக விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அவர், அடி தாங்க முடியாமல் அலறியபடி இருந்தார்.

விசாரணை முறையும் அதனால் ஏற்பட்ட அலறலும் எனக்கு நெஞ்சுவலியை உண்டாக்கி விட்டது. ஒரு கையால் நெஞ்சை அழுத்திப் பிடித்துக்கொண்டு, சிறைஅதிகாரி ஒருவரை கூப்பிட்டேன்.

"அலறல் சத்தம் என்னை ரொம்ப பாதிச்சிருக்கு. அந்தப் பையனின் நிலைமை ரொம்ப பரிதாபமா இருக்கு. விசாரணையின் கடுமையை கொஞ்சம் குறைக்கச்சொல்லுங்களேன்" என்றேன்.

"நாங்கள் தயார்... என்ன நடந்ததுன்னு உள்ளது உள்ளபடி அவனை சொல்லச் சொல்லுங்கள்" என்றார் அதிகாரி.

நான் பயாஸை பார்த்து, "ஏம்பா இப்படி கஷ்டப்படுறே... தெரிஞ்சதை சொல்லிடுப்பா" என்றேன்.

"எனக்கு எதுவும் தெரியாதுங்கய்யா" என்று பயாஸின் குரலில் பரிதாபம் தொனித்தது.

## சுபா சுந்தரம்

தகவல்களைப் பெறுகின்றவரை விசாரணையை நிறுத்துவதில்லை என்ற முடிவில் இருந்தார்கள் அதிகாரிகள். எனது உடல்நிலை மேலும் பாதிப்படைந்தது. என்னை சமாளித்தாக வேண்டிய நிலையில் இருந்த அதிகாரிகள், மாத்திரைகளை கொடுத்தனர். அதில் தூக்க மருந்தும் குறிப்பிட்ட சதவீதம் இருந்ததால் மெல்ல மெல்ல கண்கள் அயர்ந்தன. காதுக்குள் நுழைந்த அலறல் சத்தத்தின் அளவு கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது.

மறுநாள் காலையில் செல்லில் இருந்து வெளியே வந்தபோது, பயாஸைக் கவனித்தேன். அவர் கைவிரல்களுக்கு மருந்து போட்டுக்கொண்டிருந்தார். முகம் வீங்கியிருந்தது. உடம்பில் அங்கங்கே ரத்தம் கட்டியிருந்தது.

இந்தக் கொலை வழக்கில் சிக்கிய பலர், காலை நேரங்களில் தங்கள் காயங்களுக்கு மருந்து தடவிக்கொண்டிருந்ததை பலமுறை பார்த்திருக்கிறேன்.

வாக்குமூலங்களைப் பெறுவதற்காக கடைபிடிக்கப்பட்ட கடுமையான விசாரணை முறைகளால் எத்தனையோ பெயர்கள் இந்த வழக்கிற்குள் திணிக்கப்பட்டன.

என்னை எப்படியாவது இந்த கொலை வழக்கில் இணைக்க வேண்டும் என்பதற்காக இதே பாணியில் வாக்குமூலங்கள் பெறப்பட்டன. யாரிடமும் ஒரே வீச்சில் வாக்கு மூலம் பெறப்படவில்லை.

அடிக்கடி விசாரணை நடக்கும் ஒவ்வொரு விசாரணையிலும் ஒரு தகவல் கிடைக்கும் அவற்றை அவ்வப்போது பதிவுசெய்து கொண்டே இருந்தனர்.

ஒருவர் தருகிற தகவல் பற்றி அடுத்தவரிடமும் ரகசியமாக விசாரணை நடத்தி, அதே தகவல் குறித்து அவர் என்ன சொல்கிறார் என்பதையும் பதிவு செய்து கொண்டனர்.

நவீனத் தொழில் நுட்பமான கம்ப்யூட்டர் வசதிகளுடன் முழுமையாக வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது. ராஜீவ் கொலை வழக்கில் தான் குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து பெறப்படுகிற தகவல்கள் உடனுக்குடன் கம்ப்யூட்டரில் பதிவு செய்யப்பட்டன.

இறுதியில், ஒவ்வொருவரின் வாக்குமூலமும் தொகுக்கப்பட்டு, கையால் எழுதப்பட்டு, ஒவ்வொரு பக்கத்திலும் குற்றம் சாட்டப்பட்டவரின் கையொப்பம் பெறப்பட்டது.

இந்த வழக்கில் என்னை தொடர்பு படுத்தி பத்மா, பாக்கியநாதன், பேரறிவாளன் ஆகிய மூவரிடமிருந்தும் தடா சட்டத்தின்கீழ் வாக்குமூலம் வாங்கினர். ஒன்றுக்கொன்று முரண்பாடான இந்த மூன்று வாக்கு மூலங்களின் அடிப்படையில் என் கழுத்துக்கு கயிறு தயாரானது. மரணத்தின் வாசல்வரை என்னைத் தள்ளிச்சென்ற அந்த சம்பவத்தின் ஆணிவேர் எது தெரியுமா?

(தொடர்ந்து வரும்)





படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது -இராஜதந்திரி

# எட்டிக்குப் போட்டியான உளவு வலை!

மட்டக்களப்பில் ராசிக் கொல்லப்பட்டதோடு தமிழ்க் கட்சிகளுக்கு எதிரான புலிகளது தாக்குதல்கள் மறுபடி தீவிரம் பெற்றன.

ராசிக் கொலையை அடுத்து தமிழ்க் கட்சி உறுப்பினர்களுக்கு விடுதலைப் புலிகளால் அறிவித்தல் ஒன்றும் விடுக்கப்பட்டது.

தமிழ்க்கட்சிகளில் இருந்து விலகி தனிப்பட்ட வாழ்வில் ஈடுபடுமாறு புலிகள் கோரியிருந்தனர்.

இந்த அறிவித்தல் பலமுறை விடுக்கப்பட்ட பின்னரே வவுனியாவில் புளொட் முக்கியஸ்தர்கள் பலர் தீர்த்துக்கட்டப்பட்டனர். யாழ் குடாநாட்டில் ஈ.பி.டி.பி. பொறுப்பாளர் ஒருவரும் புலிகளால் கொல்லப்பட்டார்.

கொழும்பில் நீலன் திருச்செல்வமும் கரும்புலித் தாக்குதல் மூலம் அழிப்புக்கு உள்ளானார்.

இதனையடுத்து புளொட்டின் உபதலைவர் மாணிக்கதாசனும் வவுனியாவில் நுட்பமான கிளைமோர் தாக்குதலில் அழித்தொழிக்கப்பட்டார்.

மட்டக்களப்பில் படையினருக்கு உளவுத் தகவல் வழங்கிவந்த முன்னாள் இயக்க உறுப்பினர்கள் பலர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

<u>புலிகளது பகிரங்க அறிவித்தல் வெளியாகி மூன்று மாதகாலத்துக்குள் பல அழித்தொழிப்புக்கள் நடந்து முடிந்துள்ளன.</u>

தமக்கெதிராக அரசியல் ரீதியாவும், ஆயுத ரீதியாகவும், உளவு வலைப்பின்னலுக்கு உதவியாகவும் செயற்பட்ட முக்கியஸ்தர்களையே இந்த மூன்று மாதகாலத்தில் புலிகள் அழிப்புச் செய்துள்ளனர்.

புலிகளது அழித்தொழிப்பு நடவடிக்கையின் விளைவுகள், பல உண்மைகளை வெளிச்சம் போட்டுக் காண்பித்துள்ளன.

<u>நீலன் திருச்செல்வம் ஆயுதம் ஏந்திய ஒருவரல்ல: ஆனால், ராசிக், மாணிக்கதாசன் போன்றோரும், படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ்க்குழுக்களும் ஆட்சியாளருக்கும், இராணுவத்தீர்வு முனைப்புக்கும் செய்துள்ள சேவைகளைவிட, நீலனின் சேவை பன்மடங்கு என்பதே உண்மையாகும்.</u>

அதன் காரணமாகவே நீலன் மறைவு ஆட்சியாளருக்கு ஏற்படுத்திய அதிர்ச்சியை, மாணிக்கதாசன் பலியான சம்பவம் ஏற்படுத்தவில்லை. ஆட்சியாளரிடமிருந்து மாணிக்கதாசனுக்காக அனுதாபம் எதுவும் வெளிப்படவுமில்லை.

கனவான்களாகவும், மனித உரிமை வாதிகளாகவும் தம்மைக் காண்பித்தபடி, சுத்தமான ஆங்கிலத்தில் சர்வதேச அரங்கில் தமக்காகப் பேசக்கூடிய நீலன், சம்பந்தன் போன்றோருக்கே ஆட்சியாளர்கள் முன்னுரிமைகொடுத்து வருகின்றனர். அவர்களைப் பாதுகாப்பதில் அக்கறையாகவும் உள்ளனர்.

தற்போதுகூட கூட்டணி அலுவலகத்திற்கு கொழும்பிலும் பலத்த பாதுகாப்பு கொடுக்கப்பட்டுள்ளதுடன், சம்பந்தனுக்கு விசேட பாதுகாப்பும், குண்டு துளைக்காத காரும் ஜனாதிபதியின் பணிப்பின்பேரில் வழங்கப்பட்டுள்ளன.

நீலன் கொலை தொடர்பான விசாரணை அறிக்கையையும் இரகசியப் பொலிஸ் பிரிவிடம் ஜனாதிபதி கோரியிருக்கிறார்.

ஏனைய தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு இதுவரை மேலதிக பாதுகாப்போ, குண்டு துளைக்காத காரோ வழங்கப்படவில்லை.

விடுதலைப் புலிகளது தாக்குதலுக்கு இருமுறை இலக்கானவர் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா.

புளொட், ரெலோ, ஈ.பி. ஆர்.எல்.எஃப். தலைவர்களுக்கும் புலிகளது அச்சுறுத்தல் இருக்கிறது. இவ்வாறிருந்தும் இவர்களில் எவருக்கும் குண்டு துளைக்காத கார்களோ, கூட்டணிக்கு கொடுக்கப்பட்டுள்ளது போன்ற பாதுகாப்போ இதுவரை வழங்கப்படவில்லை.

<u>கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ்க்கட்சித் தலைவர்கள் அழிக்கப்படுவது பற்றி ஆட்சியாளரோ, படையினரோ கவலை கொள்ளவில்லை.</u>

தேவை கருதியே இவர்களைப் பயன்படுத்தி வருகிறார்களே தவிர, இவர்கள்மீது மதிப்போ, மரியாதையோ கொண்டிருக்கவில்லை.

ஆயுதம் ஏந்திப் போராடிய அமைப்புக்களை முன்னாள் குற்றவாளிகளைப் பார்ப்பதுபோன்றே அரசாங்கமும், படைத்தரப்பும் நோக்கிவருகிறது. பணத்தைக் கொடுத்தும், சில சலுகைகளைக் கொடுத்தும் இக்கட்சிகளை தமது கையில் வைத்திருப்பதும், தேவை முடிந்ததும் கைகழுவி விடுவதுமே ஆட்சியாளரது எண்ணமாகும்.

இத்தனைக்கும் நீலன் உட்பட கூட்டணியினர் எவரும் புலிகளை பகிரங்கமாகக் கண்டித்துப் பேசியதே கிடையாது. அரசும், புலிகளும் பேசவேண்டும் என்றே பகிரங்க அரங்குகளில் கூறிவந்தனர்; வருகின்றனர்.

ஆனால், ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எஃப். போன்ற கட்சிகள் பகிரங்கமாகவே புலிகளைக் கண்டித்துப் பேசி வருகின்றன.

அவ்வாறிருந்தும் புலிகளால் கூட்டணிக்குத்தான் அதிக ஆபத்து என்று ஆட்சியாளர் கருதுவதன் காரணம் என்ன? இக் கேள்விக்கான விடைதான் பல உண்மைகளை உணர்த்தி நிற்கிறது.

பகிரங்கமாகக் கூட்டணியினர் எதனைப் பேசினாலும், மறைமுகமாக அவர்கள் செய்துவரும் பணி எத்தகையது, எத்தனை முக்கிமானது என்பதை ஆட்சியாளர்கள் நன்கறிவார்கள்.

கூட்டணியில் அதிக வாக்குகள் பெற்றவர் ஜோசப் பரராஜசிங்கம். மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சமீபத்தில் ஒருமுறை புலிகள் எச்சரிக்கை விடுத்ததாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அவ்வாறிருந்தும் ஜோசப் பரராஜசிங்கத்துக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்படவில்லை. ஜனாதிபதியால் துப்பாக்கிக் குண்டு துளைக்காத கார் அனுப்பிவைக்கப்படவும் இல்லை.

<u>எனவே, கூட்டணிக்குள்கூட குறிப்பிட்ட சிலரைப் பாதுகாப்பதில் மட்டுமே ஆட்சியாளர்கள் அதிக அக்கறை காண்பித்து வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது.</u>

ஆட்சியாளர் தமிழ்க் கட்சி பிரமுகர்களுக்கு வழங்கும் பாதுகாப்பை வைத்தே ஆட்சியாளரின் அதிக அன்பைப் பெற்றவர்கள் யார் என்று அறிந்துகொள்ளலாம்.

அதிகக் கூடிய பாதுகாப்பு வழங்கப்பட்டதால் அவர் ஆட்சியாளருக்கு கட்டாயம் தேவையானவர் என்று அர்த்தமாகும். குறைந்தளவு பாதுகாப்பு வழங்கப்பட்டால், அவர் இல்லாமல் போனால்கூட ஆட்சியளருக்கு பெரிய நஷ்டமில்லை என்று அர்த்தமாகும்.

தமிழ்பேசும் தரப்பை இராணுவத்தீர்வு மூலம் பலவீனமாக்க ஆட்சியாளர்கள் கங்கணம் கட்டியுள்ளனர். இந்நிலையில் இன்றைய ஆட்சியாளர்களது அன்புக்கும், அபிமானத்துக்கும் பாத்திரமாக இருக்கும் தமிழ்பேசும் பிரமுகர்கள் எத்தகையவர்களாக இருப்பர் என்பதும் உற்று நோக்கப்படவேண்டியதேயாகும்.

சீனப் புரட்சியின் தலைவர் மா.ஓ. ஒருமுறை பின்வருமாறு கூறியிருந்தார்: <u>"எதிரி நம்மைப் போற்றுகிறான் என்றால், நாம் அவனுக்கு உண்மையான எதிரியாக இல்லை; நாம் நமது கொள்கையில் உறுதியாக இல்லை என்பதே அர்த்தமாகும்!"</u>

எனவே, புலிகளது தாக்குதல்களும் அதன் பிரதிபலிப்பாக வழங்கப்பட்டுவரும் முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் தமிழ் பேசும் பிரமுகர்களுக்கும், ஆட்சியாளருக்குமுள்ள நெருக்கத்தை அறிந்து கொள்ளக்கூடிய அளவு கோலாகவும் விளங்குகின்றன.

இன்னொரு முக்கியமான திருப்பமும் ஏற்பட்டுள்ளது. தமிழ்க் கட்சிகள்மீது ஆட்சியாளருக்கும், படையினருக்கும் ஏற்பட்டுள்ள சந்தேகமே அத் திருப்பமாகும்.

ஆயுதமேந்திய தமிழ்க் கட்சிகள்மீது எப்போதுமே ஒரு சந்தேகப்பார்வை ஆட்சியாளருக்கு இருப்பினும்கூட, அது பலத்த சந்தேகமாக இப்போது மாறியுள்ளது.

மட்டக்களப்பில் ராசிக் மீதான தாக்குதலும், வவுனியாவில் புளொட் மாணிக்கதாசன்மீதான தாக்குதலும் உள்ளிருந்து தகவல் பெற்று நடத்தப்பட்டவை என்பது படைத்தரப்புக்குத் தெரியவந்துள்ளது.

அதே சமயம் வவுனியாவில் புலிகளுக்கும் ரெலோவுக்கும் இடையே சில தொடர்புகள் உள்ளதாக மாணிக்கதாசன் உயிரோடு இருந்தபோது புகார் செய்திருந்தார்.



மாணிக்கதாசன் அவரது குழுவினருடன்

மன்னாரில் முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர் ஒருவர் புலிகளுக்கு உதவியதாக படைத்தரப்பு கண்டு பிடித்துள்ளது.

நீலன் கொலை தொடர்பாக தேடப்படும் புலிகளது உளவுப் பிரிவைச் சேர்ந்த எரிக் சுந்தரநாயகம் ஈ.பி.டி.பியின் கொழும்பு அலுவலகம் ஒன்றிலேயே சில காலம் தங்கியிருந்தார். அவரை புலி என்று தெரியாமலேயே ஈ.பி.டி.பியினர் தமது அலுவலகத்தில் வைத்திருந்தனர்.

இவற்றையடுத்தே தமிழ்க் கட்சிகளுக்குள் புலிகள் அதிகளவில் ஊடுருவி இருப்பதாக படைத்தரப்பு அதிகாரிகள் பகிரங்கமாகவே கூறியுள்ளனர்.

<u>மாணிக்கதாசனின் மறைவை அடுத்து புளொட்டுக்குள் ஏற்பட்ட உள் பிணக்குகளும் தமிழ்க் கட்சிகள்மீதான சந்தேக வலை மேலும் விரிவதற்கு வழிகோலியுள்ளன.</u>

மாணிக்கதாசன் அழிப்புக்கு புலிகள் உரிமை கோரவில்லை. அதேபோல தமது உள்பிரச்சனை காரணமாக புளொட் அமைப்பினரும், கொலைக்கு யார் காரணம் என்பதை ஆணித்தரமாக கூறாது தவிர்த்து வருகின்றனர்.

மாணிக்கதாசன் அணியினர் சித்தார்த்தன் அணியினரே தாசன் கொலைக்குக் காரணம் என்று கூறியுள்ளனர்.

புளொட்டின் மன்னார் பொறுப்பாளரும் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் ஒருவரும் இணைந்தே சதி செய்ததாக கூறியுள்ளனர். ஆனால் சித்தார்த்தன் அணியினர் ஹரிபாபுவும் அவர் ஆட்களும்தான் புலிகளோடு சேர்ந்து தாசனை ஒழித்துக்கட்டியதாகக் கூறுகின்றனர்.

வவுனியாவில் சித்தார்த்தன் அணியினர் தமது ஆளுமையை செலுத்துவதற்காக, ஹரிபாபு ஆட்களுக்குள் புலிகள் ஏராளமாக ஊடுருவியுள்ளதாக படைத்தரப்பிடம் புகார் செய்தனர்.

அந்தப் புகாரை நம்பியே வவுனியாவில் சித்தார்த்தன் தலைமையிலான புளொட்டை மாத்திரமே வைத்துக் கொண்டு, தாசனின் விசுவாசிகளை ஓரம்கட்ட படையினரும் உதவியுள்ளனர். ஹரிபாபுவை பிடித்து விசாரணை என்ற பெயரில் இரகசியப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்த நடவடிக்கையும் நல்லதோர் படிப்பினையாக அமைந்துள்ளது. வவுனியாவில் புலிவேட்டை என்ற பெயரில் ஆட்கொல்லிகளாக செயற்பட்டு வந்தது புளொட். மாணிக்கதாசன் தலைமையிலான அணியினரே இச் செயல்களில் தீவிரமாக ஈடுபட்டனர்.

புலிகள் என்ற பெயரில் அப்பாவிகளைக் கொன்று குவித்தபோதும், ஒரு சில புலிகளையும் தாசன் அணியினர் பிடித்திருந்தனர்.

புலிகள் தொடர்பான பல்வேறு தகவல்களையும் படையினருக்கு வழங்கியும் வந்தனர். காவலரண்களிலும் புளொட் உறுப்பினர்கள் படையினருக்கு உதவியாக செயற்பட்டு வந்தனர்.

மீண்டும் பெரியளவில் படையினருக்கு உதவி செய்வதற்கு தாசன் முன்வந்ததுடன், அதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தபோதே பலியானார்.

கடந்த காலத்தில் தாசனின் வலதுகரமாக இருந்த ஹரிபாபு, ஜெகன் உட்பட தாசனின் விசுவாசிகளே இப்போது வேட்டையாடப்பட்டு வருகின்றனர்.

சித்தார்த்தன் அணியினருக்கு உதவியாக படையினரும், பொலிசாரும் தாசனின் விசுவாசிகளை வவுனியாவில் முடக்கியுள்ளனர்.

தமக்கு இப்போது யார் பயன்படுவார்கள் என்பதுதான் படைத்தரப்புக்கு முக்கியமே தவிர, இக் குழுக்கள் தமக்கு உண்மையாக விசுவாசமாக இருந்தனவா- இல்லையா என்பதெல்லாம் படைத்தரப்புக்கு முக்கியமில்லாத விடயங்களாகும்.

கருவிகளை யாருமே கட்டியழ மாட்டார்கள். கருவிகள் எப்படித்தான் உழைத்தாலும் தேவையும், பயன்பாடும் முடிந்ததும் தூக்கியெறிந்து விடுவார்கள்.

கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ்க் குழுக்களை கருவிகளாகக் கருதியே ஆட்சியாளரும் படைத்தரப்பினரும் பயன்படுத்தி வருகின்றனர் என்பதற்கு தாசன் அணிக்கு நேர்ந்துள்ள துயரமான முடிவே தக்க சான்றாகும். இதே நிலை தற்போது வவுனியாவில் நிலை கொண்டுள்ள சித்தார்த்தன் அணியினருக்கும் நேராது என்று கருதிவிடலாகாது.

புலிகள் ஊடுருவி உள்ளதாக சித்தார்த்தன் அணியினர் இப்போது கூறியுள்ள புகார் நாளை அவர்களுக்கு எதிரானதாகவே மாறக்கூடும்.

சித்தார்த்தன் அணியைச் சேர்ந்தோர் புலிகளது தாக்குதலுக்கு உள்ளாகும்போது, அவர்களுக்குள்ளேயும் புலிகள் ஊடுருவி இருக்கலாம் என்ற சந்தேகம் படைத்தரப்புக்கு ஏற்பட இடமுண்டு.

தமிழ்க் கட்சிகளுக்குள் உளவுப் புலிகள் ஊடுருவியுள்ளதாக படைத்தரப்பு கருதுவதால், இக் கட்சிகளை இனிமேல் எட்டத்தில் வைத்தே பயன்படுத்துவார்கள்.

முன்புபோல படைத்தரப்பும், தமிழ்க் கட்சி உறுப்பினர்களும் நெருக்கமாக உறவாடி செயற்பட முடியாது.

தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் முன்புபோல படை முகாம்களுக்கு சுதந்திரமாகச் சென்று உளவுத் தகவல்களை கூறமுடியாது. இவர்கள் கூறும் உளவுத் தகவல்களையும் படைத்தரப்பு இனிமேல் உடனே நம்பாது. சந்தேகக் கண்கொண்டே நோக்குவர்.

இதன் மூலம் தமது பகைவர்கள் மத்தியில் சந்தேகங்களையும், நம்பிக்கையீனங்களையும் புலிகளது தாக்குதல்கள் உருவாக்கியுள்ளன.

<u>ராசிக், மாணிக்கதாசன் கொலைகள் புலிகளுக்கு ஏற்படுத்தியுள்ள இலாபகரமான விளைவுகளில் இது மிக முக்கியமானதாகும்.</u>

மாணிக்கதாசன் கொலைக்கு புலிகள் உரிமை கோராது தவிர்த்ததுக்கும் அதுவே பிரதான நோக்கமாகும்.

தமிழ்க் கட்சிகள் சிலவற்றுக்குள் புலிகளது உளவுப் பிரிவினர் ஊடுருவியிருப்பது உண்மை என்றே தகவல்கள் கூறுகின்றன.

மாணிக்கதாசன் அணிக்குள் மட்டுமல்ல, சித்தார்த்தன் அணியினர் மத்தியிலும் புலிகளது உளவுப் பிரிவினர் ஊடுருவி உள்ளதாகவே அத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<u>தமிழ்க் கட்சிகளது நடவடிக்கைகள், தலைமைகளது நடமாட்டங்கள், தமிழ்க் கட்சிகளோடு ஒட்டி உறவாடும் நபர்கள் பற்றிய விபரங்கள் திரட்டுதல் போன்றவற்றில் தமிழ்க் கட்சிகளுக்குள் உள்ள உளவுப் புலிகள் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.</u>

புலிகள் பற்றிய தகவல்களை தமிழ்க் கட்சி ஒன்றுக்கு தெரிவித்துவிட்டு, வன்னி திரும்பிய இருவர் புலிகளால் உடனடியாகக் கைது செய்யப்பட்டனராம். குறிப்பிட்ட தமிழ்க் கட்சிக்குள் இருந்த உளவுப் புலி மூலமே தகவல் புலிகளுக்குப் போனதாம்.

எனவே, தமிழ்க் கட்சிகளது முக்கிய பிரமுகர்களே புலிகளாக இருக்கக்கூடிய சந்தர்ப்பங்களும், அவர்களிடம் கூறப்படும் தகவல்கள் புலிகளுக்கு போய்ச் சேருகின்ற நிலையும் இனிவரும் காலங்களில் ஏற்படலாம். இதனால் புலிகள் பற்றித் தகவல் கொடுப்போர் நிலை விபரீதமாகலாம்.

**புலிகள் பற்றி தமிழ்க் கட்சி ஒன்றிடம் தகவல் கூறிய இருவர் வன்னியில் புலிகளால் கைதுசெய்யப்பட்டனர். அதே தமிழ்க் கட்சிக்குள் இருந்தே தகவல் பறந்ததாம்.**

புலிகள் தொடர்பாக முன்பிருந்த அதிருப்திகள் தமிழ்க் கட்சி உறுப்பினர்கள் இடையே தற்போது மறைந்து வருகிறது.

<u>ஆட்சியாளரது அணுகுமுறைகள் அப்பட்டமான இன ஒடுக்குமுறையாக அடையாளம் காணப்பட்டு வரும் நிலையில் வெறுமனே புலி எதிர்ப்பு என்ற பல்லவி அர்த்தம் இழந்து போயுள்ளது.</u>

இந்நிலையில் தமிழ்க் கட்சிகள் மத்தியில் புலிகள் ஊடுருவுவது கடினமான காரியமல்ல.

இதற்கிடையே தமிழ்க் கட்சிகள் சில புதிதாக ஆள் சேர்க்கின்றன. கொள்கைகள் இல்லாத இக்கட்சிகளுக்குள் புதிய உறுப்பினர்கள் சேருவது என்றால், அவர்கள் எதையோ எதிர்பார்த்தே இணைகின்றனர் என்பதே உண்மையாகும்.

புளொட்டும் வவுனியாவில் புதிய உறுப்பினர்களை உள்வாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து புலிகளுக்கு எதிரான உளவு வலை ஒன்றைப் படையினர் விரித்தனர்.

ராசிக், மாணிக்கதாசன் ஆகியோரை அழித்தது மூலம் அந்த உளவு வலையை பலவீனமாக்கிய புலிகள், தமிழ்க் கட்சிகளுக்குள் ஊடுருவுவது மூலம் தாமும் ஒரு உளவு வலையை விரித்துள்ளனர்.

# சந்திக்கு வராத் சங்கதிகள்

நக்கீரன்

சர்வதேச மத்தியஸ்தம் என்றாலே அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிக்கும் வயிற்றில் புளியைக் கரைத்தது போலாகிவிடுகிறது.

பிரிட்டிஷ் முன்னாள் அமைச்சர் லியாம் பொக்ஸ்சுடன் அரசாங்கமும், எதிர்க்கட்சியும் நடத்திய கடித நாடகமும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தைத் தடுக்கும் முயற்சிதான்.

இதனை அப்போதே 'முரசு' சுட்டிக் காட்டியதுடன், இந்த நாடகம் தொடராது, முறியும் என்றும் கூறியிருந்தது அல்லவா? அது அப்போதே முறிந்துவிட்டது.

அரசாங்கமும், எதிர்க்கட்சியும் ஒன்று பட்டால் நம் தலையில்தான் மண் விழும். சேர்ந்து நின்று அரைகுறைப் பொதியை நம் தலையில் போடுவார்கள். உலகத்தை ஏமாற்ற அற்புதமான வாய்ப்பாகி விடும் என்று 'முரசு' எச்சரித்து வந்ததும் உறுதியாகிவிட்டது.

முன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கூடாது என்பதில் இரண்டு பேரினவாதக் கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டை முன்வைத்துள்ளன.

ஐ.தே.கட்சி இன்று தம் நலனுக்காக அரசாங்கத்துக்கு எதிராக செய்துவரும் பிரசாரத்தை தமிழ்பேசும் தரப்பு பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் இரண்டு கட்சிகளில் எதனையும் நம்பவும் கூடாது; ஒன்று படுத்திவிடவும் கூடாது. இரண்டுமே ஆபத்துத்தான்.

ஏனெனில் இந்த இரண்டு கட்சிகளுமே (ஐ.தே.க, பொ.ஐ.மு) தமிழ் பேசும் மக்களுக்கு நியாயமான தீர்வை ஒருநாளும் தாமாக முன்வந்து தரமாட்டா. இவற்றின் நிலைப்பாடுகள் பேரின வாதம் சார்ந்தவையே. எனவே, இவை ஒன்று படுவதால் யாருக்கு இலாபம்?

முன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கூடாது என்றும், அது தொடர்பாக கதிரர் கூறிய நுளம்பு அடிப்பு கதையையும் சகலருமே கண்டிக்கிறார்கள்.

ஆனால் சிங்களப் பேரினவாதிகள் மட்டும் கதிர்காமரது கருத்தைக் கரகோசம் செய்து வரவேற்றுள்ளனர்.

'ஐலண்ட்' பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் எழுதிப்பாராட்டியுள்ளது. சந்தேகத்துக்கு அப்பாற்

**அவர்கள் ஒன்றுபட்டால் நமக்கு குண்டு போடுவார்கள்**

பட்ட தமிழராக கதிர்காமர் போற்றப்பட்டுள்ளார். அவர்மீது புலி நிழல் தெரிவதாக யாருக்குமே சந்தேகம் எழாது'

பேரினவாத நிலைப்பாடு இதுதான் என்பதால் ஐ.தே.கட்சியும் அதனை ஆதரித்துள்ளது.

இவ்வாறாக பேரினவாத சக்திகள் எல்லாமே பயந்து சாகும் அளவுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்ன அணுக்குண்டா? நியுத்திரோன் குண்டா? தமிழ் பேசும் தரப்புக்கு சாதகமாகி விடுமோ என்ற எண்ணம்தான் காரணம்.

எனவே, தமிழ் பேசும் தரப்பு மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தை ஒரே குரலில் வலியுறுத்த வேண்டிய தருணம் இதுதான்.

இதைவிடுத்து அரசும், எதிர்க்கட்சியும் ஒன்று பட வேண்டும் என்ற பல்லவியை பாடுவது நம் தலையில் நாமே குண்டு அள்ளிப்போடுவதற்கு ஒப்பாகும்.

***

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கூடாது என்று கதிரர் கூறிய கருத்தை மறுத்தும், எதிர்த்தும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் சுரேஸ் பிரேமச்சந்திரன் விடுத்த அறிக்கை சிறப்பானது. பாராட்டத்தக்கது.

கூட்டணி போன்ற கட்சிகளும் எதிர்த்துக் கருத்துக் கூறியிருந்தன. ஆனால் அது அவர்களாகக் கூறிய கருத்து அல்ல.

தமிழ்ப் பத்திரிகையாளர்கள் அவர்களது வாயைக் கிளறிப் பெற்று வெளியிட்ட கருத்து. அதனால் தமிழ்ப் பத்திரிகைகளில் மட்டுமே வந்தது. ஆனால் சுரேஸ் மட்டுமே அறிக்கை விட்டிருந்தார். ராய்டர் போன்ற செய்தி நிறுவனங்களும் அதனைப் பெற்று வெளியிட்டிருந்தன.

அறிக்கையாக வெளியிட்டால், அரசாங்கத்துக்கு கோபம் வரும் என்பதால் ஏனைய கட்சிகள தவிர்த்துவிட்டன.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கே உலைவைத்து, இராணுவத் தீர்வுக்கு மகுடம் சூட்டுகின்ற, தமிழ் பேசும் தரப்பை நாதியற்றவர்களாகத் தனிமைப் படுத்தக்கூடிய கூற்றையிட்டு ஏனைய தமிழ்க் கட்சிகள் அலட்டிக் கொள்ளவே இல்லையே!

'ராமன் ஆண்டாலென்ன, அவன் செருப்பு ஆண்டாலென்ன' என்ற மனோபாவம் ஆண்டிகளுக்கு பொருந்தலாம். அரசியல் கட்சிகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் இவர்களுக்கும் பொருந்துமா?

★★★

கோணகல சம்பவத்தைப் ட்றிய புகைப்படம் பிரசுரித்த பத்திரிகையாளர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டதாகக் கூறுகிறார் தணிக்கை அதிகாரி.

அப்படியானால் அரச வெகுஜன தொடர்பு சாதனங்களுக்குத்தானே முதலில் எச்சரிக்க வேண்டும்? செய்யப்பட்டதா?

அது இருக்க, தமிழ் மக்கள் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட படங்களை வெளியிட்டிருந்தால் இப்படி எச்சரிக்கையோடு மட்டும் நிறுத்தி யிருப்பார்களோ?!



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

அதிர் இடி 82

# இடி அமீன்

**கடந்தவாரம்**

**ஆபிரிக்க நாடுகளது
உச்சி மாநாடு
உகண்டாவில் நடக்கிறது.
அந்த மாநாட்டு பிரதிநிதிகள்
முன்பாகவே சாராவை மணக்கிறான்.
பிரிதிநிதிகளை மகிழ்விக்க,
வெள்ளையர் ஆதிக்கத்தில் உள்ள
தென்னாபிரிக்க கேப்ரவுண் போன்ற
மாதிரி நகரை உருவாக்கி
விமானக் குண்டுவீச்சு நடத்துகிறான்.
குண்டுகள் குறிதவற,
அமீன் கோபமடைகிறான்.**

**இனி....**

ஆபிரிக்க நாடுகளது பிரதிநிதிகள் முன்பாக தனக்கு ஏற்பட்ட தலைகுனிவை அமீனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

குண்டுவீச்சுக்குப் பொறுப்பான அதிகாரி ஸ்மட்ஸ் குவெட்டகமீது அமீனுக்குக் கடும் கோபம்.

அந்த அதிகாரிக்கு கெட்டநேரம். அவரது பின்னணி பற்றி ஆராய்ந்த புலனாய்வுக் குழுவினர், முன்னாள் ஜனாதிபதி ஒபடேக்கு அந்த அதிகாரி தூரத்து உறவினர் என்று கண்டு பிடித்துக் கூறினார்கள்.

அமீனின் கோபம் உச்சக்கட்டத்துக்குச் சென்றுவிட்டது.

"அதுதானே பார்த்தேன்! திட்டமிட்டுத்தான் தலைகுனிவை ஏற்படுத்தி இருக்கிறான்!" என்று கொதித்த அமீன் கூறினான், "அவனைக் கொன்று விடுங்கள்!"

மறுநொடியே முதலில் கூறிய உத்தரவை மாற்றினான். "வேண்டாம் உடனே அவனுக்கு விசா கொடுக்க வேண்டாம். முதலில் பணியில் இருந்து நீக்குகிறேன். பின்னர் விசா கொடுத்து அனுப்பலாம்!" என்றான். பணிநீக்க உத்தரவு உடனடியாகத் தயாரானது.

தன்மீது பழிவிழாமல் அந்த அதிகாரியைத் தீர்த்துக்கட்ட நினைத்தே உத்தரவை மாற்றினான்.

பகிரங்கமாக தீர்த்துக்கட்டினால் விமானப்படையினர் மத்தியில் குழப்பம் ஏற்பட்டு தனக்கு எதிராக மாறிவிடலாம் என்றும் நினைத்தான்.

மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த போதே பணி நீக்க உத்தரவில் அமீன் கையொப்பம் போட்டான்.

மாநாடு முடிந்ததும் அமீன் உகண்டா மக்களுக்கு விடுத்த செய்தியைப் பார்த்த பலருக்கு, அமீன் மக்களைச் சிரிக்க வைக்க தமாஷ் பண்ணுகிறானா? அல்லது கிறுக்குப் பிடித்து அலைகிறானா? என்றுதான் யோசிக்க வைத்தது.

ஒரு சர்வதிகாரி.ன் ஆட்சியில் கொடூரங்களுக்கு ம: மல்ல. கோமாளித்தனங்களுக்கும் குறைவிருக்காது என்பதற்கு அமீனின் ஆட்சிக்காலம் அருமையான எடுத்துக்:ாட்டு.

நாட்டு மக்களுக்கு அமீன் விடுத்த செய்தி இதுதான்:

"நாட்டு மக்களுக்கு ஒரு நற்செய்தி. ஆபிரிக்க நாடுகளது உச்சி மாநாட்டில் எனது திருமணம் நடந்து முடிந்து விட்டது. சாராவை நான் மணந்து கொண்டேன்.

எனது திருமணத்தைக் கண்டு களிக்க உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்க வில்லையே என்று எனக்கு வருத்தமாக இருக்கிறது.

உங்களுக்கும் வருத்தமாக இருக்கும் என்பதை நான் அறிவேன். அதனால் மக்கள் கண்டுகளிக்கக் கூடிய விதத்தில் எனது திருமண வைபவத்தை மீண்டும் ஒரு முறை நடத்தத் தீர்மானித்துள்ளேன்.

உங்கள் வீட்டுத் திருமணமாக நினைத்துக் கலந்து கொள்ளுங்கள். என் மகிழ்ச்சியை உங்களோடு பகிர்ந்து கொள்வதை விட வேறு மகிழ்ச்சி எனக்கு ஏது?"

அறிவித்ததுபோலவே திருமண வைபவ ஏற்பாடுகள் வெகு சிறப்பாக செய்யப்பட்டன. நைல் ஹோட்டலில் உள்ள சர்வதேச மாநாட்டு மையத்தில் திருமண விழா நடைபெற்றது.

முஸ்லிம் முறைப்படியே சடங்குகள் நடந்தன. சாரா முஸ்லிம் முறைப்படி வெள்ளை உடையில் காட்சியளித்தாள்.

திருமண நிகழ்ச்சிக்கு மக்கள் அழைக்கப்பட்டபோதும் சாதாரண மக்கள் நேரில் கலந்து கொள்ள முடியாதளவுக்கு சோதனைகள் கெடுபிடியாக இருந்தன.

மண்டபத்துக்குள் சாதாரணமக்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. திறந்த வெளியில் நிறுத்தி வைத்தார்கள். அங்கிருந்த தொலைக்காட்சி பெட்டிகளில்தான் அவர்கள் வைபவத்தைக் காணமுடிந்தது.

திருமணவைபவம் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்யப்பட்டது. தொலைக்காட்சி நிலையமே அங்குதான் இடம் பெயர்ந்திருந்தது.

நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டதால் மக்கள் வீட்டிலிருந்தபடியே காணமுடிந்தது. வெளிநாட்டு பிரமுகர்கள் பலர் நேரில் வந்து வாழ்த்தினார்கள். பரிசுப் பொருட்கள் மலைபோலக் குவிந்து கிடந்தன.

உள்நாட்டு பிரபல வர்த்தகர்களும் பரிசுப் பொருட்களோடு ஆஜரானார்கள். எல்லாமே பெறுமதியான விலை உயர்ந்த பரிசுகள்.

திருமண வைபவத்தை மீண்டும் நடத்தப்போவதாக அமீன் அறிவித்தபோது கோமாளித்தனமா? கிறுக்குத்தனமா? என்று பலரும் நினைத்தனர்.

ஆனால் அமீன் கோமாளித்தனமாக சிந்தித்து செய்த முடிவு அல்ல. மிகப் புத்திசாலித்தனமாகச் செய்த காரியமே அது.

மக்களுக்கு திருமண வைபவத்தை காண்பிப்பது என்ற பெயரால் மிகப் பெரிய பணச்சடங்கு நடத்தி முடித்தான் அமீன்.

வந்து குவிந்த பரிசுப் பொருட்களது பெறுமதி பல நூறு கோடி ரூபாய்களை எட்டியது.

அமீனின் ஏனைய திருமணங்கள் இவ்வாறு ஆடம்பரமாக நடக்கவில்லை. இப்போதுதான் திருமணத்தை வைத்து பணம் சேர்க்கும் யோசனை அமீனுக்குத் தோன்றியது.

இது முன்பே தோன்றியிருந்தால் சகல திருமணங்களையும் இவ்வாறே நடத்தியிருப்பான்.

வெளிநாட்டுத் தலைவர்கள் பலரும், பிரமுகர்களும் திருமண வைபவத்தில் கலந்து கொண்டதால், தனது செல்வாக்கை உகண்டா மக்களுக்குக் காட்டிக்கொள்ளவும் அமீனுக்கு நல்லதோர் வாய்ப்பு.

'எனக்குள்ள மரியாதையைப் பார்த்தீர்களா?' என்று கேட்காத குறையாக உலகப் பிரமுகர்களோடு சாரா சகிதம் நின்று போஸ் கொடுத்தான் அமீன்.

தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு போதாது என்று, மறுநாள் உகண்டா பத்திரிகைகளின் பக்கங்கள் முழுக்க அமீனது திருமண வைபவக் காட்சிகள்தான்.

அமீனது ஆட்சியில் உகண்டாவின் பெயர் உலக அரங்கில் கெட்டுக் குட்டிச்சுவராகி விட்டதாக உகண்டா மக்கள் அதிருப்தி கொண்டிருந்தனர்.

அந்த அதிருப்தியை அமீனும் அறிந்தே இருந்தான். அதனைப் போக்கவும் திருமண வைபவத்தை பயன்படுத்திக் கொண்டான்.

அமீனது இத்தகைய தந்திரங்கள் பலிக்கவும் செய்தன. அதனை நம்பவும் ஆட்கள் இருந்தனர்.

அமீனது திருமண வைபவம் நேரடியாக ஒளிபரப்பப்பட்டதோடு நிற்கவில்லை. வைபவம் முடிந்த சில நாட்களில் மறு ஒளிபரப்பு செய்யப்பட்டது.

ஒரு மாத காலத்தில் நான்கு தடவைகள் மறு ஒளிபரப்புச் செய்யப்பட்டது.



'மக்களின் கோரிக்கைக்காக' என்னும் முன்னறிவிப்போடுதான் ஒவ்வொரு முறையும் ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

தொலைக்காட்சியோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. திரைப்படமாகத் தயாரிக்கப்பட்டு, திரையரங்குகளிலும் திரைப்படங்களுக்கு முன்பு காண்பிக்கப்பட்டது.

திரையரங்கு ஒன்றில் அமீனது திருமண வைபவத் திரைப்படம் காண்பித்தபோது, சிலர் எழுந்துபோய் சிற்றூண்டி விடுதியில் குளிர்பானம் அருந்திக் கொண்டிருந்தனர்.

அவர்கள் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. சிற்றூண்டி விடுதிக்குள் இராணுவத்தினர் புகுந்தனர்.

குளிர்பானம் அருந்திக் கொண்டிருந்த அனைவரும் குண்டுக் கட்டாக தூக்கிச் செல்லப்பட்டனர். சிற்றூண்டி விடுதியும் அடித்து நொறுக்கப்பட்டது.

அமீனது படம் காண்பித்த நேரத்தில் குளிர்பானம் விற்பனை செய்ததுக்காக சிற்றூண்டி விடுதி உரிமையாளரும் நையப்புடைக்கப்பட்டு, கொண்டு செல்லப்பட்டார்.

## தருவது ரசிகன்

இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளியாகாதபோதும், வாய் வழியாக நாடெங்கும் பரவிவிட்டது.

இதன் பின்னர் எந்தத் திரையரங்கிலும் எவ்வளவுதான் சலிப்பாக இருந்தாலும் யாருமே எழுந்து வெளியே செல்வதில்லை.

அமீனால் பணிநீக்கம் செய்யப்பட்ட விமானப்படை அதிகாரி விடுதலையாகி சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருந்தார்.

அவருக்குத் தெரியாமலேயே அவரை அமீனது புலனாய்வுப் பிரிவினர் நிழல்போலத் தொடர்ந்தனர்.

"சுதந்திரமாக நடமாட விடுங்கள். ஆனால் பட்சி பறந்துபோகாமலும் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்பது அமீனது உத்தரவு.

கிட்டத்தட்ட ஒருமாதகாலம் அந்த அதிகாரி சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட்டார்.

திடீரென்று ஒருநாள் நடுவீதியில் அவரது கார் வழிமறிக்கப்பட்டது. அப்படியே தூக்கி தமது வண்டியில் திணித்தார்கள். அவரது காரை அவர்களே ஓட்டிச் சென்றனர். அத்தனைபேரும் அமீனது மெய்காப்பாளர் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

கடத்திச் செல்லப்பட்ட விமானப்படை அதிகாரியை தனியான முகாம் ஒன்றில் சிறிது நேரம் வைத்திருந்தனர்.

அவருடன் தொலைபேசி ஊடாகப் பேசினான் அமீன்.

எடுத்த எடுப்பிலேயே அமீன் கேட்டான், "என்ன, ஒபடேக்கு நன்றியுள்ள நாய்தானே நீ? கொஞ்சம் அதிகமாகவே வாலை ஆட்டி விட்டாய். காலைத் தூக்கி என் கோட்டைக்குள்ளேயே சிறுநீர் கழித்துவிட்டாய்! அதனால் உனக்கு சொர்க்கத்தை காட்டலாம் என்று எனக்கு ஓர் ஆசை!"

விமானப் படை அதிகாரிக்கு அப்போதுதான் தன்மீது இப்படியொரு பழி இருப்பது தெரிந்தது. குண்டு வீச்சில் தவறு செய்ததுக்கு பணிநீக்கம் நியாயமானது என்றுதான் அவரும் ஏற்றுக் கொண்டார்.

ஆனால் தன்னை முன்னாள் ஜனாதிபதியுடன் முடிச்சுப் போடுவார்கள் என்று கனவிலும் நினைக்கவில்லை.

"என் மனைவி, பிள்ளைகள்மீது ஆணையாகச் சொல்லுகிறேன், எந்த உள்நோக்கமும் எனக்குக் கிடையாது!" என்று கெஞ்சும் குரலில் கூறினார் அதிகாரி.

அந்தக் குரல் அமீனிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. "எத்தனை குண்டப்பா போட்டீர்கள்?" என்றான்.

"பதினைந்து குண்டுகள்!"

"அதில் ஒன்று கூடவா இலக்குமீது விழாமல் இருக்கும்? கண்ணை மூடிக்கொண்டு போட்டால்கூட விழுந்திருக்குமேயடா? என்னை முட்டாளாக்கவா பார்க்கிறாய்?" சீறினான்.

"இல்லை மேதகு அதிபர் அவர்களே! ஒருபோதும் இல்லை! தங்கள்மீது மாபெரும் மரியாதை கொண்டவன் நான். அனுபவம் இல்லை. போதிய பயிற்சி இல்லை. அதுதான் தவறுக்குக் காரணம். அதற்கு வேண்டுமானால் எனக்குத் தண்டனை கொடுங்கள்!" மறுபடி கெஞ்சினார்.

"எதற்குத் தண்டனை கொடுப்பது, என்ன தண்டனை கொடுப்பது என்பதை முடிவு செய்ய வேண்டியது நீயல்ல, நான்!" என்ற அமீன், "தொலைபேசியை பக்கத்தில் கொடு!" என்றான்.

அதிகாரி கொடுக்கவில்லை. மன்றாட்டமாக; "மேதகு அதிபர் அவர்களே. என் மனைவி, பிள்ளைகளை அநாதைகளாக்கிவிடாதீர்கள். தேசத்துரோகியின் குடும்பம் என்ற அவப்பெயரை சுமத்திவிடாதீர்கள். தயவு செய்து என்மீது கருணை காண்பியுங்கள்!" என்று கோரினார்.

"குற்றத்தை ஒப்புக் கொள்ளவும் மறுக்கிறாய். குற்றவாளிபோல கருணையும் கேட்கிறாய். குற்றத்தை ஒப்புக்கொள். பிழைத்துப் போக விடுகிறேன்!" என்றான்.

அதிகாரி சட்டென்று ஒரு தீர்மானத்துக்கு வந்தார். குற்றம் பொய்யானால்கூட ஒப்புக் கொண்டால்தான் உயிர் தப்பலாம். ஆகவே ஒப்புக்கொள்ள முடிவு செய்தார்.

"ஆம், ஒப்புக்கொள்கிறேன். தாங்கள் என்மீது சுமத்திய குற்றச்சாட்டுக்கள் யாவும் உண்மைதான்" என்றார். குரல் தழுதழுத்தது.

அமீனின் குரல் சிரிப்போடு ஒலித்தது, "இப்போதுதான் எனக்குத் திருப்தி. உண்மை பேசிய உன்னை நிச்சயம் நரகத்தில் தள்ள மாட்டேன். நேராகச் சொர்க்கம்தான்!"

பேசி முடித்த பின்னர் மெய்காப்பாளர்களுக்கு அமீன் கூறினான், "சொர்க்கத்திற்கு விசா கொடுத்துவிடுங்கள்!"

மறுநொடியே விமானப்படை அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது காரில் வைத்தே அவரது உடலை தீ மூட்டி எரித்தார்கள்.

காணாமல் போனோர் பட்டியலில் அந்த அதிகாரியின் பெயர் சில மாதங்களின் பின்னர் சேர்ந்து கொண்டது.

(இடி தொடரும்)

# துணை நடிகை கைது

**சி**னிமா உலக துணை நடிகைகள் விபசார குற்றத்தில் கைதாவது தமிழ்நாட்டில் அதிகரித்து வருகிறது.

'பெரிய நடிகைகளை பொலிசார் நெருங்கமாட்டார்கள். நம்மைத்தான் அடிக்கடி பிடித்துப் போகிறார்கள்' என்பது துணை நடிகைகளது குற்றச்சாட்டு.



சினிமா பார்ப்பவர்களுக்கு அது ஒரு மாயாஜால உலகம். ஆனால் சினிமா உலகில் புகுந்த பல பெண்களுக்கு அது நரகம். மீளமுடியாத நரகம்.

வாய்ப்புத் தேடும்போது பலரால் ஏமாற்றப்பட்டு, சிறு வேடங்களில் தலைகாட்டுகிறார்கள். பின்னர் வேறு வழியின்றி நடிகை என்ற பெயரை வைத்து உடலை மூலதனமாக்கி சம்பாதிக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் சினிமா பட அதிபர்கள் என்ற பெயரில் பெண்களை ஏமாற்றி, அவர்களை விபச்சார தொழிலில் ஈடுபடுத்திய சிலரைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

சென்னை விருகம்பாக்கத்தில் 'கோல்டன் மூவிஸ்' என்ற பெயரில் சினிமா கம்பனி ஒன்று இருந்தது. அங்கு வாய்ப்புத் தேடி வரும் பெண்களை விபச்சாரத்தில் ஈடுபடுத்தினார்கள். அந்த கம்பனிக்காரர்களையும் பொலிசார் கைது செய்துள்ளனர்.

துணை நடிகை பிந்து உட்பட சினிமாவில் பத்தோடு பதினொன்றாக தலையைக் காட்டிய பெண்களும் விபசாரம் செய்யும்போது கைதாகியுள்ளனர்.

துணை நடிகை பிந்துவின் கதை சோகமானது. இந்தப் பெண் சினிமாவுக்கு வருவதற்கு தாயாரே காரணமாம்.

மலையாளப் படங்கள் சிலவற்றில் நடித்த விஜயலட்சுமிதான் பிந்துவின் அம்மா. தனது தொழிலில் மகளையும் இறக்கிவிட்டாராம்.

தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் போன்றோரை மகிழ்விக்குமாறு மகளிடம் கூறியனுப்புவதே தாயார்தானாம்.

ஆனாலும் பிந்துவுக்கு சரியானபடி வாய்ப்பு எதுவும் வராததால் விபச்சாரத் தொழிலில் ஈடுபட்டார். நடிகை என்ற 'லேபிள்' இருந்ததால் பணக்காரர் பலர் தேடிவந்தனராம். இறுதியில் மாட்டிக் கொண்டார்.

சினிமாவில் வாய்ப்புத் தேடி வளமாக வாழ்வதற்காக இப்படி தம் பெண்பிள்ளைகளை சீரழிப்போர் பலர் உள்ளனர்.

# சோனியாவின் ஊர்



இந்தியாவில் 'பாஞ்சஜன்யா' என்றொரு பத்திரிகை வெளிவருகிறது. இதன் ஆசிரியர் தருண் விஜய்.

இவர் சமீபத்தில் இத்தாலிக்குச் சென்றார். சோனியாவின் ஆரம்பகால வாழ்க்கை பற்றிய தகவல்களை திரட்டுவதற்கே இவர் சென்றார்.

ஆனால் அங்கு முக்கிய தகவல்கள் கிடைக்கவில்லை. சோனியா இத்தாலியில் துரின் என்னும் ஊரில் பிறந்தார். அங்கிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்தில் ஓர்பசனோ என்ற சிறுநகரம் உள்ளது.

சோனியாவின் தந்தை ஸ்டெபனோ மெய்னோ சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இவர் கட்டடத் தொழிலாளியாக பணியாற்றினார்.

சோனியா படிப்பில் கெட்டிக்காரியல்ல. அவர் பள்ளி இறுதிப்படிப்பை தாண்டவில்லை. இலண்டனுக்கு ஆங்கிலம் கற்கச் சென்றார். படிப்பைத் தொடர அவரிடம் போதுமான பணம் இருக்கவில்லை.

உணவு விடுதிகளில் உணவு பரிமாறும் வேலையைச் செய்தார். குறிப்பிட்ட உணவு விடுதிக்கு ராஜீவ் காந்தி சாப்பிடச் செல்லுவார். அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் காதல் மலர்ந்தது.

இத் தகவல்கள் பல முன்னரே தெரிந்தவைதான். இவற்றைத் தவிர மேலதிகமாக எதனையும் திரட்ட முடியவில்லையாம்.

# குத்துவிட வருகிறார்

**கு**த்துச் சண்டை உலகில் கொடி கட்டிப் பறந்தவர் முகமது அலி. அந்தப் புலிக்குப் பிறந்தது ஒரு பெண்புலி. அந்த பெண் புலியும் இப்போது களத்தில் இறங்கியுள்ளது.



முகமது அலியின் மகள் லைலா அலி தான் குத்துச் சண்டைப் போட்டிகளில் ஈடுபட முன்வந்துள்ளார்.

ஒரு காலத்தில் ஆண்கள் மட்டுமே பங்கு கொள்ளும் போட்டியாக இருந்த குத்துச் சண்டைப் போட்டிகளில் இப்போது பெண்களும் பங்கு கொள்கிறார்கள்.

பெண்கள் குத்துச் சண்டைப் போட்டிகளுக்கும் பயங்கர மவுசு. பந்தயங்களில் பல கோடிகள் புரளுகின்றன.

முகமது அலியின் வாரிசான லைலா அலி 158 இறாத்தல் எடையுடன் இருக்கிறார். 21 வயது.

எதிர்வரும் ஏப்ரல் 8ம் திகதி முதல் முறையாக பவுலர் என்பவருடன் மோதுகிறார்.

பக்கவாத நோயில் அவதிப்படும் முகமது அலி தனது மகள் குத்துச் சண்டையில் குதிக்க பூரண ஆதரவு கொடுத்திருக்கிறார். சில நுட்பங்களையும் சொல்லிக் கொடுத்துள்ளார்.

தாயார் மட்டுமே தமது அழகு மகள் இப்படியான துறையில் ஈடுபடுவதை அவ்வளவாக விரும்பவில்லை. ஹொலிவூட் நடிகைபோல உள்ள லைலா குத்துச்சண்டை ரசிகர்கள் பலரை அழகாலும் வீழ்த்தப் போகிறார்.

# வடிகட்டும் குரங்குகள்

**த**ண்ணீரை வடிகட்டிக் குடிக்குமாறு திரும்பத் திரும்ப அறிவுரை கூறினாலும் நம்மில் பேர் அதன்படி செய்கிறோம்.

ஆனால் நம் மூதாதையரான குரங்குகள் நம்மைவிட சுத்தம் காக்கின்றன. சுத்தம் சுகம் தரும் என்று தெரிந்து வைத்துள்ளன.

ஃபிரான்சில் குரங்குகளின் பரிணாம வளர்ச்சி பற்றி ஆய்வு நடத்தி வருபவர் சால்ட் லூவாஸ். இவர் சமீபத்தில் வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையில் கூறியுள்ள தகவலைப் பாருங்கள்:

"கோடை காலங்களில் சில பள்ளங்களில் தண்ணீர் தேங்கி நிற்கும். அப்படிப்பட்ட நீர் மிகவும் அசுத்தமாக இருக்கும். அதைக் குடிக்கவே முடியாது.

சிம்பன்சி வகைக் குரங்குகள் பள்ளத்தில் தேங்கும் அசுத்தமான நீரைக் குடிக்காது. அதற்குப் பதிலாக இந்தக் குரங்குகள் பள்ளத்திற்கு அருகேயிருந்து ஒன்று அல்லது இரண்டு மீட்டர் தூரத்தில் வேறு ஒரு பள்ளம் தோண்டுகின்றன.


இதனால் முந்தைய பள்ளத்தில் தேங்கிக் கிடக்கும் தண்ணீர் மெல்ல மணல் வழியாக ஊடுருவி சிம்பன்சி தோண்டிய பள்ளத்திற்கு வந்து விடுகிறது. இப்படி வரும் நீரைத்தான் சிம்பன்சிகள் குடிக்கின்றன. குரங்கு வடிகட்டிய இந்த நீர் நுண் கிருமிகள் இல்லாமல் குடிப்பதற்கு உகந்ததாக இருக்கிறது" என்று கூறியுள்ளார்.

நம் மூதாதையரிடம் உள்ள நல்ல பழக்கத்தை நாமும் பின்பற்றலாம் அல்லவா!

# அங்கும் அழகிகள்

**அ**ழகிப் போட்டிகளை எங்கெல்லாம் நடத்துவது என்ற விவஸ்தையே இல்லாமல் போய்விட்டது.

தென் அமெரிக்காவில் உள்ள பெருவில் பெண் கைதிகளுக்கான சிறைச்சாலையில் அழகிப் போட்டி நடந்துள்ளது.



சாண்டா மோனிகா என்று அழைக்கப்படும் அந்தச் சிறைச்சாலையில் பல நாடுகளையும் சேர்ந்த பெண் கைதிகள் இருக்கின்றனர். இவர்களுக்கிடையே 17 அழகிகளைத் தேர்வுசெய்து போட்டி நடத்தப்பட்டது.

போட்டியில் ஹொலன்ட் நாட்டவரான நிகோலியன் சூசேன்பால் (18) என்னும் இளம் பெண் அழகுராணியாக தெரிவானார்.







படிப்பகம்

www.padippakam.com

## வீட்டுக்கு வீடு

→ தீப்பெட்டிகளை அடுக்கி வைத்தது போலக் காணப்படும் இவையாவும் நவீனரக வீடுகள். அமெரிக்க சான்ஸ்ஃபிரான்சிஸ்கோ மாநிலத்தில் வீடில் லாப் பிரச்சனையைத் தீர்க்க உருவாக்கப்பட்ட வீடமைப்பு திட்டம் தான் இது.

வீட்டின் இலக்கத்தை வைத்துத்தான் வீட்டு உரிமையாளர்கள் கூட தமது வீட்டைக் கண்டு பிடிக்கலாம். இல்லையானால் அடையாளம் தெரியாமல் வீடு மாறிப் புகுந்து தர்ம அடி வாங்கவும் நேரலாம். ஆகவே இவ்வாறான வீடுகளில் வசிப்போர் முதுகிலரின் கட்டியிருப்பது நலம். ■



## ஏவுகணை

↓ ஈரான் தலைநகரில் சமீபத்தில் நடைபெற்ற 'புனித இராணுவ வார விழா'வில் இந்த ஷெல்லால் ஏவுகணை கொண்டு செல்லப்பட்டது.

இதன் சுடு தூரம் ஆயிரத்தி முன்னூறு கிலோ மீட்டர் முதல் ஆயிரத்தி ஐநூறு கிலோ மீட்டர். ஆயிரம் கிலோ வரையான வெடி பொருளை இது உள்வாங்கும். எதிரிகளுக்குப் படு நாசம் தரக்கூடியது.

ஒவ்வொரு நாட்டு மக்களும், தமது பலத்தை தக்கவைப்பதே தமது கௌரவத்திற்கு உத்தரவாதம் என்று நம்புகின்றனர். ■



தகவல் பெட்டி



## குள்ளப் பிரதிநிதி

↗ உருவத்தில் குள்ளம் இருக்கலாம். உள்ளத்தில்தான் இருக்கக்கூடாது. குள்ளத்தனம் என்பது அதுதான்.

இவர் உள்ளத்தில் உயரமானவர் என்பதால் ஜோர்டான் நாட்டில் உள்ள ஜெராஷ் நகரமக்கள் இவரை நேசிக்கின்றனர். நகர சபைத் தேர்தலில் இவருக்கு வாக்குப் போட்டு தமது பிரதிநிதியாகத் தெரிவு செய்துவிட்டனர்.

மகன் அலியோடும், கைத்தடியோடும் போஸ் கொடுக்கும் முகமது மாடியின் உயரம் ஆக, 1.15 மீட்டர். வயது 37. உலகிலேயே மிகக் குள்ளமான மக்கள் பிரதிநிதி இவர்தானோ?! ■

## குட்டி நாற்காலி


↓ உலகிலேயே மிகப்பெரிய நாற்காலியின் படம் தகவல் பெட்டியில் வெளியாகியிருந்தது.

இது உலகில் மிகச் சிறிய நாற்காலி. 1903ம் ஆண்டு சார்லஸ் மக்கின்டாஷ் என்பவர் இதனை உருவாக்கினார். இன்றுவரை குட்டி நாற்காலியாக கோலோச்சி வருகிறது.

'புகழ்பெற்ற நூறு இருக்கைகள்' என்னும் கண்காட்சி அவுஸ்திரேலிய மெல்போர்ண் நகரில் நடந்தது. அதில் இந்தக் குட்டி நாற்காலியும் இடம்பிடித்தது. ●



## நீருக்குள் பாடல்





## குட்டி வானொலி

↑ உலகிலேயே மிகச் சிறிய வானொலிப் பெட்டி இதுதான். நமது சுண்டு விரல் அளவுதான் இருக்கிறது.

தாய்வான் நாட்டு விஞ்ஞானிகள் இதனைத் தயாரித்துள்ளனர். நம் நாட்டுக்கும் வந்து சேரும்.

← உலகப் புகழ்பெற்று விளங்கிய பீட்டில்ஸ் இசைக் குழுவைச் சேர்ந்தவர்கள்தான் இவர்கள்.

இவர்கள் குரல்வளப் பயிற்சி பெறுவது நீச்சல் குளத்தில் ஜாலியாக நீச்சல் அடித்துக்கொண்டுதானாம்.

தண்ணீருக்குள் கழுத்து வரை நின்று பாடிப்பயிற்சி பெற்றால் குரல்வளம் பெருகும் என்று நம்மூரில் பாட்டிமார் சொன்னது சரிதானோ?!

ஆகவே இனிமேல் குளியலறைப் பாடகர்களை கேலி செய்து குதறாதீர். அவர்களும் பெரிய பாடகர்களாக வரக்கூடுமல்லவா.

## டுமீல் டுமீல்

↓ ஒரு குழல் துப்பாக்கி, இரு குழல் துப்பாக்கி போன்றவை பார்த்திருப்பீர்கள். இது நான்கு குழல் துப்பாக்கி.

நான்கு குழாய்களுடன் முதன் முதலில் தயாரான எலக்ரானிக் கைத்துப்பாக்கி இதுதான்.

துப்பாக்கியைக் கையில் வைத்திருக்கும் பிரிஸ்பன் மைக் ஓடைவர் என்னும் பொறியியலாளர்தான் இதனைத் தயாரித்துள்ளார்.

'ஒரு தடவை அழுத்தினால் நான்கு குண்டுகள் பாய்ந்து உடலைச் சல்லடை போடும்.

இந்தத் துப்பாக்கி மின்னணு முறையில் இயங்குவதால் விவரம் தெரியாதவர்கள் இயக்க முடியாது. அதனால் சிறுவர்கள் கையில் இது கிடைத்தால்கூட ஆபத்து நேரவாய்ப்பில்லை. ■




படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் (123)

தமிழ்நாட்டிலிருந்து மயன்

# ஊர்மிளாவின் அன்புக்குரிய தயாரிப்பாளர்

## மறுபடி நடிக்கவர ஆவல்

**பி**ரபல பட அதிபர் ராம்கோபால் வர்மா. கோடி கோடியாக இலாபம் தந்த பல இந்திப் படங்களை இயக்கித் தயாரித்துள்ளார்.

இவரது 'ரங்கீலா' படம் மூலம்தான் ஊர்மிளா பிரபலமானார். அப்படத்தில் நடிப்பதற்காக ஊர்மிளா ராம்கோபால் வர்மாவை பல தடவை தனிமையில் சந்திக்க வேண்டியிருந்தது.

ஊர்மிளாவின் இளமை நடுத்தர வயதான ராம்கோபால் வர்மாவை ரொம்பவே கவர்ந்து விட்டது. அருமையான சந்தர்ப்பம் ஒன்றை ரங்கீலாவில் கொடுத்தார்.

அப்படத்தில் நடிக்கும்போது ஜாக்கிஷெரப்புடனும் ஊர்மிளா நெருங்கி உறவாடினார்.

இளம் நடிகைகளை கொத்தும் 'கருடன்' என்று வர்ணிக்கப்படும் ஜாக்கி அடிக்கடி ஊர்மிளாவுடன் ஒரம்கட்டினார்.

இருவரும் மிக நெருக்கமாக உருண்டு புரண்டு நடித்த காட்சிகள் படத்திலும் இருந்ததால் விரைவாகத் தீ பற்றிக் கொண்டது.

படத்தின் வெற்றிக்கு இந்த நெருக்கமும் உதவும் என்பதால் ராம்கோபால் வர்மாவும் இதனைக் கண்டு கொள்ளவில்லை.

படம் முடிவடைந்த பின்னர் சிலகாலம் ஊர்மிளாவுடனான தொடர்பை அறுத்துக் கொள்ள எவ்வளவோ முயன்றும் முடியவில்லை.

அந்தளவுக்கு ஊர்மிளா அவரை வசீகரித்துவிட்டார். இந்நிலையில்தான் ராம்கோபால் வர்மாவின் மனைவி கொள்ளிக்கட்டை தூக்கினார்.

"நான் வேண்டுமா? அந்த..... வேண்டுமா?" என்று மனைவி கேட்க, 'ஊர்மிளாதான் வேண்டும்' என்று முடிவு செய்தார் வர்மா.

நீதி மன்றத்தில் விவாகரத்து வழக்குத் தொடுத்து மனைவியை கத்தரித்துவிட்டார்.

இப்போது ஊர்மிளாவும், வர்மாவும் ஒன்றாகத் திரிகிறார்கள். விரைவில் திருமணம் நடக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

தனது தந்தைபோன்ற வர்மாவை ஊர்மிளா கைக்குள் போட்டிருப்பது அவரது சொத்தைக் கரைத்துக் குடிக்கவே என்று குமுறுகிறார் வர்மாவின் முன்னாள் மனைவி.

### மறுபடி வருவாரா?

**த**மிழ்ப்பட உலகிலும், பின்னர் இந்திப் பட உலகிலும் முன்னணி இடத்தில் இருந்த பதினாறு வயது நாயகி அவர்.

இந்திப் படத் தயாரிப்பாளர் ஒருவரை திருமணம் செய்து கொண்டு நடிப்பைவிட்டு ஒதுங்கிப்போனார்.

இப்போது குடும்ப வாழ்க்கையில் சின்னப் பூசல். கணவர் தன் முதல் மனைவி மற்றும் தனது சகோதரர்கள் மீதுதான் மிகுந்த அக்கறையாக உள்ளாராம்.

முதல் மனைவிக்கு தொலைக்காட்சி தயாரிப்பு நிறுவனம் ஒன்றை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்

அதேபோன்று தம்பிக்கும் திரைப்படத் தயாரிப்பு நிறுவனம் ஒன்றை உருவாக்கிக் கொடுத்துள்ளார். ஆனால் இரண்டாம் மனைவியான நடிகைக்கு எதனையும் செய்யவில்லை.

இதனால் மனம் கசந்துள்ள பதினாறு வயது நாயகி, மறுபடி நடிப்பது பற்றி யோசிக்க ஆரம்பித்துள்ளார்.

தனக்கும், தனது பிள்ளைக்கும் சொந்தக்காலில் நின்று சம்பாதிக்க நினைக்கிறாராம் நடிகை. கணவர் அனுமதிப்பாரா? என்று தெரியவில்லை.

### மாட்டிக்கொண்டார்

**இ**ரண்டெழுத்து இந்தி நடிகை அவர். தமிழிலும் சில படங்களில் நடித்துள்ளார். ஒரு படத்தில் நடித்தும் வருகிறார்.

விருது பெற்ற இந்த நடிகை காதல் விவகாரங்களிலும் சுறுசுறுப்பானவர்.

இவர் ஏற்கனவே தொழிலதிபரான இளைஞர் ஒருவரைக் காதலித்தார். இப்போதும் அக்காதல் தொடர்கிறது.

ஆனால் தற்போது இந்த நடிகையை தன் வலையில் வீழ்த்தியிருப்பவர் தெலுங்குப்பட உலக அர்ஜுனமான நடிகர். இவர் தமிழிலும் சில மொழிமாற்றுப்படங்கள் மூலம் பிரபலமானவர். மூன்றெழுத்து நடிகையை மணந்திருப்பவர்.

இந்த நடிகரிடம் பல நடிகைகள் மாட்டிக் கொண்டு திணறியிருக்கிறார்கள்.


மும்பாய் நாயகியான மணியான நடிகை, படையப்பா வில்லி போன்ற பல நடிகைகள் அந்தப் பட்டியலில் இருக்கின்றனர்.

இப்போது இரண்டெழுத்து நடிகை வசமாக மாட்டியிருக்கிறார். நடிகராக கைவிடும்வரை மீள்வது கஷ்டம் என்கிறார்கள்.

**முகப்பில்**

கஜோல்–ஷாருக்கான்

கௌசல்யா



ஊர்மிளா
படம் : மாஸ்ட் (இந்தி)

### மூன்று விஜயகாந்த்

விஜயகாந்த்தும் அவரது உயிர் நண்பர் இப்ராகீம் ராவுத்தரும் பிரிந்துவிட்டதாக செய்திகள் வந்தன. அது தப்பு என்று நிருபிக்க தயாராகிறது 'சிம்மாசனம்'.

இப்ராகீம் ராவுத்தர் தயாரிக்க விஜயகாந்த் மூன்று வேடங்களில் நடிக்கும் படம் தான் 'சிம்மாசனம்'. விஜயகாந்த் நடித்த 'என் ஆசை மச்சான்' படத்தின் பின்னர் ராவுத்தர் தயாரிக்கும் படம் இது.

முதல் முறையாக மூன்று வேடம் ஏற்கிறார் விஜயகாந்த். ஐந்து கதாநாயகிகள் நடிப்பார்கள். தேர்வு நடக்கிறது.

மணிவண்ணன், செல்வமணி ஆகியோரிடம் உதவி இயக்குநராக இருந்த ஈஸ்வரன் இதனை இயக்க: எஸ்.ஏ.ராஜ்குமார் இசையமைக்கிறார்.



அப்பாஸ்-ஐஸ்வர்யா ராய
படம் : கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்

## சோனாலியின் காதலர்கள்

'காதலர் தினம்', 'கண்ணோடு காண்பதெல்லாம்' போன்ற படங்களில் தமிழ்ப்பட ரசிகர்களை கிறக்கியுள்ள நடிகை சோனாலி பிந்த்ரே.

சோனாலி பற்றி இந்திப் பட உலகில் ஏகப்பட்ட கிசு கிசுப்புக்கள். சமீபத்திய கிசு கிசுப்பு இது.

'சர்பரோஷ்' என்ற படத்தில் அமீர்கானின் ஜோடியாக நடிக்க வைத்தார் அஜய் தேவ்கான். படம் வெற்றிபெற்றது.

இந்தப் பட வெற்றிக்கு தானே காரணம் என்று தம்பட்டம் அடித்தார் சோனாலி. அதன் விளைவாக தனது அடுத்த படத்தில் சோனாலிக்கு அஜய் வாய்ப்புக் கொடுக்கவில்லை.

ஆனாலும் அமீர்கானின் மனதில் சோனாலி இடம் பிடித்துவிட்டார். அதனால் அமீர்கானே சோனாலிக்கு சில படங்களில் சிபாரிசு செய்துள்ளார்.

விளையாட்டு வீரர்களுடன் லீலைகளில் ஈடுபடுவதும் சோனாலிக்கு பொழுதுபோக்கு. அஜய் ஜடேஜாவுடன் சுற்றிய சோனாலி, பிரபல டென்னிஸ் வீரர் மகேஷ் பூபதியுடனும் அடிக்கடி சந்திப்புக்கள் நடத்துகிறாராம்.



மோனிகா பேடி
படம் : மின்சாரக் கண்ணா

### பிடித்தவை 20

கடந்த ஆண்டு ஒரு கலக்குக் கலக்கியவர் கௌசல்யா.

இந்த ஆண்டு குறிப்பிடத்தக்க வெற்றிப் படம் எதிலும் நடிக்கவில்லை.

கார்த்திக்குடன் நடித்துள்ள 'சந்தித்த வேளை' படம் வெளியானதும் மறுபடி ஒரு சுற்று வரலாம் என்று நம்புகிறார்.

கௌசல்யாவுக்கு பிடித்த இருபது இனியவை எவை என்று பார்க்கலாமா?

(1) பத்து விரல்களுக்கும் விதம் விதமான மோதிரம் அணிவது. (2) எந்த விஷயத்தையும் மறைக்காமல் பேசுபவர்கள். (3) பால் வாசனை. (4) வித்தியாசமான புத்தகங்கள். (5) மெலோடி இசை. (6) ஐஸ்கிரீம். (7) நண்பிகளது கிண்டல். (8) இறுக்கமான உடை. (9) பகலில் நடந்தபடி கனவு காண்பது. (10) உடற் பயிற்சி. (11) அம்மாவுடன் அரட்டை. (12) தலையணையை அணைத்தபடி தூங்குவது. (13) மழை வருவதை ஜன்னல் வழியாகப் பார்ப்பது. (14) குழந்தைகளுடன் விளையாடுவது. (15) சந்தோசமாக செலவு செய்வது. (16) ஒல்லியா இருப்பவர்கள். (17) கடைத்தெருவில் ஹாயாக நடந்து செல்வது. (18) எப்போதும் சுறு சுறுப்பாக இருப்பது. (19) அதிகாலைக் குளியல். (20) ரி.வி. விளையாட்டு.

### சினிமா / விமர்சனம்

**விஜய்யை காதலித்து ஏமாற்றம்**

39/100 — நமது விமர்சனக் குழு

**படம்:** மின்சாரக்கண்ணா

**நடிப்பு:** விஜய்-ரம்பா, மோனிக்கா பேடி., குஷ்பு, மணிவண்ணன், மன்சூரலிகான், கரண்.

**இயக்கம்:** கே.எஸ்.ரவிக்குமார். **இசை:** தேவா.

பெரும் பணக்காரரான மணிவண்ணனின் மகன் விஜய் மோனிக்கா பேடியை காதலிக்கிறார். மோனிக்கா பேடியின் அக்கா குஷ்புவுக்கு ஆண்வாடையே பிடிக்காது. குஷ்புவின் மனதை மாற்றி மோனிக்கா பேடியை கைப்பிடிக்க, ஏழை போல குஷ்பு வீட்டுக்கு வருகிறார் விஜய்.

இதுதான் கதை. இதனை வைத்துத்தான் தனது பாணியில் கலகலப்பாக படத்தை கொண்டு போயிருக்கிறார் கே.எஸ்.ரவிக்குமார்.

'கனவே கலையாதே', 'பூவெல்லாம் கேட்டுப்பார்', ஜோடி. போன்ற படங்களின் அதே கதைதான் இதுவும். எல்லோரும் எங்கோ ஒரு ஆங்கிலப் படத்தில் இருந்துதான் மூலக்கதையை சுருட்டியிருக்கிறார்கள் என்பது நூறுசத வீத உண்மை.

மோனிக்கா பேடி தமிழுக்கு அறிமுகம். கவர்ச்சி விருந்தோடு கண்கலங்கி நடிக்கவும் கற்று வைத்திருக்கிறார். விஜய்யைக் காதலித்து ஏமாறும் பாத்திரம் ரம்பாவுக்கு. குட்டைப் பாவாடையோடு தோன்றி மிரட்டுகிறார்.

'படையப்பா' வில்லி ரம்யாகிருஷ்ணனுக்கு கிடைத்த மரியாதையை மனதில் வைத்து குஷ்புவின் பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனாலும் அந்தளவுக்கு வரவில்லை. குஷ்பு இப்படத்தில் சொந்தக் குரலில் பேசியிருக்கிறார்.

மன்சூரலிகானுக்கு வித்தியாச வில்லன் பாத்திரம். வில்லனே இல்லாத வில்லன். மொத்தத்தில் பொழுதுபோக்குக்கு ஏற்ற படம்.




ராஜன-பாபிலோனா
படம் : தோ என்ட்ரி

www.padippakam.com

## மினி சினி

ார்த்திபனை வைத்து ாரதி கண்ணம்மா' டத்தையும், முரளியை வைத்து 'பொற்காலம்' டத்தையும் இயக்கிய சேரன், தற்போது ார்த்திபன்-முரளி இருவரையும் வைத்து 'வெற்றிக் கொடி கட்டு' என்ற டத்தை இயக்குகிறார்.

றலோ' படத்தில் பிரசாந்திற்கு ஜோடி ாக நடித்து வரும் ப்ரீத்திதான், 'குட்லக்' டத்திலும் பிரசாந்திற்கு ஜோடியாக டிப்பதாக இருந்தது. ஆனால் இப் பாது ப்ரீத்தி வேடத்தில் இந்தி நடிகை யூரி காங்கோ நடிக்கிறார். இப் படத் ின் படப்பிடிப்பு கப்பல் ஒன்றிலேயே டக்கவுள்ளது.

அஜித்குமார் இரட்டை வேடங்களில் அசத் ிய 'வாலி' படம் தெலுங்கில் அதே பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. தற்கு முன் அஜித்தின் 'ஆசை', 'காதல் கோட்டை' போன்ற படங்கள் தெலுங் ில் மொழி மாற்றப்பட்டு வெளியாகின.

* சி.சுந்தர் இயக்க, முதன் முறையாக குஷ்பு இரட்டை வேடத்தில் நடிக்கும் 'பார்வை' படம் 'அனாமிகா' என்ற நாவலைத் தழுவி எடுக்கப்பட்டு வருகிறது.

* பிரபுவை வைத்து 'தாலாட்டுக் கேக்குதம்மா', 'உத்தம ராசா' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ராஜ் கபூர். இவர் விரைவில் மீண்டும் பிரபுவை வைத்துப் படமொன்றை இயக்கவுள்ளார்.

* பத்ரன் இயக்கத்தில் மோகன்லால் நடிக்கும் மலையாளப்படம் 'ஒலிம்பியன் அந்தோனி அடம்'. இப்படத்தில் மோகன்லாலுக்கு ஜோடியாக, ஒரு பாடசாலை ஆசிரியை வேடத்தில் மீனா நடிக்கிறார்.

* அகத்தியன் இயக்கும் 'பூப்போல மனசு' படத்தைத் தயாரித்துவருகிறார் பிரகாஷ்ராஜ். இதை அடுத்து இவர் மணிவண்ணன் இயக்கும் படத்தைத் தயாரிக்கவுள்ளார்.

* 'கண்ணோடு காண்பதெல்லாம்' படத்தில் அர்ஜுன் நடித்த வேடத்தில் முதலில் நடிக்க இருந்தவர் டாக்டர் ராஜசேகர். இப்படத்தின் தெலுங்கு உரிமை தனக்கு வேண்டும் என ராஜசேகர் நிபந்தனை விதித்ததால் அர்ஜுன் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

* நடிகர் திலகம்-அஜய் நடித்த 'பூப்பறிக்க வருகிறோம்' படத்தை இயக்கிய ஏ.வெங்கடேசன் அடுத்து இயக்கும் படத்தை சின்னி ஜெயந்த் தயாரிக்கவுள்ளார்.

* இதுவரை தத்துவப்பாடல்களையும், கானாப் பாடல்களையும் மட்டுமே பாடி வந்த தேனிசைத் தென்றல் தேவா 'அதாண்டா இதாண்டா' படத்திற்காக பைரவியுடன் இணைந்து டூயட் பாடலொன்றைப் பாடியுள்ளார்.

## அதே ஜோடி

அஜித்குமார்-சிம்ரான் நடித்த 'வாலி' படம் மகா வெற்றி. அதே ஜோடி தற்போது நடிக்க ஒப்பந்தமாகியுள்ள படம், 'உன்னைக் கொடு என்னைத் தருவேன்'.

பாக்யராஜிடம் உதவி இயக்குநராக இருந்த கவி. காளிதாஸ் என்பவர் இதனை இயக்குகிறார். இசை: எஸ்.ஏ. ராஜ்குமார்.

விஜயகுமார், நாசர், ரமேஷ்கண்ணா, வையாபுரி, விவேக், சார்லி ஆகியோரும் நடிக்கின்றனர்.

'புது வசந்தம்', 'நாட்டாமை', 'பூவே உனக்காக' உட்பட பல வெற்றிப் படங்களை தயாரித்த சூப்பர் குட் பிலிம்ஸ் இதனைத் தயாரிக்கிறது.

## ரஜினியுடன் நடிக்க ஆசை

'ஹேராம்' படத்தில் கமலுடன் நடித்து வருகிறார் ஷாருக்கான். இந்திப் பட உலக முன்னணி நாயகனான ஷாருக்கானுக்கு தமிழ்ப் பட உலகில் கமல், ரஜினி இருவரையும் பிடிக்கும்.

கமலுடன் நடித்துவிட்டார். அடுத்து ரஜினியுடன் நடிக்க வாய்ப்புக் கிடைத்தால் நடிப்பாராம்.

கமலின் அடுத்த படத்தில் ஷாருக்கானுக்கு வாய்ப்புக் கிடைத்தால் தட்டமாட்டாராம். இந்திபட வேலைகளை ஒத்தி வைத்துவிட்டு வந்து நடித்துக் கொடுக்கவும் தயாராக உள்ளாராம்.

'தமிழ்ப்பட ரசிகர்கள் நான் நடித்த 'உயிரே' படத்திற்கு வெற்றி தேடித்தந்தார்கள். ரசனை நிறைந்தவர்கள். அவர்களது அபிமான கதாநாயகர்களுடன் இணைந்து நடிப்பதற்கு மகிழ்ச்சியுடன் தயாராக இருக்கிறேன்' என்று கூறியுள்ளார் ஷாருக்கான்.

ஷாருக்கானும், ஜூகிசாவ்லாவும் இணைந்து, 'பிர்பிதில் ஹை இந்துஸ்தானி' என்ற படத்தில் நடிக்கின்றனர். ஒரு காட்சியில் இருவரும் சீனர்கள் போல நடிக்கிறார்களாம். ஷாருக்கானை சீன ஒப்பனையில் பார்த்தபோது ஜூகி வாய் விட்டுச் சிரித்துவிட்டாராம்.



"உலகம் என்பது இனிமை-உன்
உள்ளம் எப்போதும் இளமை!
வருவது வரட்டும் மனமே-தினம்
வாழ்வதுதான் உன் கடமை!"

சிவாஜி-அஜய்
படம் : பூப்பறிக்க வருகிறோம்

## சுமார்தான்

'மின்சாரக் கண்ணா'வும் எதிர்பார்த்தளவு பிய்த்துக் கொண்டு போகவில்லை. சுமாராகத் தான் ஓடுகிறது. இதற்கு விஜய் காரணமல்ல.

ஒரே காலகட்டத்தில் ஒரே மாதிரியான கதையில் மின்சாரக் கண்ணாவும் வெளியாகியுள்ளது தான் காரணம்.

பாசில் இயக்கத்தில் ஷாலினியுடன் நடித்துவரும் படத்தைத்தான் அடுத்து எதிர்பார்க்கிறார் விஜய்.

## காதோடு சொல்லுகிறோம்

எப்போது கல்யாணம்? என்று பூ நடிகையிடம் கேட்டாராம் ஒரு நிருபர். 'எப்போது, யாருடன் என்பதெல்லாம் தெரியாது' என்று கூறினாராம் பூ நடிகை. சுந்தரமான இயக்குநர் தன்னைத் திருமணம் செய்வார் என்ற நம்பிக்கை பூ நடிகைக்கு வாடி வருகிறதாக்கும்.

மூன்றெழுத்து 'வி' நடிகைக்கு இப்போது பட வாய்ப்புக்கள் குறைவு. அதனால் வேறு விதமான சம்பாத்தியத்துக்கு சென்று விட்டார். தெலுங்கு தொழில் அதிபர் ஒருவருடன் இரண்டறக் கலந்து விட்டாராம்.

சகலகலாவல்லவ இயக்குநரின் கண்டுபிடிப்பான தாஜ் மஹாலோடு தொடர்புடைய பெயர் கொண்ட நடிகை அவர். தான் நடித்த படம் ஒன்றைக் காண்பதற்கு திரையரங்குக்குப் போனாராம். ஒப்பனை இல்லாமல் தன்னை யாரும் அடையாளம் காணமாட்டார்கள் என்று நினைத்துவிட்டார். ஆனால் ரசிகர்கள் சிலர் கண்டு பிடித்து விட்டனர். அவ்வளவுதான், நடிகையை சூழ்ந்து கொண்டு பிய்த்து உதறிவிட்டனர். திரையரங்க ஊழியர்கள்தான் காப்பாற்றி காரில் ஏற்றி அனுப்பினார்களாம். நடிகைக்கு உடம்பே புண்ணாகி விட்டதாம். அன்புத் தொல்லை இருக்க வேண்டியதுதான். அதற்காக இப்படியா? என்று புலம்புகிறார்.

'கோபி' நடிகை ஒப்பந்தமான படங்களில் இருந்து தூக்கப்படக் காரணம் அவரது அணுகுமுறைதானாம். ஒரு சில கதாநாயகர்கள், இயக்குநர்களை மட்டும் அனுசரிக்கிறாராம். ஏனையோர் அவரை 'டிஸ்கஷனுக்கு' அழைத்தபோது முரண்டுபிடித்தாராம். அதனால்தான் தூக்கிவிட்டார்களாம்.

வெற்றிகாந்த் நடிக்கும் பலமான அரசின் பெயர் கொண்ட படத்தில் நடிக்க ஐஸ் அழகியை அணுகினார்கள். இளம் நடிகரா? என்று விசாரித்தாராம். பின்னர் 75 இலட்சம் ரூபா ஊதியம் கேட்டாராம். ஒப்பந்தம் செய்யப் போனவர்கள் ஒரே ஓட்டமாய் திரும்பி வந்து விட்டனராம்.





கஜோல்



முரளி-சிம்ரான்
படம் : கனவே கலையாதே

## கனவு கலையுமா?

'கனவே கலையாதே' வசூலுக்கு பாதகமில்லாது ஓடி முடித்துவிட்டது. போட்ட முதலுக்கு பாதகம் ஏற்படுத்தாத நாயகன் என்ற பெயரைத் தக்கவைத்திருக்கிறார் முரளி. சிம்ரானுக்கும் 'கனவே கலையாதே', 'துள்ளாத மனமும் துள்ளும்', 'வாலி' என்று தொடர்ந்து பல வெற்றிப் படங்கள். தற்போது பிரசாந்துடன் 'ஜோடி' படமும் நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது.

தமிழில் நம்பர் 01 இடத்தை பிடிப்பதுதான் சிம்ரானின் கனவு. இந்தக் கனவும் கலையாதோ?

## தீபாவளிப்படங்கள்

தீபாவளிக்கு பந்தயக் களத்தில் இறங்க பிரபல இயக்குநர்களது படங்கள் தயாராகிவருகின்றன. ஷங்கரின் 'முதல்வன்', பாரதிராஜாவின் 'தாஜ்மஹால்', மணிரத்னத்தின் 'அலைபாயுதே', ராஜீவ் மேனனின் 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்', கமல் நடித்து இயக்கும் 'ஹேராம்' போன்ற படங்கள் தயார்.

விஜயகாந்த் நடிக்க புதிய இயக்குநர் பாரதிகணேஷ் இயக்கியுள்ள படமான 'கண்ணுபடப்போகுதய்யா', பிரசாந்த் நடிக்கும் 'ஹலோ', பிரபு நடிக்கும் 'திருநெல்வேலி' போன்ற படங்களும் தீபாவளி பந்தயத்துக்கு தயாராகி வருகின்றன.

## படப்பிடிப்பில் கிளு கிளுப்பு
## இளைஞர்கள் சில்மிஷம்

விஜயகாந்த் நடித்துவரும் படம் வல்லரசு. இப்படத்துக்காக கலவரக் காட்சி ஒன்று படமாக்கப்பட்டது. பொலிஸ் அதிகாரியான விஜயகாந்த் கலவரத்தை அடக்குவதுபோல காட்சி அமைக்கப்பட்டது.

இக் காட்சியில் நடிக்க ஆயிரம் துணை நடிகர்கள் தேவையாக இருந்தனர். ஆனால் கோவிந்தாவின் இந்திப் படம் ஒன்றுக்காக துணை நடிகர்கள் போய்விட்டதால் ஐநூறு பேர்தான் கிடைத்தனர்.

ஆள் பற்றாக்குறையைப் போக்குவதற்காக படப்பிடிப்பு நடைபெற்ற பக்கத்து கிராமத்தில் இருந்து இருநூறு பேரைக் கூட்டிவந்து காட்சியை எடுத்தார்கள்.

கலவரத்தை அடக்கும் காட்சி என்பதால் கூட்டத்தின்மீது தண்ணீர் பாய்ச்ச, துணைநடிகைகள் தெப்பமாக நனைந்து போனார்கள்.

துணியெல்லாம் நனைந்துபோனதால் துணை நடிகைகள் கிளுகிளுப்பாக காட்சியளித்தனர். கிராமத்தில் இருந்து வந்த இளைஞர்கள் ஜொள்ளுவிட ஆரம்பித்துவிட்டனர். அத்தோடு நிறுத்தாது கூட்டத்தோடு கூட்டமாக சில்மிஷம் செய்யவும் ஆரம்பித்துவிட்டனர்.

இதனைப் பார்த்த விஜயகாந்த் மைக்கைப் பிடித்து, "உங்களுக்கு சினிமாவில் நடிக்க ஒரு அருமையான சந்தர்ப்பம் தந்திருக்கிறோம். அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். இந்த மாதிரியான வேலையெல்லாம் செய்யாதீர்கள்" என்று ஆவேசமாகப் பேசிய பின்னர்தான், நிலைமை சீரானது. படப்பிடிப்பும் தொடர்ந்து நடந்து முடிந்தது.



படிப்பகம்

www.padippakam.com

# சரித்திரத்தில் அழியாத அவலம்

கணப்பொழுதில் குத்தியெழுந்து
கார் முகிலுள் மறைந்து போனது 'கிபிர்'
தொடர்ந்து வந்த அதிர் வோசை
தொட்ட உள்ள மெல்லாம் மேகத்தில்.
•••
"ஐயோ" எங்கோ அவன்
அடித்துப் போட்டான் ஐயோ!
ஆர் பெத்த பிள்ளைகளோ?
ஆரார் வீட்டு முற்றங்களோ?
•••
மந்துவில் சந்தியின் சந்தையாம்!
மடிந்தவர் எண்ணிக்கை இருபதாம்!
இன்னும் எத்தனையோ தெரியாதாம்!
எண்ணுதல் இன்னும் தொடர்கிறதாம்!
•••
ஐயையோ என் மனமெல்லாம் கனக்குதே
மிதிக்கிறேன் மிதிவண்டியை இடம்
நோக்கி
முப்பது நிமிட ஓட்டத்தில் அடைந்தேன்
முற்றும் அழிந்து போய்க்கிடந்த
அவ்விடத்தை!
•••
எப்படி யதை வர்ணிப்பேன்?
உலகமறிய இப்படியொரு காட்சியை
எப்படி நான் வர்ணிப்பேன்?
இதயத்தில் வார்த்தைகள் இல்லை!
•••
எங்குமே சதைக் கோளங்கள்
ரத்த வெள்ளங்கள் அவல ஒலங்கள்
எப்படி நடக்கும் பாதங்கள்...?
சதசதப்பை உணர்ந்து கூசிநிற்கும்
தலை குனியும்!
•••
பாத அடியினிலே அலைந்த கண்கள்
பார்த்த காட்சியதால் நீர் சிந்தியது
வயிறு விட்டுப் பிரிந்த குடலங்கு
கயிறுகளாக சிதறிக் கிடந்தது.
•••
எட்டி நடந்து சிதைந்து கிடந்த
கொட்டிலுனுள் புகுந்த வேளை;
அப்பப்பா எப்படி உரைப்பேன்!
உரைக்கத்தான் வேண்டும் உலகறிய...!
•••
கொத்தாக விழுந்து கிடந்த மூளையை
கொத்தியே நின்றதம்மா கோழிக்குஞ்சுகள்
முழுதாக கண் மூக் கெல்லாம்
முகமிழந்து நிலத்தில் கிடந்ததம்மா
•••
உலையேற உழைத்த உடலெல்லாம்
உருக்குலைந்து ஊனம் வடித்தம்மா!
கருணை மாத ாசிலை கூட
கருகித்தான் போனதம்மா!
•••
அன்னை தந்தை உறவு உருத்தேடி
அலையுது ஈரெஞ்சுப்(ஈரஞ்சு) பாதமொன்று!
என்ன இனி இங்கு அதற்குண்டு?
இப்படித்தான் இங்க தமிழ் நிலையுண்டு.
•••
ஆடு மாடு கூட அந்த
அநியாயத்திற்கு தப்பவில்லை!
கூடு கூடி வாழும் கோழிக்குஞ்சும்
கூடத் தப்பவில்லை.
•••
விலங்குகளோடு மனிதரும்
விலங்குகளாய்
சிதைந்து கிடந்த அக்கோலம்
•••
ஒரு நாடென்று சொன்னால்
ஓராயிரம் கொடுமை யெதற்கு?
ஒரு கொடியென்று சொன்னால்
ஒப்பாரி ஓலங்க ளெதற்கு?
•••
உறவுகளே! உலகறிய விளக்கவல்லீர்
நீரே!
உண்மையைச் சொல்லுங்கள் உலகம்
விழிக்க.
தொடரும் அவலத்தை எடுத்து
சொல்லுங்களேன்!
இடர்கள் துடைக்க இணைந்தே
முயலுங்கள்!

து.கருணாகரன், வத்தியூரான்.

## தேசம்

### தீ மூட்டப்படுகிறது

இங்கும்-பலருக்கு
'பிடில்' வாசிப்பில்
பரியம்.
***
வேர்கள்
செந்நீர் விரும்பிய
விளைவு...
பூக்களிலே-புள்ளியாய்
புதுரத்தம்!
***
தினமும்
சேவலின்-கூவலை
சிறையிட்டு-விட்டு
அபாயச் சங்கூதும்
அமானுஷ்யம்... ஏது?
***
பாலா வகுப்புப்
பழம் பொறுக்கலில்
பரிசு வேண்டாம்
'பம்பர்' வருகையில்
பங்கர் பதுங்கலில்
பயிற்சி கொடுங்கள்.

மனோ தாமோதரன்.




## துணிச்சலான கமராக்காரர்

↑ ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும் என்பது முதுமொழி. சூறைக்காற்றில் கட்டடக் கூரையே பறக்கிறது பாருங்கள். இந்தப் பயங்கர சூறைக்காற்றில், படப்பிடிப்பாளர் துணிச்சலாக நின்று படம் எடுத்ததுதான் இதில் பெரிய சாதனை.

1962இல் அமெரிக்காவில் சான்.பிரான்ஸிஸ்கோ நகரக்கு அருகில் இந்தக் காட்சி பதிவானது.

## தேன் கிண்ணம்

### மறக்காமலிருப்பாயா?

முதன் முதலில்
எனக்கு
வானத்தில் பறக்க
கற்று
கொடுத்தவன்!
0-0
கனவுலகை
எனக்கு
அறிமுகப்படுத்தியவன்!
0-0
வேர் அறுந்து
ஊர்
அறுந்து போகையிலும்
உறவு
அறுந்து போகாமல்
என்னை
பத்திரப்படுத்தியவன்!
0-0
காற்றுத்
தொடுகையிலும்
தூங்கும் போது
ஒட்டிக் கொள்ளும் கடல் மண்
ஸ்பரிசத்திலும்
அவன்
பாசத்தை உணர்கிறேன்!
0-0
எல்லாவற்றையும்
நினைத்திங்கு-நான்
கலங்கிட
மறந்து விடு-என்று
மறக்க முடியாத
வார்த்தையை-மறுதலித்தவனே!
0-0
காதலை
என்னுள்
விதைத்தவன்-நீ
காதல் பயிரை
அழித்ததும்-நீ
நான்
என்ன செய்தேன்
என்னை
ஏன் அழித்தாய்?
0-0
பிரிவதெல்லாம்
சேர்வதற்குத்தான்
என்ற
சேரவேண்டிய-இடம்
சேர்ந்த பின்
பிரிந்தவனே!
0-0
நினைவிலிருந்திக் கொள்!
மறந்தது
நானாக மட்டும்
இருக்கட்டும்!
மணப்பவளையாவது
மறக்காமலிருப்பாயா?

எஸ்.சிவன்-லண்டன்.

## நில்-கவனி-முன்னேறு

அடிப்படையான சில விஷயங்களை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

1. நெருக்கமான உறவினர்களோ, நண்பர்களோ சில நேரங்களில் சுதந்திரமாகத் தங்கள் கருத்துக்களை வெளியிட்டு விடுவார்கள். குறிப்பிட்டவர்களிடையே புரிந்துகொள்ளுதல் எவ்வளவு அளவு இருக்கிறது என்பது இதில் முக்கியம்.

2. இயல்பாகவே யதார்த்தமாகப் பேசும் பழக்கம் உடையவர்களும் உண்டு. எனவே, ஒருவருடைய இயல்பு என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதல் அவசியம்.



3. உணர்ச்சியின் வேகம், கோபம், எரிச்சல் காரணமாகக் கட்டுப்பாட்டை இழந்து சிலர் பேசக்கூடும். இதுபோன்ற நேரங்களில் குறிப்பிட்ட சூழ்நிலை என்ன, எத்தகையது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

4. ஏற்கெனவே யாராலோ புண்பட்டவர் (அது நாமாகக் கூட இருக்கலாம்) நம்மைப் புண்படும் அளவுக்கு நம்மிடம் பேசக்கூடும். இங்கே வினை, எதிர்வினை (Action and Reaction) என்ற விதி செயல்படுகிறது.

இனி புண்பட்டவர்கள் எப்படி அந்தச் சூழ்நிலையை- அனுபவத்தை எதிர்கொள்ள வேண்டும் என்று யோசிக்க வேண்டும். ஏனென்றால் மற்றவர்கள் நமமிடம் நடந்து கொள்வதை முற்றிலுமாக நாம் நிர்ணயிக்க முடியாது. அவர்கள் ஆளுமையின் வளர்ச்சி, அவர்கள் பேச்சு கலாசாரம், பண்பாட்டு வளர்ச்சி இவற்றிற்குத் தக்கவாறுதான் அவர்கள் பேசுவார்கள்.

அல்லது விளையாட்டாகவும், இன்னொருவருக்கு 'புண்படுத்துபவை'யாகவும் இருப்பதற்கு இதுதான் காரணம்.

பொதுவாகப் பிறரது சுடுசொற்களைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தால் மனம் பலவீனம் அடைகிறது என்று பொருள். நாம் அறிந்தோ அறியாமலோ நாமே யாரையாவது புண்படுத்தி இருக்கலாம் என்ற பொதுவிதியை நமக்கும் பொருத்திப் பார்த்தால் நாமும் யாரையும் குற்றம்சாட்டாமல் இருக்கப் பழகிக் கொள்ள முடியும்.

நடைமுறை ரீதியாகப் பார்த்தால், நாம் சுற்றியுள்ள மனிதர்களையும், உறவினர்களையும் விட்டு விலக முடியாது.

அதேசமயத்தில் அவ்வப்போது ஏதாவது சந்தர்ப்பங்களில் அவர்கள் பேச்சுக்களில் 'நாம் பாதிப்பு அடைந்ததாகவோ, நாம் புண்படுத்தப் பட்டோம்', என்றோ நினைப்பவர்கள் முடிந்தால் புண்படுத்தியவரிடமே மனம் திறந்து பேசி விடலாம். தனிமையில் மட்டுமே அதையும் செய்ய வேண்டும்.

சில சமயத்தில் நம்மைப் புண்படுத்தி இருக்கிறார் என்பதைக் கேள்விப்பட்டால் அவருக்கே அது அப்போதுதான் தெரிய வரலாம். ஏனென்றால், 'புண்படுத்தப்பட்டோம்' என்ற வார்த்தையே நம்மிடமிருந்துதான் வருகிறது. (Subjective)

'என்னை யாரும் புண்படுத்திவிட முடியாது' என்று ஒரு பாறையின் உறுதியை மனதில் வளர்த்துக் கொள்வது மிகப் பெரிய பாதுகாப்பாகும்.

இதைத்தவிர, நாம் புண்படுத்தப்பட்டதாய் நினைப்பதற்கு என்ன காரணம் என்று நம்மிடமே தேடவேண்டும்

நம்முடைய ஆளுமை, வளர்ச்சி, மனமுதிர்ச்சி, மனநிலை, சூழ்நிலை என்று சில அம்சங்களின் அடிப்படையில் இதைச் செய்ய வேண்டும். வார்த்தைகள் கூட சில சந்தர்ப்பங்களில் ஒருவருக்கு நகைச்சுவை.

காலம் என்று ஒன்று இருக்கவே இருக்கிறது. அது கொஞ்சம் கொஞ்சமாக எந்த ரணத்தையும் ஆற்றிவிடும் ஆற்றல் கொண்டது. நல்ல விஷயங்களை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளலாமே!

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கானா'

10.10.99 முதல் 16.10.99வரை

**மேடம்:**
பல மாறுபட்ட முடிவுகளை எடுக்கும் செயல் முறைகள் வேகமாக நடைபெறும். தூர இடத்து செய்திகள் வந்து சேரும். அச்சுவினிக்காரருக்கு நோய் துன்பங்கள் ஏற்படலாம். பலரின் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்காது. அலைச்சல் தொடரும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 16, 11.

**இடபம்:**
உடலில் சிக்கல்கள் தொடரும். பணவரவு, உறவினர் வழியில் உதவிகள் என்பன ஏற்படும். திருமணத்தடைகள் ரோகிணிக்காரருக்கு விலகும். மனதில் உற்சாகம் பிறக்கும். எதிர்ப்புக்கள் நீங்கும். மிருகசீரிட நட்சத்திரருக்கு பணவரவுண்டு.
அதிஷ்ட நாட்கள்: புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 15, 16.

**மிதுனம்:**
தொழில் சிறப்படையும். பண வசதிகள் சேரும். தூர இடத்துப் பயணம் நன்மையைக் கொடுக்கும். மனதில் புதிய தி ங்கள் நடைமுறைக்கு வரும். காதல் கைகூடும். திருவாதிரைக்காரர் நற்சிறப்புக்களைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம்: இளபச்சை; எண்: 06.
அதிஷ்ட திகதிகள்: 12, 15.

**கடகம்:**
மனதில் சஞ்சலம் குடிகொள்ளும். பலவிடயங்கள் இழுபறியான நிலையாக இருக்கும். பயண அலைச்சலும் குடும்பத்தில் தலையிடியான விடயங்களைக் கொடுக்கும். ஆயிலிய, பூசக்காரர் சிக்கல்களை குறைத்துக் கொள்ள வேண்டும்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: ஒரேஞ்சுவர்ணம்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள்: 13, 16.

**சிம்மம்:**
மனதில் சந்தோஷம் நிலவும். திடீர் பயணத்தால் பணவரவு காணப்படும். தொழில் சிறப்புடன் அமையும். வசதிகள் பல கிடைக்கப்பெறும். மனைவியால் எடுத்த கருமங்கள் கைகூடும். மக, உத்தரக்காரர்கள் நன்மையடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: மஞ்சள்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள்: 10, 12.

**கன்னி:**
யோசனைகள் வாட்டும். புதியவர்களின் வருகையால் மனதில் மகிழ்ச்சி யான நிலையைத் தரும்.எதிர்பார்த்த வெற்றி கணக்கத்துடன் நடைபெறுவதால் பணச்செலவுகள் அதிகரிக்கும். அத்த நட்சத்திரப் பெண்காரருக்கு சிறப்பான-வசதியான நேரமாகும்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம்: சாம்பல்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள்: 14, 11.

**துலாம்:**
குடும்பத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறும். வேலைகள் அதிகரிக்கும். பயணநிலை ஏற்படும். சிக்கல்கள் பல விலகும் எதிர்பார்த்த விடயங்கள் தாமதத்துடன் நடைபெறும் சுவாதி, விசாகக்காரர் வசதிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 12, 15.

**விருட்சிகம்:**
நோய் துன்பங்கள் குறையும். பிள்ளைகளின் உதவிகள் கிடைக்கும். நிம்மதி நிலையும் ஆலய தரிசனமும் கிடைக்கும். வெற்றிகள் கிட்டும். பெண்கள் அவதானமாக நடக்கவேண்டும். கேட்டைக்காரருக்கு பண விடயங்கள் கைகூடும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 10, 15.

**தனுசு:**
கல்வி தொழில் சீரடையும். பயண வெற்றி கிட்டும். முயற்சிகளுக்கு வெளி உதவிகள் கிடைக்கும். வார இறுதியில் பண வசதி கிடைக்கும். பிரச்சனைகளுக்குத் தீர்வு கிட்டும். மூலக்காரர் முன்னேற்றத்தைப் பெறுவார்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம்: மருண்; எண்: 08.
அதிஷ்ட திகதிகள்: 15, 16.

**மகரம்:**
பயண வெற்றியும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் கிட்டும். பலரின் உதவிகள் கிடைக்கும். பிள்ளைகளின் உதவிகள் கிட்டும். முன்னேற்றமான விடயம் சந்தோஷத்தைக் கொடுக்கும். புதிய தொழில் முதலீடுகள் காணப்படும். அவிட்டக்காரர் சந்தோஷமான நிலை அடைவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 14, 12.

**கும்பம்:**
வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். மனதில் சிக்கல்கள் தொடரும். மனதில் வெறுப்பு என்பன காணப்படும். பயணம் அலைச்சல் கொடுக்கும். பெண்கள்-கவனமாக இருக்க வேண்டும். பூரட்டாதி சதயக்காரருக்கு சிக்கல்கள் தொடரும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 11, 14.

**மீனம்:**
உறவினர்களது உதவியும் சுபசெய்திகளும் காரியசித்தியும் கிட்டும். கல்வி, தொழில் முயற்சிகள் சீர்பெறும். பெரியவர்களது உதவியுடன் தொழில் முயற்சி வெற்றி தரும். பயண வெற்றி கிடைக்கும். ரேவதி, உத்திரட்டாதிக்காரர் வெற்றிகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: றோஸ்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 12, 15.



படிப்பகம்

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## புடவை எடுப்பது எப்படி?



புடவை தேர்ந்தெடுக்கும்போது கவனிக்க வேண்டியவை:

நாளுக்கு ஒரு டிஸைன் பொழுதுக்கு ஒரு ஃபாஷன் என்ற நிலையில் எவ்வளவோ நவீன உடைகள் வந்து கொண்டிருந்தாலும் புடவைக்கு இருக்கும் மவுசு இன்னும் குறைந்து போய் விடவில்லை. எப்படிப்பட்ட உடல் வாகைக் கொண்ட பெண்களுக்கும் புடவை பொருத்தமாக- அழகாகத் திகழ்கிறது. புடவையும் அழகு, பெண்ணும் அழகு என்றாலும், முறையாகப் புடவை கட்டினாலே அழகு மெருகேறும்.

விசேஷ நாட்களில் பெண்கள் உடுக்கச் சிறந்தது காஞ்சிபுரம் பட்டுதான். இதர வகை பட்டுப்புடவைகள் அதிக நாட்கள் உழைக்காது.

புடவையைத் தேர்ந்தெடுக்கும்போது விலைக்கு முக்கியத்துவம் கொடுப்பதைவிட உடல் நிறத்திற்கும் உடல் வடிவத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

நல்ல நிறம் இருப்பவர்களுக்கு எல்லா நிறப்புடவையும் பொருத்தமாகும். நிறம் குறைந்தவர்களுக்கு கறுப்பு, ஊதா, அடர்ந்த மெரூன் போன்றவை பொருத்தமாக இருக்காது.

அதிக உயரம் கொண்டவர்கள் அகலமான கரை கொண்ட புடவைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உயரம் குறைந்தவர்களுக்கு அகலம் குறைந்த கரை, சிறிய பூக்களில் டிசைன் போட்ட புடவைகள் பொருத்தமாகும்.

குண்டாகத் தோன்றுபவர்கள் பட்டு, ஜொர்ஜெட், ஷிபான் புடவைகளைக் கட்டினால் அதிக குண்டாகத் தோன்றாது. உடல் மெலிந்து காணப்படுகிறவர்கள் பருத்தி மற்றும் காஞ்சிபுரம் புடவைகளைக் கட்ட வேண்டும்.

சீதோஷ்ண நிலைக்குத் தக்கபடி புடவை கட்ட வேண்டும். கோடை காலத்தில் பருத்திப் புடவை ஏற்றது. மழை காலத்தில் எளிதில் உலரக்கூடிய, தண்ணீர் பட்டாலும் உடலோடு ஒட்டாத புடவைகளைக் கட்ட வேண்டும்.

புடவைகளைத் தேர்வு செய்வதைப் போல அதைப் பராமரிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். புடவைகளை வெளியே சலவைக்குக் கொடுப்பதைவிட வீட்டிலே சலவை செய்வதே சிறந்தது.

பட்டு, உயர்ந்தவகை பட்டுப் புடவைகளுக்கு குளியல் சோப் போட்டுத் தேய்த்துக் கழுவி,நிழலில் காயவைத்து உலர்த்திப் பயன்படுத்தலாம். பட்டுப்புடவைகளைக் காற்றுப் புகும் இடத்தில் மடித்து வைத்து பாதுகாக்க வேண்டும்.

## சமையலறைச் சமாச்சாரம்



* பச்சைக்கடலை, கொண்டைக்கடலை போன்றவைகளை மூன்று மணிநேரம் ஊறவைத்து விட்டு வேக வையுங்கள் விரைவாக வெந்துவிடும்.
* வாழைக்காயை நறுக்கிய உடனே தண்ணீரில் போட்டு வையுங்கள். நிறம் மாறாது. ருசி அதிகரிக்கும்.
* பாயாசம் தயார் செய்யும்போது முந்திரிப் பருப்பு இல்லாவிட்டால், வேர்க்கடலையை நெய்யில் வறுத்து சேர்த்து விடுங்கள்.
* அப்பளம் பொரிக்க பயன்படுத்தும் எண்ணெயில் ஒரு தேக்கரண்டி மஞ்சள்பொடி சேர்த்தால் அப்பளம் நிறமாகவும், அதிக சுவையாகவும் இருக்கும்.
* உருளைக்கிழங்கு, கோவா வேக வைக்கும் நீரில் சிறிதளவு வினிகர் சேர்த்தால் காய்கறி இயற்கையான நிறத்துடன் காணப் படும்.
* கிழங்கு வகைகள், பயறு வகைகள், பலாக்கொட்டை, பருப்பு முதலியவைகள் வெந்தபின் உப்பு சேர்க்க வேண்டும்.
* காம்பு நீக்கிய பச்சை மிளகாயை பொலித்தீன் பையில் போட்டு குளிர் சாதனப் பெட்டியில் வைத்தால் இரண்டு வாரம்வரை கெடாமல் இருக்கும்.
* குழம்பு வகைகளில் தக்காளியைச் சேர்க்க முடியாவிட்டால் சிறிதளவு தேங்காயை 'மை' போல அரைத்துக் கலந்து விடுங்கள்.
* அலுமினியப் பாத்திரத்தில் அடிப்பிடித்து விட்டால், பாத்திரத்தில் சிறிதளவு வினிகர் கலந்து தண்ணீர் விட்டு நன்றாகக் கொதிக்க வைத்துத் தேய்த்துக் கழுவுங்கள்.
* வெங்காயம், உருளைக்கிழங்கு இரண்டையும் ஒரே பெட்டியில் போட்டு வைத்தால் விரைவில் கெட்டுப் போய்விடும்.
* நன்றாகப் பழுத்த தக்காளிப்பழத்தை உப்புத் தண்ணீரில் போட்டு வைத்தால் விரைவாகப் பழுதாகி விடாது.
* பருப்பில் சில துளி நெய் சேர்த்தால் நன்றாக வெந்து விடும்.
* பெருங்காயத்துடன் பச்சைமிளகாய் போட்டு வைத்தால் பெருங்காயம் விரைவாகக் 'கட்டி' பிடிக்காது.
* பாதாம் பருப்பை 5 நிமிடம் கொதித்த நீரில் போட்டு வைத்தால், தோலை எளிதாக நீக்கி விடலாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GN

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 16-10-1999

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# மோனிக்கா என் மோனிக்கா

வழங்குவது புவனா 11

மோனிக்காவுக்கும், பிளேய்லருக்கும் இடையே மறுபடி தொடரும் உறவைத் துண்டிக்க மோனிக்காவின் தாயார் பல முயற்சிகளை மேற்கொண்டார்.

இதனிடையே பிளேய்லரின் மனைவி கேற் இன்னொரு ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

இச் செய்தியை மோனிக்காவிடம் தெரிவித்த பிளேய்லர், மோனிக்காவின் மனதை உடைக்கக்கூடிய வார்த்தைகளை வெளியிட்டான்.

"மோனிக்கா இனிமேலாவது நான் ஒரு நல்ல தந்தையாக இருக்க விரும்புகிறேன். ஆதனால் நாம் இனி சந்திப்பதை நிறுத்திக் கொள்வோம். தயவு செய்து என்னை மறந்து விடு!" என்று அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு கூறினான்.

மோனிக்கா அவன் அப்படியொரு முடிவைத் தானாக முன்வந்து கூறுவான் என்று எதிர்பார்க்கவில்லை.

ஆனாலும் தன் ஏமாற்றத்தை வெளியே காட்டிக்கொள்ளாது சுதாகரித்துக் கொண்டாள். கைக்குட்டை எடுத்து முகத்தை துடைத்துக் கொண்டாள்.

மிகவும் நிதானமாக பிளேய்லரை நெருங்கி, அவனது கழுத்தில் தன் கைகளை மாலையாகக் கோர்த்து முன்னால் இழுத்தாள். அவனது உதடுகளை தன் மென்மையான இதழ்களால் கவ்வினாள்.

அவளது ஆவேசமான முத்தமும், அவளது உடல் தன்மீது அழுந்திய ஸ்பரிசமும் பிளேய்லரை திக்குமுக்காட வைத்துவிட்டன.

பிளேய்லருக்கு உணர்ச்சி நரம்புகள் விழித்துக்கொண்டன. அவன் மோனிக்காவை அணைக்க கைகளை உயர்த்திய வேளையில், மோனிக்கா விலகினாள். புன்னகைத்தாள்.

"கடைசி முத்தம். நண்பர்களாகவே பிரிவோம்!" என்றாள். போயேவிட்டாள். பிளேய்லர் அப்படியே நின்று கொண்டிருந்தான். அவனுக்கு அவள் பின்னால் ஓடிப்போக வேண்டும் போன்று தவிப்பாக இருந்தது.

"மறந்துவிடு" என்று கூறிவிட்டு எப்படி, பின் தொடர்ந்து போவது? அதனால் தவிப்போடு பார்த்துக்கொண்டே நின்றான்.

மோனிக்கா திரும்பியே பார்க்கவில்லை. ஒரு பூப்புயல் வீசிப்போனதுபோல அவனை ஆட்டிவைத்துவிட்டு போய்க்கொண்டிருந்தாள்.

'சே அவசரப்பட்டுவிட்டோமோ?' என்று பிளேய்லர் கவலைப்பட்டான்.





இந்தப் பிரிவு ஒரு வாரம்கூட நீடிக்கவில்லை. பிளேய்லர் வெட்கத்தைவிட்டு அவளைச் சந்தித்தான்.

"உன் நினைவாகவே இருக்கிறேன். என் மனைவியை நெருங்கும்போதுகூட உன் முகம், உன் உடல், உன் சிரிப்பு, உன் முத்தம் எல்லாம் தான் ஞாபகம் வருகிறது." என்று குழந்தை போல பேசினான்.

"உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள். "நீதான் வேண்டும். அன்று பிரியும் போது நீ ஏற்படுத்திவிட்டுப் போன சூடு இன்னமும் தணியவில்லை!" என்று கண்களில் தாபத்தோடும், தேகத்தில் வெப்பத்தோடும் அவளை நெருங்கினான் பிளேய்லர்.

மோனிக்கா அவனை ஏற்றுக்கொண்டாள். தன்மேல் சாய அனுமதித்தாள். அவன் தன்னை மேயவும் இடமளித்தாள்.

பிளேய்லர் மறுபடி தன்னை நாடி வந்தது பற்றி, கிளின்ரனின் தொடர்பு முறிந்த கால கட்டத்தில் நினைவுகூர்ந்து கூறிய வார்த்தைகள் இவை:

"திருமணமானவர்கள் வேறு பெண்களிடம் தொடர்புகொண்டு சில நாட்களில் குற்ற உணர்வுடன் 'நான் குற்றவாளிதான்' என்று கூறிவிலகுவார்கள். ஆனால் அது நீடிப்பதில்லை. ஆசை உந்தும்போது மீண்டும் மீண்டும் விட்ட உறவைத் தொடர ஓடிவருவார்கள்!"

பிளேய்லரின் பின்பும் மோனிக்காவுக்கு ஏற்பட்ட பல அனுபவங்களது தொகுப்பே அந்த வார்த்தைகள்.

## பிரிவோம் சந்திப்போம்

பிளேய்லருடன் உறவை முறித்துக் கொள்ள வேண்டும் என்று பலரும் வற்புறுத்திக் கொண்டிருக்கையில், மோனிக்கா மன உளைச்சலில் இருந்தாள்.

அவ்வாறு இருந்தும் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றுவிட்டாள். மோனிக்காவின் நண்பிகளுக்கு மாத்திரமல்ல, தாயாருக்கும் இது ஆச்சரியம்தான்.

ஒரே நேரத்தில் பல விஷயங்களில் தீர்க்கமான கவனம் செலுத்தத்தக்க ஒருத்தியாக மோனிக்கா இருந்தாள்.

இத் திறமைதான் பின்னாளில் வெள்ளை மாளிகைவரை மோனிக்காவைக் கொண்டு சென்றது.

### யோசனை

மோனிக்கா பரீட்சையில் சித்திபெற்றதால் மேற்கொண்டு கலிஃபோர்னியா பல்கலைக் கழகத்துக்கு சென்று படிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

ஆனால் மோனிக்காவின் அப்பா லிவின்ஸ்கி தனது முன்னாள் கல்விக்கூடமான பேர்க்கியில் மோனிக்கா சேர்ந்து படிக்கவேண்டும் என்று விரும்பினார்.

மோனிக்காவின் அம்மாவுக்கு தோன்றிய யோசனை வேறாக இருந்தது. போட்லண்ட் பல்கலைழக்கழகத்தில் மோனிக்கா சேர்ந்து படிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.



அங்கு போய்விட்டால் பிளேய்லரை சந்திக்கக் கூடிய வாய்ப்புக்கள் மறைந்து போகும். படிப்படியாக அந்தக் குப்பையை மோனிக்கா உதறிவிடுவாள் என்று தாயார் நம்பினார்.

பிளேய்லரை குப்பை என்றே அம்மா வர்ணித்தாள். பிளேய்லர் என்ற பெயரைக் கேட்டாலே அம்மா முகம் சுளித்தாள்.

மோனிக்காவும் தாயாரின் யோசனையை ஏற்றுக் கொண்டாள். போட்லண்ட் பல்கலைக்கழகம் அளவில் சிறிதாக இருந்தாலும், நட்புறவுடன் பழகக்கூடிய ஓர் இடம் என்பதும் மோனிக்கா அதனை விரும்பியதற்கு ஒரு காரணம்.

பிளேய்லரை தவிர்க்கவும் மோனிக்கா விரும்பினாள். நிரந்தரமற்ற உறவில் அதிக பற்று வைக்கக்கூடாது என்ற எண்ணமும் ஏற்பட்டிருந்தது.

இதுபற்றி மோனிக்கா கூறும்போது, "பிளேய்லரை முற்று முழுதாக ஒதுக்க வேண்டும் என்பதல்ல, அது என்னால் உடனடியாக செய்யக்கூடியதுமல்ல. இருப்பினும், எவ்வளவு துன்பகரமாக இருந்தாலும் எனக்காக நான் வாழவேண்டும். அதற்காக புது அத்தியாயத்தை திறக்க வேண்டும் என்று திடசித்தம் கொண்டேன்!" என்று கூறினாள்.

இறுதி ஆண்டுப் பரீட்சையில் திறமைச் சித்திபெற்ற பாடங்களை ஒதுக்கிவிட்டு, உளவியல் துறையில் படித்துப் பட்டம் பெற விரும்பினாள் மோனிக்கா.

### புது அத்தியாயம்

போட்லண்ட் பல்கலைக்கழகத்துக்கு மோனிக்கா சென்றதுடன் அவளது இன்னொரு அத்தியாயம் ஆரம்பமானது.

பல்கலைக்கழகச் சூழல் அவளுக்குப் பிடித்திருந்தது. அங்கு தன்னோடு கல்விகற்ற சக மாணவிகளை, மாணவர்களை அவளுக்குப் பிடித்திருந்தது. போதானாசிரியர்களையும் பிடித்துக் கொண்டது.

தன் கவலைகளை மறந்து கல்வி கற்றலில் ஈடுபட்டாள். மேலதிக வகுப்புக்கள் என்றால் மாணவ மாணவிகள் கொஞ்சம் முகம் சுளிப்பார்கள். சலித்துக்கொள்வார்கள்.

ஆனால் மோனிக்கா, மேலதிக வகுப்புக்களுக்கு ஆர்வமாகச் சென்றாள். ஊன்றிக் கவனித்து சிறப்பாகப் படித்தாள்.

இதனால் போதனாசிரியர்கள் மோனிக்கா மீது மதிப்பு வைத்தனர். அடிக்கடி பாராட்டினார்கள்.

"எதிர்காலத்தில் மிகப் பிரபலமான பெண்ணாக வருவாய்!" என்று விரிவுரையாளர் ஒருவர் பாராட்டினார். அப் பாராட்டு பின்னாளில் ஏதோ ஒரு வகையில் பலிக்கத்தான் செய்தது.

பிரசித்திபெற்ற நாவல் ஆசிரியர் விக்டர் ஹியூகோ. அவரது மகளது நிறை வேறாத ஆசை பற்றிய உண்மையான கதை யொன்று வெளியானது. அதனை அடியொற்றி திரைப் படம் ஒன்று தயாரானது. 'த ஸ்ரோரி ஒஃப் அடோல் எச்' என்று அத்திரைப்படத்திற்கு பெயர் சூட்டியிருந்தனர்.

### அதேகதை

அத்திரைப்படத்தை மோனிக்கா பார்த்தாள். அவளுக்கே நம்பமுடியவில்லை. அவளது கதைபோலவே கிட்டத் தட்ட இருந்தது.

"அவள் ஒருவனை மனப்பூர்வமாக காதலித்தாள். ஆனால் சிலகாலத்தின் பின்னர் அவன் அவளை உதாசீனப்படுத்தினான். அவளோ அவன்மீது கொண்ட காதலால் அவன் [illegible]குமிடம் எங்கும் போனாள். அவ[illegible] அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்[illegible]" இதுதான் அத்திரைப்படத்தின் [illegible]ச் சுருக்கம்.

இப்படத்தைப் [illegible]ர்த்த மோனிக்கா தன்னை பிளேய்லர் சில தருணங்களில் அலட்சியம் செய்ததை எண்ணிப் பார்த்தாள்.

அப்படத்தின் கதாநாயகியாக தன்னை நினைத்துக்கொண்டு படம்பார்க்கும்போதே குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கிவிட்டாள்.

மோனிக்கா அப் படத்தை ஐந்து தடவைகளுக்குமேல் பார்த்தாள். ஐந்து தடவையும் அழுது தீர்த்தாள். அழுவதால் பாரம் குறைவதாய் நினைத்து அழுதாள்.

போட்லண்ட் பல்கலைக்கழகத்தில் மோனிக்காவின் நெருக்கமான தோழி களத்தீன் ஆல்டே டேவிஸ்.

மோனிக்காவுடன் ஒருமுறை அவளும் அத்திரைப்படத்துக்கு போயிருந்தாள். மோனிக்கா அழுவதைக் கண்டு, அந்த அழுகையில் இருந்த தீவிரம் கண்டு, காரணம் கேட்டாள்.

மோனிக்கா மனம் திறந்தாள். தோழி கூறினாள். "நாளை ஒரு கருத்தரங்கு இருக்கிறது. கண்டிப்பாக வா! அங்கு உன் மனக் கேள்விகளுக்கு விடை கிடைக்கலாம்!"

(வருவாள்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### ஆள்கரனோயா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

எம். விஜயகலா,
நு/சென் லெனாட்ஸ், ஆள்கரனோயா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com





சக்தி தனக்கே கருவி யாக்கு-இந்தத்
தாரணியில் நூ றுவய தாகும்-மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு-உன்னைச்
சாரவந்த நோயழிந்து போகும்.
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## யாருக்குச் சொந்தம்?



ஒரு கிராமத்தின் எல்லையில் சந்நியாசி ஒருவர் வசித்து வந்தார். அவர் தினமும் வீடு வீடாகச் சென்று நற்சிந்தனைகளைப் பரப்பி வந்தார்.

பலர் இவரது நல்ல போதனைகளைக் கடைப்பிடித்து வந்தனர். இவருடைய போதனைகளைப் பிடிக்காத சிலர் எதிர்த்தார்கள்.

இவர்கள் சந்நியாசியை வாய்க்கு வந்தபடி வசை பாடினார்கள்.

ஆனால் சந்நியாசி அவற்றைக் காது கொடுத்துக் கேட்பதே இல்லை. அவர் வழமை போல நற்சிந்தனைகளைப் போதித்து வந்தார்.

சந்நியாசியைச் சிலர் திட்டுவதையும், அதற்கு அவர் பேசாமல் இருப்பதையும் எல்லாரும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒருநாள் சந்நியாசியின் மேல் அன்பு கொண்ட இரண்டு இளைஞர்கள், அவர் இருந்த மரத்தடிக்குச் சென்றார்கள்.

அவர்களைக் கண்ட சந்நியாசி அவர்களை அமரும்படி சொன்னார். பின் அவர்கள் தன்னைத் தேடி வந்த காரணத்தைக் கேட்டார்.

அதற்கு அந்த இளைஞர்கள் இருவரும்,

"சாமி! இந்த ஊரில் நீங்கள் எந்த பிரதியுபகாரமும் எதிர்பாராமல், நல்ல கருத்துக்களைப் பரப்பி வருகிறீர்கள். ஆனால் சிலர் உங்களை வாய்க்கு வந்தபடி திட்டுகிறார்களே! நீங்களோ எதையும் காதில் வாங்காமல் இருக்கிறீர்களே?" என்றனர்.

அதைக் கேட்ட சந்நியாசி சிரித்துவிட்டு,

"அதற்கு இப்போது என்ன செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"உங்களை அவர்கள் திட்டினால் பதிலுக்கு நீங்கள் திட்டுங்கள். இல்லாவிட்டால் நாங்கள் அவர்களைப் பார்த்துக் கொள்கிறோம்!" என்றான் ஓர் இளைஞன்.

"இளைஞர்களே! நான் ஒரு சாது. கிடைத்ததை உண்டு என் காலத்தைக் கழித்து வருகிறேன் என்பது உங்கள் எல்லாருக்கும் தெரியும்.

ஒருவர் எனக்கு நிறைய பணத்தை தர்மம் செய்ய வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் நான் அதை வாங்க மறுத்து விட்டேன். நான் வாங்க மறுத்த பணம் யாருக்குச் சொந்தம்?" என்று கேட்டார் சந்நியாசி.

"உங்களுக்குத் தர்மம் செய்ய வந்தவருக்குத்தான் அது சொந்தம்!" என்று சொன்னார்கள் அந்த இரு இளைஞர்களும்.

உடனே சந்நியாசி,

"பணத்தை நாம் ஏற்க மறுத்ததால் அது எப்படி அதை தர்மம் செய்ய வந்தவருக்குச் சொந்தமோ, அதைப்போல ஒருவருடைய திட்டுக்களை நாம் ஏற்றுக் கொள்ளாமல் மௌனமாக இருந்தால், அது திட்டியவர்களுக்குத்தான் சொந்தம்!" என்று சொன்னார்.

சந்நியாசியின் பதிலைக் கேட்டு இரு இளைஞர்களும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

## அதிசயம் - ஆனால் உண்மை!



ஆங்கிலேயக் கவிஞர் ரூபேர்ட் புரூக். இவரது கால் விரல்கள், கை விரல்களைப் போல வளைந்து நெளியும். இவரால் ஒரு காலால் தீப்பெட்டியைப் பிடித்துக்கொண்டு, இன்னொரு காலின் விரல்களால் தீக்குச்சியைப் பற்ற வைக்க முடியும்.


துருவப் பகுதியில் வாழும் எஸ்கிமோக்களின் பழக்க வழக்கங்கள் விசித்திரமானவை. கல்யாணமானவுடன் மணமகளின் தலைமுடியைப் பிடித்து தரையில் போட்டு தர தரவென இழுத்துச் செல்ல வேண்டும். அதேபோல் திருமண ஆண்டு விழாவில் மணமகன் தலைமறைவாகிவிட வேண்டும். ஒளிந்திருக்கும் மணமகனை, மாமனார்தான் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.



இங்கிலாந்து நாட்டில் பிரான்ஸிஸ் ஹன்ட்ரஸ் என்பவரும் அவரது மனைவியும் வசித்து வந்தனர். இவர்கள் இருவரும் செப்டெம்பர் 19ம் திகதியில் பிறந்துள்ளனர். இவர்கள் திருமணம் செய்து கொண்டதும் செப்டெம்பர் 19ம் திகதியில். 80 வயது வரை வாழ்ந்த இருவரும் இறந்ததும் செப்டெம்பர் 19ம் திகதியில் தான்.



## அற்புத அரங்கம்



இயல், இசை, நாடகம் என்பவற்றைக் கண்டு களிக்க பிரமாண்டமான கலை அரங்கம் ஒன்று, கிரேக்க நாட்டில் எபிடாரஸ் என்ற இடத்தில் கி.மு. 400ல் கட்டப்பட்டது.

இந்தக் கூடம் மலைப்பகுதியை ஒட்டினாற்போல் மலையின் ஒரு பகுதியைக் குடைந்து வட்ட வடிவமாக அமைக்கப்பட்டுள்ளது. இப்படி மலையை ஒட்டி அமைத்ததற்கு விசேட காரணங்கள் உள்ளன.

அந்தக் காலத்தில் ஒலி வாங்கி, ஒலி பெருக்கி வசதிகள் இல்லை. மலையின் தன்மை என்ன? தன்னிடம் வரும் ஒலியை எதிரொலிக்கச் செய்வது தானே. எனவே தான் அரங்கின் நடுவே நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்க அவர்களின் பேச்சுக்கள், பாட்டுக்கள் கடைசி வரிசையில் அமர்ந்திருப்பவர்களுக்குக் கேட்க வேண்டும் என்பதற்காக மலைப்பகுதியை ஒட்டி அமைத்துள்ளனர்.

அது மட்டுமன்றி சமதளத்தில் அமைந்திருக்கும் கூடத்தில் ஒருவர் பின் ஒருவராக அமர்ந்தால், முன்னால் இருப்பவரின் தலை மறைக்கும் அல்லவா? இந்தக் கூடம் போன்று சரிவாக இருக்கை வசதி இருந்தால், அனைவராலும் நன்றாக நிகழ்ச்சிகளைப் பார்க்கமுடியும்.

கிரேக்கர்களின் பெருமையைப் பறைசாற்றும் இந்த அற்புத அரங்கத்தில் 4 ஆயிரம் பேர் வரை அமர்ந்து நிகழ்ச்சிகளை இரசிக்கலாம்.

## எப்போது வந்தது?



உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்த்து இரசித்திருப்பீர்கள். விளையாட்டு மைதானத்தில் நடுவர், வாயில் விசிலை வைத்து ஊதுவார் அல்லவா? இந்த விசில் ஊதும் பழக்கம் எப்போது வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா?

1833ம் ஆண்டு நியூஸிலாந்து நாட்டில் உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெற்றது. அப்போது பார்வையாளர்களின் ஆரவாரத்திலும், சத்தத்திலும் நடுவர் சொல்வது விளையாட்டு வீரர்களுக்குக் கேட்கவில்லை.

அப்போது அந்தப் போட்டியின் நடுவராக இருந்த அட்டாக் என்பவருக்கு விசில் ஊதி வீரர்களின் கவனத்தைத் திசை திருப்பலாம் என்ற எண்ணம் தோன்றியது. உடனே அந்த எண்ணத்தை அப்போட்டியிலேயே செயற்படுத்தினார்.

அன்றிலிருந்துதான் நடுவர்கள் உதைபந்தாட்டப்போட்டிகளின் போது விசில் ஊதும் முறை பழக்கத்திற்கு வந்தது.

## நினைத்ததும் நடந்ததும்



புகழ்பெற்ற பல மாலுமிகள் இந்தியாவிற்கு கடல் வழியாகப் பாதை காண முயற்சி செய்தார்கள். ஆனால் அவர்கள் இந்தியாவுக்குப் பாதை தேடிப் புறப்பட்டுப் பல புதிய நாடுகளைக் கண்டுபிடித்தார்கள்.

இந்த வரிசையில் கொலம்பஸ் மேற்குக் கரையோரத்திலிருந்து இந்தியாவுக்குப் பாதை தேடிப் புறப்பட்டு அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

போர்த்துக்கேய மாலுமி பர்தலோ மியஸ் டயஸ் இந்தியாவுக்குக் கடல் வழிப்பாதை காண முயற்சி செய்தார். கடைசியாக தென்னாபிரிக்காவிற்கு சற்றுத் தொலைவில் இருக்கும் நன்னம்பிக்கை முனையைக் கண்டறிந்தார்.

இதே போன்று, உலகை முதன் முதலாக சுற்றியவர் என்ற பெருமையை பெற்ற மெகலன், இந்தியாவுக்கு கடல் வழியாக பாதை காண புறப்பட்டார். இறுதியில் ஃபிலிபைன்ஸ் நாட்டைக் கண்டுபிடித்தார்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **16.10.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **317**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 315

பரிசுக்குரியவர்:
**ஆதிப் இஹ்தியாஸ்,**
சாஹிரா மத்திய கல்லூரி, புத்தளம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| ராம்குமார் நிரோசன், இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு. | என்.எம்.பாத்திம்மா நுஸ்ஹா, மட்/அறபா வித்தியாலயம், ஏறாவூர். |
| வி.வீணாப் ரஷானி, புனித கெப்ரியல் மகளீர் மகாவித்தியாலயம், அட்டன். | சிவானந்தம் நிரோசன், புனித பிரான்சிஸ் சவேரியார் ம.வித்தியாலயம், திருகோணமலை. |
| பர்ஸானா ரவூப், இ/பலாங்கொடை தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை. | சீபா.எம்.ஏ.காதர், அல்மனார் மத்திய கல்லூரி, மருதமுனை. |
| எஸ்.ரேகா, கல்வியற் கல்லூரி, வவுனியா. | வி.பியோனி பிரிதர்சனி, தமிழ் மத்திய கல்லூரி, பண்டாரவளை. |
| மதுமிதா வரேந்திரன், சைவ மங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை. | செல்வன் ச.குணதீபன், நட்போர்ன் த.வி, டயகம. |

## குட்டிச் செய்திகள்

- காற்றாடிகளை முதன் முதலாக உருவாக்கிய நாடு சீனா. இவர்கள் செய்திகளைத் தூரத்திற்கு அனுப்பி வைக்கும் சாதனமாகவும், தூரத்தை அளக்கும் கருவியாகவும்கூட அவற்றைப் பயன்படுத்தினார்கள்.
- வருமானவரி வசூலிக்காத நாடுகளில் புரூணையும் ஒன்று. எண்ணெய் வளம்மிக்க இந்நாட்டில் உள்ள எல்லா வீடுகளும், எல்லா கார்களும் குளிர் சாதன வசதி செய்யப்பட்டவை.
- ஜெர்மனியிலும், ஃபிரான்ஸிலும் பெற்றோர் தமது விருப்பப்படி தங்களது குழந்தைகளுக்குப் பெயர் வைத்துவிட முடியாது. அரசாங்கம் வெளியிடும் பெயர்ப்பட்டியலில் உள்ள பெயர்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துத்தான் பெயர் சூட்ட வேண்டும்.
- உலகில் அதிக காலம் வேலை செய்த தொழிலாளி ஷாகெகியோ கிசுமி என்ற ஜப்பானியர். இவர் 7 வயது முதல் 98 வயது வரை ஓய்வில்லாமல் சீனி ஆலையில் வேலை செய்தார். இவர் தமது 105வது வயதில் காலமானார்.
- கைதி ஒருவனைக் காவலர் தப்பிக்க விட்டு விட்டால், கைதி அனுபவிக்க வேண்டிய மிகுதித் தண்டனையை அந்தக் காவலரே அனுபவிக்க வேண்டும். இந்தச் சட்டம் மெக்ஸிக்கோ நாட்டில் அலமாஸ் என்ற இடத்தில் உள்ளது.
- இரவு ஏழு மணிக்கு மேல் யாரும் சத்தம் போட்டுச் சிரிக்கக் கூடாது என்ற தடை அமெரிக்காவில் உள்ள ஹெலனா என்ற இடத்தில் நடைமுறையில் உள்ளது.
- அகில உலக செஞ்சிலுவைச் சங்கமானது தனது உரிய சேவைக்காக 1917, 1944, 1963ம் ஆண்டுகளில் மூன்று முறை நோபல் பரிசைப் பெற்றுள்ளது.
- ஆபிரிக்காவில் நைல் நதியின் காரணமாக உருவானதுதான் விக்டோரியா ஏரி. இது உலகில் உள்ள நன்னீர் ஏரிகளில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இந்த ஏரி 26 ஆயிரம் சதுர மைல்களுக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்டது.
- விதவிதமான தீப்பெட்டிகளைச் சேகரிப்பவர்கள் 'கியூமிக்ஸாபிஸ்ட்ஸ்' (Cumyxaphists) என்று அழைக்கப்படுகின்றனர்.
- அமெரிக்காவில் வருடந்தோறும் 600 கோடி வாழ்த்து அட்டைகள் தயாரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. இவ் வாழ்த்து அட்டைகளை 400க்கும் மேற்பட்ட பதிப்பகங்களால் அச்சிட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

## நாய் பற்றிய செய்திகள்



- உலகம் முழுவதும் உள்ள ஒரே விலங்கு நாய். காரணம் உலகின் எல்லா சீதோஷண நிலையிலும் நாயால் வாழ முடியும்.
- நாய்க்கு வியர்வைச் சுரப்பிகள் இல்லை. இதன் நாக்கின் மூலம்தான் வியர்வை வெளியேறும். இதனால்தான் ஓடிக் களைத்த பின் நாக்கை வெளியே தொங்கப் போட்டுக் கொண்டு வியர்வையை வெளியேற்றுகிறது.
- நாய்கள் தொடர்ந்து ஐந்து நாட்கள் தூங்காமல் இருந்தால் இறந்துவிடும்.
- நாய்களுக்கு மொத்தம் 42 பற்கள் உள்ளன.
- நாய் தனது நாக்கின் மூலமே தன்னை சுத்தப்படுத்திக் கொள்ளுகிறது. இதனால்தான் நாயின் நாக்கு நீளமாக உள்ளது.
- 'டிங்கோ' எனப்படும் அவுஸ்திரேலிய நாய்க்குக் குரைக்கத் தெரியாது.
- நாயின் ஆயுட்காலம் சாதாரணமாக 15 ஆண்டுகள் ஆகும்.

www.padippakam.com

**இதுவரை**

பாக்கியத்தின் மகள் வர்ணாவின் நாய் பிங்கிக்கு 'டிஸ்டெம்பர்' எனப்படும் கொடிய நோய் வருகிறது. அதனைக் காப்பாற்றவே முடியாது என்று டாக்டர்கள் கைவிரிக்கின்றனர். ஆனால் அந்த நாய் அதிசயமாக உயிர் பிழைக்கிறது. வர்ணாவிடம் உள்ள அதிசய சக்திதான் அதற்கு காரணம் என்று டாக்டர்கள் நினைக்கின்றனர். சொர்ணம், நீலமேகம் தம்பதியின் மகள் பூவிழி கொலை தொடர்பான விசாரணையும் மறுபுரம் சூடுபிடிக்கிறது..

**இனி...**

"ஹலோ வர்ணா...!" டெலிஃபோனில் ஒலித்த தீபக்கின் குரலில் சந்தோஷம் இல்லாததை உணர்ந்து கொண்ட வர்ணா, அதைக் காட்டிக் கொள்ளாமல் "ஹலோ!" என்றாள்.

"உன்கிட்ட கொஞ்சம் தனியா பேசணும்."

"எ... என்ன பேசணும்?"

"டெலிஃபோன்ல பேசறதை விட நேர்ல பேசிக்கலாமே! உன் வீட்டுக்கு



நான் வரட்டுமா? இல்லை என் வீட்டுக்கு நீ வர்றியா...?"

"நீங்க என் வீட்டுக்கு வாங்க....?"

"இப்பவே வரட்டுமா?"

"வாங்க...?"

வர்ணா ரிஸீவரை வைத்து விட்டு திரும்ப, அம்மாக்காரி பாக்யம் நின்றிருந்தாள்.

"ஃபோன்ல யாரு வர்ணா?"

"உன்னோட வருங்கால மாப்பிள்ளை!"

# கை 24 விலங்கு சிக்கிய மின்னல்

உடம்பு பூராவும் பரவசமானாள் பாக்யம்.

"மாப்பிள்ளையா...! என்ன சொன்னார்?"

"என்கிட்ட ஏதோ பேசணுமாம்... நம்ம வீட்டுக்கு வர்றதா சொல்லியிருக்கார்."

"எப்போ?"

"இப்ப..."

"எதுக்காக வர்றார்....?"

"தெரியலையே....!"

"சரி! போய் முகத்தை அலம்பிக்கிட்டு பளிச்னு டிரஸ் பண்ணிக்கோ... நான் வீட்டைக் கொஞ்சம் சுத்தப்படுத்துடறேன்..."

வர்ணா சுவாரஸ்யம் இல்லாமல் குளியலறையை நோக்கிப்போனாள்.

அடுத்த இருபதாவது நிமிஷம்-

வாசலில் கார் ஹார்ன் சத்தம் கேட்டது. பாக்யம் விழுந்தடித்துக் கொண்டு ஓடாத குறையாக வாசலுக்குப் போய் நிற்க- காரிலிருந்து டாக்டர் ரத்னவேலும் அதைத் தொடர்ந்து நல்ல உயரத்தில் பளீரென்ற தோற்றத்தில் தீபக் இறங்கினான்.

"வாங்க... வாங்க...!" பாக்யம் கை குவித்து உள்ளே கூட்டிப்போனாள். சோபாவில் அவர்களை உட்கார வைத்துவிட்டு, உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தாள்.

"வர்ணா...!"

வர்ணா அறையிலிருந்து வெளிப்பட்டாள். தீபக்கைப் பார்த்து ஒரு புன்னகையோடு 'ஹலோ'வை உதிர்த்து விட்டு மௌனமாய் நின்றாள்.

டாக்டர் ரத்னவேல் சிரிப்போடு தொடர்ந்தார். "நீயும் தீபக்கும் மாடிக்குப் போய் பேசிட்டிருங்க. நான் அம்மாகிட்ட பேசிட்டிருக்கேன்."

வர்ணா தலையசைத்து விட்டு மாடிப் படிகளை நோக்கிப் போக, தீபக் எழுந்து பின் தொடர்ந்து போனான். அவர்கள் மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்த பாக்யம் ரத்னவேலிடம் கேட்டாள்.

"மாப்பிள்ளை வர்ணா கிட்ட என்ன பேசப்போறார்னு உங்களுக்குத் தெரியுமா?"

ரத்னவேல் சிரித்தார்.

"கல்யாணம் பண்ணிக்கப்போற ஒரு பொண்ணுகிட்ட மாப்பிள்ளை என்ன பேசுவார்? ஏதாவது காஷுவலா பேசிட்டு பொண்ணைப் பார்த்துட்டு போக வந்திருக்கார். அவ்வளவுதான்."

"வேற எந்தப் பிரச்சனைக்காகவும் இல்லையே?"

"ஒரு பிரச்சனையும் கிடையாது..."

"இந்த மாதிரி மாப்பிள்ளை கிடைக்க வர்ணாவுக்கு கொடுத்து வெச்சிருக்கணும்.... இந்த சமயத்துல வர்ணாவோட அப்பா மட்டும் உயிரோடு இருந்தா அவருக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்கும்...?"

டாக்டர் ரத்னவேலின் பார்வை எதிர் சுவரில் மாட்டியிருந்த வர்ணாவின் அப்பா ஃபோட்டோவுக்குப் போயிற்று. ஃபோட்டோவில் முகம் இப்போது தெளிவாக இல்லாமல் கலங்கலாகத் தெரிய பாக்யத்திடம் கேட்டார்.

"என்னம்மா... ஃபோட்டோவில் வர்ணாவோட அப்பா முகம் தெளிவாயில்லையே...?"

பாக்யம் புன்னகைத்தாள்.

"நீங்க உட்கார்ந்திருக்குற இடத்திலிருந்து பார்த்தா ஃபோட்டோ அப்படித்தான் தெரியும். அது த்ரீடைமென்ஷன் ஃபோட்டோ. இன்னும் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்து நேரா பார்த்தா ஃபோட்டோவில் இருக்கிற முகம் சிரிச்ச மாதிரி தெரியும். ஃபோட்டோவுக்கு இடது கைப் பக்கமாய் போய் நின்று பார்த்தா சிரிச்ச முகம் மாறியிருக்கும். அதே மாதிரி வலதுகைப் பக்கமாய்ப் போய்ப் பார்த்தா லேசா முறைச்ச மாதிரி தெரியும். அவரோட மூணு விதமான ஃபோட்டோக்களை கட் பண்ணி ஜாயின் பண்ணியிருக்கோம்."

ரத்னவேல் நிமிர்ந்தார்.

"அப்படியா விஷயம்...! முதல் தடவை நான் உங்க வீட்டுக்கு வந்தபோது இந்த ஃபோட்டோவைப் பார்த்து கொஞ்சம் மிரண்டு போயிட்டேன். இது த்ரீ டைமென்ஷன் ஃபோட்டோவா. அப்படி சொல்லுங்க."

**க்ரைம் சக்கரவர்த்தி**
**ராஜேஷ்குமார்**

ரத்னவேல் நிம்மதி பெருமூச்சொன்றை விட பாக்யம் கேட்டாள்.

"உங்களுக்கு காபி கொண்டு வரட்டுமா?"

"மாப்பிள்ளை தீபக்கும் பேசிட்டு வந்துடட்டும் ஒண்ணாவே சாப்பிட்டுக்கலாம்..."

மாடிக்குப் பேசப் போயிருந்த தீபக், வர்ணா இருவரும் பேசிவிட்டுத் திரும்பும் நேரத்திற்காக ரத்னவேலும் பாக்யமும் காத்துக் கொண்டிருக்க ஆரம்பித்தார்கள்.

❖

இன்ஸ்பெக்டர் பலராமன் மெதுவாய் நடைபோட்டு வியர்வையில் நனைந்து கொண்டிருந்த ஏ.ஓ. குருமூர்த்தியையும் அருந்ததியையும் நெருங்கினார்.

"அநேகமா நீங்க ரெண்டு பேரும் கார்னர் செய்யப்பட்டு மூலைக்கு வந்துட்டீங்கன்னு நினைக்கிறேன். இனிமேல் உங்க வாயிலிருந்து உண்மை வரலேன்னா ரெண்டு பேரையும் லாக்கப்புக்கு கொண்டு போறதைத் தவிர வேற வழியில்லை. லாக்கப்புக்கு போய்ட்டா நீங்க உண்மையைப் பேசியே ஆகணும்..."

குருமூர்த்தி தன் இடது கையால் நெற்றி வியர்வையை வழித்துக் கொண்டே பலராமனை ஏறிட்டார்.

"ஸார்... நாங்க உண்மையைச் சொல்லிடறோம். போலீஸ் லாக்கப்புக்கெல்லாம் கொண்டு போயிடாதீங்க."

"இப்ப சொன்னீங்களே, இது உத்தமம். இனிமே நான் கேக்கப் போகிற கேள்விகளுக்கு உண்மையான பதில் வரணும்... முதல் கேள்வி. பிரதாப் எங்கே...?"

குருமூர்த்தியும் அருந்ததியும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொள்ள பலராமன் மறுபடியும் கேட்டார்.

"என்ன பதிலையே காணோம். பிரதாப் எங்கே?"

குருமூர்த்தி எச்சில் விழுங்கினார்.

"ஸா.... ஸார்... அது... வந்து..."

"ம்... சொல்லுங்க...."

"பிரதாப்னு யாருமே கிடையாது ஸார். அது ஒரு கற்பனைப் பெயர்..."

பலராமன் அதிர்ந்தார்.

"பிரதாப்ன்னு யாரும் கிடையாதா..? அப்படின்னா பூவிழியோட ஆபீஸ் மேஜை ட்ராயர்ல சுக்கல் சுக்கலா கிழிக்கப்பட்ட ஒரு ஃபோட்டோவும் ஒரு லெட்டரும் இருந்ததே..?"

"அது நாங்க ஏற்பாடு பண்ணிப் போட்டது தான். இங்கே வேலை கேட்டு எத்தனையோ பேர் அப்ளிகேஷன்ஸ் போடறாங்க. அந்த அப்ளிகேஷன்ல இருந்த ஒரு ஃபோட்டோவைத் தான் எடுத்து அதைச் சின்னச் சின்ன பீஸா கிழிச்சு ஒரு தபால் கவர்க்குள்ளே போட்டு கம்பியூட்டர்ல பிரிண்ட் அவுட் பண்ணின ஒரு லெட்டரையும் வைச்சோம்."

"அதாவது பூவிழிக்கு பிரதாப்ங்கிற பேர்ல ஒரு காதலன் இருக்கிற மாதிரி செட்டப் பண்ணீங்க?"

"பூவிழியோட நடத்தை சரியில்லை அவளுக்கு நிறைய பாய்ஃபிரண்ட்ஸ் இருக்காங்கன்னு நீங்க சொன்னதுகூட பொய் இல்லையா?"

"ஆமா... ஸார்..."

"எதுக்காக இந்தப் பொய்கள்?"

"ஒரு பெரிய புள்ளியை பூவிழியோட கொலை விவகாரத்திலிருந்து விடுவிக்கத் தான்."

"அப்படின்னா பூவிழியை கொலை பண்ணினது அந்தப் பெரிய புள்ளிதான் இல்லையா...?"

"அது எனக்குத் தெரியாது ஸார்!"

"சரி... யார் அந்தப் பெரிய புள்ளி?"

"அதுவும் எனக்குத் தெரியாது ஸார். டெலிஃபோன் மூலமா தகவல் வரும். அந்தத் தகவல்படி காரியத்தை செஞ்சு முடிச்சா 'குறிப்பிட்ட இடத்துல கேஷ் இருக்கு. போய் எடுத்துக்கோ'ன்னு சொல்வாங்க. போய் பணத்தை எடுத்துக்குவோம்."

"உங்க கன்ஸல்டன்ஸி க்யூப்ல இது மாதிரி காரியம் பண்றதெல்லாம் சட்ட விரோதமான காரியம் இல்லையா?"

"தப்புத்தான் ஸார்.... பட் நிறையப் பணம் கிடைக்கிறதுனால சில நிழல் வேலைகளை எடுத்துக்க வேண்டியிருக்கு. இதுவரைக்கும் போலீஸ் பிரச்சனை எதுவும் எங்களுக்கு வந்தது இல்லை. இதுதான் முதல் தடவை."

"இதுவே கடைசித் தடவையாகவும் இருக்கட்டும். கொலையை திசைதிருப்பற குற்றவாளிகளுக்கும் சட்டத்தில் கடுமையான தண்டனை காத்துகிட்டு இருக்கு..."

அருந்ததி கை கூப்பினாள். "ஸார்! எங்களை போலீஸ் ஸ்டேஷனுக்கெல்லாம் கூட்டிக்கிட்டு போயிடாதீங்க ஸார்!"

"நீங்க போலீஸ் ஸ்டேஷனுக்கு போகாமே இருக்கணும்னா உங்க மனசுக்குள்ளே ஒளிச்சு வெச்சிட்டிருக்கிற மிச்சம் மீதி உண்மைகளைச் சொல்லியாகணும். பூவிழியைக் கொலை செஞ்ச அந்தப் பெரிய புள்ளி யார்?"

"ஸார்... ப்ராமிஸ்ஸா அது யார்னு தெரியாது. நடந்தது எல்லாமே நிழல் காரியங்கள்."

"ஸாரி... உங்களை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போறதைத் தவிர எனக்கு வேற வழி தெரியலை."

•••

வர்ணாவும் தீபக்கும் மொட்டை மாடியில் நாகரிக இடைவெளி விட்டு நின்றிருந்தார்கள்.

நீண்ட மௌனம் நிலவ-

"ஏதோ பேசணும்னு சொன்னீங்க...?"

தீபக் நிமிர்ந்தான். தொண்டையைச் செருமிக்கொண்டு சொன்னான்:

"வர்ணா...! நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கப்போற பெண். அதனால உன்கிட்ட ஒரு உண்மையைச் சொல்ல வேண்டியிருக்கு."

"சொல்லுங்க..."

"அந்த உண்மை ரொம்பவும் கசக்கும் பரவாயில்லையா?"

(தொடர்ந்து வரும்)

---

'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.

# தர்ம யுத்தம் 09

கணவரின் மறைவு அந்த அம்மாவுக்குப் பேரிடியாக இருந்தாலும் எப்படியோ கஷ்டப்பட்டு, மகளைப் படிக்க வைத்தார். அந்தப் பெண்ணும் நன்றாகப் படித்து, நல்ல மார்க் வாங்கி, ப்ளஸ் டூ பாஸ் செய்திருந்தார். அவளுடைய கனவெல்லாம் டாக்டராகி இந்த சமுதாயத்திற்கு பயனுள்ள ஒரு மருத்துவராக வாழ வேண்டும் என்று இருந்தது.

ஆனால், அரசாங்க ஒதுக்கீட்டின்படி அவர்கள் முன்னேறிய சமுகமாக இருந்ததால் அந்தப் பெண் வாங்கியுள்ள நல்ல மார்க்குக்கு கல்லூரியில் இடம் கிடைப்பது கேள்விக்





குறியாகிவிட்டது.

அந்தப் பெண்ணோ டாக்டராகத் துடித்தாள். அந்த அம்மாவும், தன் ஒரே மகளின் கனவுகளை நனவாக்க, என்ன வழி என்று சிந்தித்தாள். அப்போது அவர் காதில் விழுந்த செய்தி....

அவர்கள் எதிர்பார்க்கிற அந்த சீட்டுக்கு அன்றைய விலை ஏழு லட்சம் ரூபாய். அதுவும் அந்தத் துறை சம்பந்தப்பட்ட அமைச்சருக்குப் போய்ச் சேரவேண்டும். (இன்று அந்த சீட்டின் விலை 25 இலட்சத்தைத் தாண்டிவிட்டதாகக் கேள்வி.)

## அமைச்சர் வீட்டில்

அந்த நடுத்தர வர்க்க, நடுத்தர வயதுத் தாயிடம் ஏழு லட்சம் ரூபாய் இல்லை. தன்னிடம் இருந்த நகைகளை விற்றாள். சேமிப்புகளை ஒன்று திரட்டினாள். என்றாலும், எல்லாம் சேர்த்து மூன்று இலட்சத்து 65 ஆயிரம்தான் தேறியது. அதை எடுத்துக் கொண்டு ரயிலேறி வந்திருக்கிறார்கள். எதற்கும் அமைச்சரைச் சந்தித்து, இருக்கிற பணத்தைக் கொடுத்து விட்டு, நிலைமையைச் சொல்லிக் கெஞ்சிப் பார்ப்போம்... அவரும் மனிதர்தானே?

பாவம்,அப்பாவிப் பெண்கள். மனித உடம்புகளைப் பார்த்துவிட்டு அதற்குள் இருப்பது மனித இதயம்தான் என்று நம்பிவிட்டார்கள்.

ஒரு கல்லூரி சீட்டுக்கு ஏழு லட்சமா? அந்த அமைச்சரின் கட்சி அனுதாபி, ஆட்டோ நண்பர். அவர் வேதனைகளைத் தனக்குள் மறைத்துக் கொண்டார்.

அமைச்சரின் வீட்டிற்குச் சென்றார்கள். வாசலில் பாதுகாப்பிற்காக நின்ற போலீஸார், அவர்களை ஏற இறங்கப் பார்த்து, இரண்டொரு கேள்விகள் கேட்டு, உள்ளே அனுப்பி வைத்தார். ஆட்டோ நண்பரின் மனதில் ஒரு கேள்வி. அரசியல்வாதிகளுக்கு எதற்குப் பாதுகாப்பு? இவர்களிடமிருந்து மக்களை அல்லவா காப்பாற்ற வேண்டும்?

காம்பவுண்டிற்கு உள்ளே அமைச்சரின் பங்களாவுக்கு வெளியே, நிறையக் கார்கள், நிறைய மனிதர்கள். உள்ளூர், வெளியூர் கட்சிப் பிரமுகர்கள். அவர்களில் இருவர் பேசிக் கொண்டனர். "என்ன கூட்டம் அதிகமா இருக்கே! நாம வந்த விஷயத்தை இங்க பேச முடியுமா? இல்லை, கோட்டைக்குப் போயிடலாமா?"

மற்றவர் சொன்னார், அட்மிஷன் டைமில்ல? அப்படித்தான் இருக்கும். கோட்டைக்குப் போனா, இதவிட கூட்டம் அதிகமா இருக்கும்."

அமைச்சரைப் பார்க்க வரிசையில் காத்திருந்த சிலர், அனுமதி கிடைத்து பெட்டியுடன் உள்ளே சென்று, வெறும் கையுடன் வெளியே வந்து கொண்டிருந்தனர். அவர்களின் முகத்தில் வந்த வேலை முடிந்து விட்ட திருப்தி.

மெதுவாக கரைந்துகொண்டிருந்த பார்வையாளர் வரிசையில் அந்தத் தாயும், அந்தப் பெண்ணும் தங்களை இணைத்துக் கொண்டனர். சற்று நேரத்தில் அவர்களுக்கு அனுமதி கிடைத்து உள்ளே செல்வதை ஆட்டோ நண்பர் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவரை அறியாமலேயே அவர்கள் வந்த வேலை நல்லபடியா முடியணுமேன்னு ஒரு தவிப்பு ஏற்பட்டது. கையில் இருந்த பணத்தைவிட அமைச்சரின் கருணை உள்ளத்தை நம்பி வந்திருந்த அந்தப் பெண்கள் சிரித்த முகத்தோடு வெளியே வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

முன்பின் அறிமுகம் இல்லாத, சற்று முன் வெறும் பயணிகளாக பழக்கம் ஏற்பட்ட, அந்தப் பெண்களுக்காக அந்த ஆட்டோ நண்பர் ஏன் கவலைப்பட வேண்டும்? அதற்கு என்ன காரணம்? ஒரே காரணம்தான். அவர்கள் காட்டிய மனித நேயம். மனிதாபிமானத்தால் மனித மனங்களை ஜெயிக்க முடியும் என்பதற்கு ஒரு மகத்தான உதாரணம்.

சிறிது நேர இடைவெளிக்குப் பிறகு, அந்தத் தாயும், மகளும் வெளியே வந்தனர். சிரித்த முகத்தோடு அல்ல; தங்கள் முகத்தை வெளியுலகிற்கு காட்ட விரும்பாத நிலையில், அந்தத் தாய் தனது கழுத்தை சுற்றி மூடியிருந்த சேலையின் முந்தானையை எடுத்து; பாதை பார்த்து நடக்க, பார்வை தெரியும் அளவிற்கு மட்டும் கண்களுக்கு இடைவெளிவிட்டு,முகத்தை மூடியபடி நடந்து வந்தார். அவருடைய மகளோ, குனிந்த தலையோடு அவர் அணிந்திருந்த சல்வார் கமீஸ் உடையின் துப்பட்டாவை எடுத்து முகத்தைத் துடைத்தபடி வந்தார்.

**பலி உணர்வு**

## அவசரம்

ஆட்டோவின் அருகில் வரும்போது, அவர்கள் உடலில் ஒருவித நடுக்கம். உடனே அந்த இடத்திலிருந்து ஓடிவிட வேண்டும் என்கிற அவசரம் தெரிந்தது. மறைந்து போகும் மந்திரசக்தி அவர்களுக்குத் தெரிந்திருந்தால், அந்தச் சூழ்நிலையில் இருந்து, தங்களை மறைத்துக் கொண்டு மாயமாகிப் போயிருப்பார்கள்.

இருவரும் வேகமாக ஆட்டோவில் ஏறினார்கள். 'சீக்கிரம் போங்க தம்பி...' அந்த அம்மாவின் வார்த்தைகள் சீராக இல்லை. சிதைந்து போயிருந்தது. ஆட்டோ நண்பர் மௌனமாக, ஆனால் வேகமாக வண்டியை ஓட்டிக் கொண்டு மெயின் ரோட்டிற்கு வந்தார்.

"பீச் பக்கமா போங்க தம்பி." இப்போது அந்த அம்மாவின் வார்த்தைகளில் அழுகையின் கலவை இருந்தது.

சிரித்த முகத்தோடு ஆட்டோ நண்பரின் வண்டியில் ஏறிய அந்தத் தாய் மற்றும் மகளின் வார்த்தைகளில் அழுகை கலந்தது எப்போது? எதற்காக?

பரபரப்பான பீச் ரோட்டில் எதிரில் வரும் வாகனங்களின் இரைச்சலும் தன்னைக் கடந்து செல்லும் வாகனங்களின் ஹார்ன் சத்தமும் அந்த ஆட்டோ டிரைவரின் மனதைப் பாதிக்கவில்லை.

இப்போது அவரது சிந்தனை எல்லாம், 'என்ன நடந்திருக்கும் அங்கே, ஏன் இவர்கள் ஒன்றுமே பேசாமல் ஊமையாகிப் போனார்கள்?' இந்தக் கேள்வியை நேரடியாக அவர்களிடம் கேட்பதற்கு துணிச்சலில்லை.

அவர்கள் இருவருமே சுதந்திரமாக அழத் தொடங்கினார்கள். அது பாரதி பாடிய ஆனந்த சுதந்திரமல்ல. அழுகைச் சுதந்திரம்.

அதற்கு மேலும் பொறுக்க முடியவில்லை. "என்னம்மா நடந்தது?" என்று கேட்டார்.

சொன்னார்கள்.

(அனுபவங்கள் தொடரும்)

www.padippakam.com

ஐரிஷ் விடுதலைப் போராட்டம்
750 வருடங்களுக்கு மேற்பட்ட
நீண்ட நெடிய வரலாறு கொண்டது!
1900ம் ஆண்டு ஆரம்பம் வரை
ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள்
பிரித்தாளும் பிரித்தானியரால்
ஏமாற்றப்பட்டனர்.
இந்நிலையில் 1913ம் ஆண்டு
ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை
உருவானது. இதுவே பிற்காலத்தில்—
1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது.
ஐரிஷ் தொண்டர் படையின் வீரன்
தான் பிரீன். மனதை உலுக்கும்
எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

# வீரன் தான் பிரீன்

06

**கடந்த வாரம்**

ஐரிஷ் தொண்டர்படை போராளிகள் தான் பிரீன் தலைமையில் பதில் ஆளுநரைக் கொல்வதற்கு தாக்குதல் நடத்துகிறார்கள். ஆளுநர் தப்பிவிடுகிறார். அயர்லாந்தை ஆக்கிரமித்த பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக தொண்டர் படை தொடர்ந்து போராடுகிறது. **இனி...**

விசாரணையையும் தண்டனையையும் அவர்கள் ஒரு துரும்பாகக்கூட மதிக்கவில்லை. சிரித்த தாமரை மலர் போன்ற முகத்துடன் அவர்கள் சிறை சென்றவண்ணமாயிருந்தனர். அடிமை நாட்டிலும் அந்த ஆட்சியுள்ள நாட்டிலும் கண்ணியமானவர்கள் இருக்க வேண்டிய இடம் சிறைதானே!

சிறைக் கோட்டங்கள் மண்ணுலகில் மனிதனால் படைக்கப்பட்ட நரகங்கள். பெரும்பாலும் கொலை, களவு செய்து சிறை செல்லுவோர் வாழ்க்கையில் மிகத் தாழ்ந்தபடியிலுள்ளவர்கள். அவர்களுக்கே சிறைத் தண்டனை நரகவேதனையாகும்.

ஆனால் அரசியல் போராட்டத்தில் உயர்ந்த ஒரு கொள்கைக்காகப் பிறப்புரிமையாகிய சுதந்திரம் பெறுவதற்காக வாழ்வு, செல்வம், பெருமை அனைத்தையும் துறந்து வெளியேறும் தியாகிகளையும் சிறையிலடைப்பது எவ்வளவு அநாகரிகம்!

உலகம் தோன்றிய நாள்முதல், அரசியலில் மாறுபட்ட கருத்துக்கொண்டவர்களுக்கும் காலத்திற்கு முப்பான உண்மைக் கருத்துக்கள் கொண்டவர்களுக்கும் பழைய முப்படைந்த மூடக்கொள்கைகளை எதிர்ப்பவர்களுக்கும் சிறையே வீடாக அமைந்துள்ளது.

விதை கெடாமல் முளை வராது. பிறர் நலம் பேணுவோர் சிலுவையைத் தாங்கித் துன்புறாமல் முடியாது. ஆதலால் நல்லோருடைய யாத்திரா மார்க்கத்தில் சிறை ஒரு சத்திரமாகும். தேசியப் போர் வீரர்களுக்குச சிறை ஒரு படை வீடு; பயிற்சி நிலையம்.

ஆனால் சிறையில் தேசபக்தர்களுக்கு, ஆடும் மாடும் உண்ண மறுக்கும் ஆபாசமான உணவு கொடுக்கப்பட்டால், அவர்கள் வனவிலங்குகளிலும் கேவலமாக நடாத்தப்பட்டால் யாரிடம் முறையிடமுடியும்? உண்ணாவிரதம் என்னும் உயரிய ஆயுதம் மட்டுமே அவர்களுக்கு ஆபத்தில் உதவுகிறது. இந்த ஆயுதத்தை அயர்லாந்தின் வீரர்களும் பல சமயம் உபயோகிக்கும்படி நேர்ந்தது.

ஸீன் முதலிய ஐரிஷ் தேசபக்தர்கள் தாங்கள் அந்நிய அரசாங்கத்தால் மிருகங்களிலும் கேவலமாக நடத்தப்பட்டதை எதிர்த்துப் போராட உண்ணாவிரதத்தையே மேற்கொண்டனர்.

அவர்கள் யுத்தக் கைதிகள்; யுத்தக் கைதிகளுக்குரிய மரியாதையையே அவர்கள் வேண்டினார்கள். ஆனால் அரசாங்கத்தார் அவர்களை டப்ளின் நகரச் சிறையில் கொண்டுபோய் வைத்தார்கள்.

உண்ணாவிரதம் நின்றபாடில்லை. அங்கு அதிகாரிகள் அவர்களுக்குப் பலவந்தமாய் உணவு ஊட்டினார்கள்.

இக்கொடிய முறையால் மிக்க வீரமுள்ள புரட்சித் தலைவரும் 1916 ஆம் வருடத்திய கலகத்தில் தலைமை தாங்கி நின்றவருமான தளகர்த்தர் டாம் ஆன் உயிர்துறந்தார். இந்தக் கொலை தேசத்தை எழுப்பிவிட்டது. ஜனங்கள் கோபங்கொண்டு பொங்கினர்.

ஐரிஷ் தேசபக்தர்கள் எண்ணியதை நிறைவேற்றும் உறுதியுடையவர்கள் என்பதையும் அப்பொழுது முதன்முறையாக அரசாங்கத்தார் தெரிந்து கொண்டார்கள்.

இதன் பின்பு அரசாங்கத்தார் உண்ணாவிரதம் இருந்தவர்களோடு ஒப்பந்தம் செய்து கொள்ள இசைந்தனர். அது முதல் அவர்களை அரசியல் கைதிகளாக- யுத்தக் கைதிகளாக நடத்துவதாக அரசாங்கத்தார் உறுதி கூறினர். பின்னால் பலவந்தமாக உணவூட்டும் முறை கையாளப்படவில்லை.

ஸீன் சிறையில் புழுங்கிய காலத்தில் அவன் தோழன் தான் பிரீன் சும்மா இருக்கவில்லை. அவன் சுற்றியிருந்த பல கிராமங்களுக்குச் சென்று, தொண்டர் படைகளைத் திரட்டிப் பயிற்சி கொடுத்து வந்தான்.

அதேவேளையில் நாடு முழுவதிலும் தொண்டர்படைகள் மிகத் திறம்படப் பயிற்சி பெற்று வந்தனர். 1916ஆம் வருடத்திலிருந்த நிலைமையைப் பார்க்கிலும் அப்பொழுது ஐரிஷ் தொண்டர்படை மிகவும் உயர்ந்து விட்டது.

ஆனால் இடையில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தங்களுடைய பரம்பரை வழக்கப்படி கைதிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டனர். அப்பொழுது டண்டாக் சிறைக்கு மாற்றப்பட்டிருந்த ஸீனும் அவன் தோழர்களும் மீண்டும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

அவர்கள் பின்னால் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வளவு காலமாகத் தொண்டர் படையின் பயிற்சி இரகசியமாகவே நடந்து வந்தது. திடீர் திடீரென்று பிரிட்டிஷ் படைகள் கிராமங்களுக்குச் சென்று சில தொண்டர்களைப் பிடித்துக் கொண்டு சென்றன.

ஆனால் ஸீன் விடுதலையாகி வெளிவந்த பின்பு தொண்டர் பயிற்சி வெளிப்படையாகவே நடக்க வேண்டுமென்று ஒவ்வொரு தொண்டர்களையும் அரசாங்கம் கைது செய்துவிட்ட போதிலும் கவலைப்படக் கூடாது என்றும் கூறினான்.

ஏனென்றால் அரசாங்கம் தொண்டர்களை ஒழுங்காகக் கைது செய்ய ஆரம்பித்தால் பல்லாயிரக்கணக்காக முன்வரும் தொண்டர்களை வைப்பதற்கு அயர்லாந்திலுள்ள சிறைகளும் போதாது. பின் உலகமெல்லாம் இங்கிலாந்தைக் கண்டு எள்ளி நகையாடும். எனவே இங்கிலாந்தும் சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுக்க விரும்பவில்லை.

ஐரிஷ் தொண்டர்களுக்கு ஆயுதம் இல்லாமையே பெருங்குறையாக இருந்தது. 1916 ஆம் வருஷம் நடந்த கலகத்தில் இருந்து அரசாங்கம் முன்னால் இருந்ததைப் பார்க்கிலும் அதிக கண்டிப்பாக ஆயுதச் சட்டத்தை அமுல் நடத்தியது.

தேசத்தில் யாரும் அரசாங்க உத்தரவில்லாமல் துப்பாக்கி வைத்திருக்கக்கூடாது என்று உத்தரவு போடப்பட்டது.

அடுத்த கலகம் வெகுவிரைவில் வந்து விடும் என்பதை அரசாங்கம் மோப்பம் பிடித்து அறிந்து கொண்டிருந்தது. ஆனால் யாருக்கும் புலப்படாத சில மாய வழிகளின் மூலம் தொண்டர்கள் துப்பாக்கிளையும் தோட்டாக்களையும் வரவழைத்துக் கொண்டிருந்தார்கள்!

அரசாங்கத்தார் அடக்குமுறை ஆவேசத்தில் ஸீன் டிரிஸியை மீண்டும் கைது செய்தார்கள். கைது செய்யப்பட்டது முதலே அவன் உண்ணாவிரதத்தை மேற்கொண்டான். சிறையில் வேறு பல நண்பர்களும் அவனுடன் சேர்ந்து கொண்டனர்.

அவர்களில் முக்கியமானவர்கள்



மைக்கேல் பிரென்னன், ஸீமாஸ், ஓ நீல். ஸீன் சிறைப்பட்ட காலத்தில் தான் பிரீன் தொண்டர் படையில் படிப்படியாக உயர்ந்த ஸ்தானங்களைப் பெற்று கடைசியில் 'பிரிகேட் கமாண்டன்ட்' என்ற படைத்தளகர்த்தர் பதவியையும் பெற்றான்.

தொண்டர் படையில் ஒவ்வோர் அங்கத்தினரும் வாக்குரிமை பெற்றுத் தத்தம் பிரிவுகளுக்கு ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது வழக்கம். படையிலும் குடியரசுக் கொள்கையையே அவர்கள் கையாண்டு வந்தனர்.

**தமிழில் ப.ராமஸ்வாமி**

அக்காலத்தில் ஐரோப்பிய யுத்தத்தில் ஆங்கிலேயர் மிகுந்த கஷ்ட நஷ்டங்களை அடைந்து வந்தனர். 1918-ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஜெர்மனியர் பிரிட்டிஷ் படைக்குள் புகுந்து அவற்றைச் சின்னாபின்னப்படுத்தினர்.

இங்கிலாந்து மிகவும் அவலமடைந்து முச்சுத்திணறும் அவ்வேளையிலே, ஆங்கிலேயர் அயர்லாந்து ஜனங்களைக் கட்டாயப்படுத்தி யுத்தத்திற்கு இழுத்துக் கொண்டு வரவேண்டும் என்று கூறினர்.

மன்னர் பேச்சுக்கு மறுபேச்சு ஏது? ஆங்கிலேயர் அனைவரும் அயர்லாந்தின் மன்னரன்றோ! சில வாரங்களில் தேவையான சட்டம் பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டது.

ஐரிஷ் மக்கள் விரும்பினாலும் விரும்பாவிடினும் அவர்களைப் போர்க்களத்திலே பலிக்குக் கொண்டு நிறுத்தும் அதிகாரத்தை அச்சட்டம் ஆங்கிலேயருக்குக் கொடுத்தது. அப்பொழுது முன் அத்தியாயத்தில் சொல்லப்பட்ட லோர்ட் பிரேஞ்ச், டப்ளின் நகரில் பதில் ஆளுநராக இருந்தார்.

பிளவுபட்டு அயர்ந்து கிடக்கும் ஒரு தேசத்தை ஐக்கியப்படுத்தி எழுப்பிவிட வேண்டுமானால் அதற்கு சிறந்த உதவி அடக்குமுறையைப் போல் வேறில்லை.

கட்டாய இராணுவச் சட்டம் அயர்லாந்தின் கண்ணைத் திறந்துவிட்டது. அது வரை ஐரிஷ் ஜனங்கள் பிரிட்டிஷாரை அவ்வளவு கடுமையாய் எதிர்த்ததில்லை. ஆண், பெண், குஞ்சுகள் யாவரும் அச் சட்டத்தை எதிர்த்தனர்.

பாமரர் முதல் பாதிரிமார் வரை அனைவரும் அதைக் கண்டித்தனர். அது வரை பிளவுபட்டிருந்த கட்சிகளெல்லாம் மந்திரத்தில் கண்டுண்டதுபோல ஒன்று சேர்ந்து உழைத்தனர்.

தாங்கவொண்ணாத துன்பம் தலைமேல் விழப்போவதை அறிந்த ஜனங்கள், "தொண்டர் படையினர் என்ன செய்கின்றனர்? அவர்கள் துப்பாக்கியும் றிவோல்வரும் கொண்டு பயிற்சி செய்து வெறும் பாவனைக்காகவோ?" என்று கூவினர்.

இங்கிலாந்தை எதிர்க்கக்கூடியவர்கள் அவர்களே என்று யாவரும் உணர்ந்தனர். ஒரு தொண்டன் உயிரோடிருக்கும் வரை கட்டாய இராணுவச் சட்டம் அமுலுக்கு வர முடியாது என்பதை அயர்லாந்தும், அதை ஆண்டு அடக்கிய இங்கிலாந்தும் நன்கு அறியும்.

தொண்டர் படையில் ஆட்களுக்குக் குறைவில்லை; ஆயுதத்திற்கே முடை! பல்லாயிரம் வாலிபர்கள் அப்படையில் சேர்ந்து கொண்டனர். ஆனால் காற்றுக் கூடப் புக முடியாதபடி பாதுகாக்கும் ஆங்கிலேயர் கண் முன்பு அத்தனை பேருக்கும் ஆயுதங்களைச் சேர்ப்பது எங்ஙனம்? தொண்டர்கள் திகைத்துத் தவித்துக்கொண்டிருந்தனர்.

(பயணம் ...தொடரும்)

---

# அரங்கம் அந்தரங்கம்

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

31

**கவியரசு கண்ணதாசன்**



**இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**

**அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**

**இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**

**நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**

**இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**

—கண்ணதாசன்—

அவர் இருந்த நிலையையும், அவர் மறைத்த கொலையையும் நன்றாகப் புரிந்து கொண்டுவிட்ட மேலதிகாரிகள், அவரை அப்பொழுதே கைது செய்ய விரும்பினார்கள்.

ஆனால் இலாக்காவின் மானத்தைக் காப்பாற்ற அவரை முதலில் சஸ்பெண்ட் செய்து, பிறகு விசாரணை நடத்துவது என்று முடிவு கட்டினார்கள்.

நிலை தடுமாறியபடிதான் அவர் தன் மேலதிகாரியைச் சந்தித்தார்.

அந்த மேலதிகாரி இவரிடம் அதிகம் பேசவில்லை. சஸ்பெண்ட் உத்தரவை மட்டும் இவரிடம் நீட்டினார்.

கமல் இருந்த போதையில் எல்லாம் கனவு காணுவது போலவே தோன்றிற்று.

அவரது வீட்டில் கொண்டு வந்து இறக்கி விட்டபோது அவர் தன்னை மறந்து இறங்கியது போலவே விபரம் அறியாத யசோதாவும் தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

உள்ளே நுழைந்த அவர், உத்தரவை அவள் கையில் கொடுத்து விட்டுச் சட்டையுடனேயே மெத்தையில் சாய்ந்தார்.

உத்தரவைப் படித்த யசோதாவின் கண்களில் கண்ணீர் பெருகியது.

'என்றோ ஒருநாள் இது நடக்கப் போகிறது' என்றே அவள் நினைத்திருந்தாள்; அவள் எதிர்பாராத நேரத்திலேயே இது நடந்துவிட்டது.

பதவி போனதைப் பறறிக்கூட அவள் கவலைப்படவில்லை; "அடுத்து என்ன நடவடிக்கையோ?" என்றே அஞ்சினாள்.

தன் கணவனால் எத்தனை நிரபராதிகள் கண்ணீர் வடித்திருக்கிறார்கள் என்பதை அவள் அறிவாள்.

அவை யாவையும் கங்கை வெள்ளமாகத் திரண்டு, தன் குடும்பத்தையே அடித்துக் கொண்டு போய்விடுமோ என்று அவள் அஞ்சினாள்.

பொறுப்பு மிக்க ஒரு குடும்பப் பெண்- விவஸ்தை கெட்ட ஒரு கணவன், இந்த மாற்றுப் பின்னலில் இறைவன் நடத்தும் லீலைதான் எவ்வளவு?

அந்த சஸ்பெண்ட் உத்தரவு, யசோதாவின் தூக்கத்தையே கெடுத்துவிட்டது.

ஆனால் கமல் இந்த உலகத்திலேயே இல்லை.

கடுமையான சட்ட திட்டங்கள், கட்டுப்பாடுகள் ஒழுங்காக நிறைவேற்றப்படுமானால், அவை சமுதாயத்துக்கு எவ்வளவு பயன் உள்ளவை என்பதை சில சட்டங்களும், காட்சிகளும் நிரூபிக்கின்றன.

விவஸ்தையற்ற ஜனநாயகத்தைவிட, வேலி போடும் முறையில் ஒரு ஒழுங்கு இருக்கிறது.

'ஒழுங்கை மீறிக் கூத்தாடுவதுதான் ஜனநாயகம்' என்ற எண்ணத்தை, அடிப்படையிலேயே அது மாற்றி விடுகிறது.

'நடவடிக்கை' என்ற வார்த்தை சரியாகச் செயல்படுத்தப்படும்போது கள்ளிகளும், காளான்களும் பிடுங்கி எறியப்படுகின்றன.

'எல்லாம் முளைக்கட்டும்' என்று விட்டு விட்டு பிறகு அதற்குள்ளே நெல்லைத் தேடிக் கொண்டிருப்பது முட்டாள்தனம்.

களையெடுப்பது பயிருக்கு நல்லது; அந்தக் களையெடுப்பில் ஒன்றுதான்-கமல் மீது நடவடிக்கை.

பொழுது புலர்ந்தது. கமல் எழுந்திருக்கவில்லை.

ஆனால் யசோதாவோ, அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிய வண்ணம் 'விருந்தாளிகளை' எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

'எந்த விருந்தாளி வருவானோ? அவன் எவற்றையெல்லாம் சோதனை போடுவானோ?' என்று பயந்து கொண்டிருந்தாள்.

ஒரு குலமகளின் மனதில் தோன்றும் அச்சம் நியாயமானதாகவே முடியும்.

சுமார் ஒன்பது மணிக்கெல்லாம் 'என்'.'போர்ஸ்மெண்ட்' அதிகாரிகளும், வருமானவரி அதிகாரிகளும், மத்திய ரிசர்வ் போலீசாரும் ஏராளமான ஜீப்புகளிலும், லாரிகளிலும் வந்திறங்கினார்கள்.

'எதிர்பார்த்தது' என்றாலும்கூட யசோதாவின் குலை நடுங்குவது போல் இருந்தது.

அவள் ஓடிப்போய் தன் கணவனை எழுப்பினாள்.

அப்போதும் தள்ளாடிக் கொண்டுதான் அவர் எழுந்தார்.

போதை என்ன, அவ்வளவு விரைவில் இறங்கக் கூடிய போதையா?

அதிகாரிகளைப் பார்த்ததும்தான் அவர் போதை தெளிந்தது.

அதிகாரிகளில் பலர் பூட்ஸ் காலுடனேயே பூஜையறைக்குள் நுழைந்தார்கள்.

எத்தனை இடங்களில் கமல் அப்படி நுழைந்திருக்கிறார்.

'அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்.'-இது அன்று.

தெய்வம் இப்போதெல்லாம் 'ஜீப்' காரில் வருகிறது.

'இன்னார் வீட்டுக்குள் நுழை' என்று யார் உத்தரவு போட்டார்களோ, அவர்கள் வீட்டுக்குள்ளும் ஒருநாள் நுழைந்து விடுகிறது.

கமலின் பூட்ஸ் கால்கள், எத்தனை சுவாமி படங்களை எத்தனை வீடுகளில் தட்டி விட்டிருக்கின்றன?

அதே படத்தை இப்போது கடவுள் கமல் வீட்டில் போட்டுக் காட்டினார்.

பணத்தை யசோதா, ஆசையோடு மட்டும் சேர்த்ததில்லை, பயத்தோடும் சேர்த்திருந்தாள்.

பாங்கில் போட முடியாத பணத்தை அவள் எங்கு கொண்டு போய்வைப்பாள்?

சுவாமிக்கு விரோதமாகச் சம்பாதித்து, மன்னிப்புக் கேட்பது போல் சுவாமியின் படத்திற்குப் பின்னாலேயே வைத்திருந்தாள்.

அங்கே உள்நாட்டு ரூபாய்கள் மட்டும் சிக்கவில்லை. வெளிநாட்டு 'டாலர்'களும் சிக்கின.

வெளிநாட்டில் இருந்து அவர் மகள் எழுதிய கடிதங்களும் சிக்கின.

அந்தக் கடிதங்களில், 'யார் யார் மூலம் அவருடைய மகள் எவ்வளவு பெற்றுக் கொண்டாள்' என்ற விபரங்களும் இருந்தன.

மற்றொரு அறையை அதிகாரிகள் சோதனை இட்ட போது, அங்கு ஒரு சிறிய நகைக் கடையே இருந்தது.

அதைவிட அதிகாரிகள் மிகவும் குறிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தது- கமலின் அலமாரியிலிருந்து கைப்பற்றிய ஒரு போட்டோ ஆல்பம்.

(அந்தரங்கம் வரும்)


படிப்பகம்

www.padippakam.com

# மீண்ட சொர்க்கம்

**ரூபராணி**

நந்தினி நீண்ட நேரமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவள் பாடசாலையில் இருந்து கொண்டுவந்த வருட இறுதிப் பரீட்சை பத்திரங்கள் அரையும் குறையுமாகத் திருத்தியபடி மேசையில் கிடந்தன.

'சே என்ன வாழ்க்கை இது. இந்த வீட்ல ஒரு பிறைவசி கெடையாது. நானும் சங்கரும், கலியாணத்துக்கப்புறம் தனியாக் குடித்தனம் பண்ணி ஜாலியா இருக்கணும் என்று எவ்வளவு ஆசைப்பட்டன். அதில மண்ணை வாரிக் கொட்டினாப்ப மாமியாரும் அவ மகள் மதுராவும் இருக்காங்களே! கறுமம் கறுமம்!' மனதுக்குள் சலித்துக் கொண்ட நந்தினி தன் உள்ளங்கையால் நெற்றியில் அடித்துக் கொண்டாள்.

'சங்கர் வரட்டும் இன்னிக்கி எப்பிடியாச்சும் ஒரு முடிவு எடுத்தாகணும்!' அவளுக்குள் வார்த்தைகள் உரசிக் கொண்டன.



வாசல் கதவு கிரீச்சிட்டதும் நந்தினி தலை நிமிர்ந்தாள். மாமியும் மதுராவும் பிரசாதத் தட்டுடன் உள்ளே நுழைந்தார்கள். அன்று வெள்ளிக்கிழமை என்பது நந்தினிக்கு அப்போதுதான் உறைத்தது.

"என்னம்மா நந்தினி. வெள்ளிக்கிழமையும் அதுவுமா இப்பிடி உக்காந்திருக்கே? மணி ஆறாகப் போகுதில்ல- சங்கர் வர்ர நேரமாச்சே. தலைவிரிகோலமாயிருப்பது ஆகாதம்மா! போய் முகத்தை அலம்பி உடையை மாத்து. நீயும் சங்கரும் உன் சினேகிதி வீட்ட போகணும் எண்டு சொன்ன ஞாபகம் இருக்கா?" சொல்லிவிட்டுப் பிரசாதத் தட்டை நந்தினியின் கையில் கொடுத்தாள் மாமி.

நந்தினி கடுகதி வேகத்தில் தன் அறைக்குள் போய்ச் சேர்ந்தாள்.

'நான் எப்பிடியிருந்தா இவக்கென்னவாம்?' வார்த்தைகள் நந்தினியின் பற்களுக்கிடையில் அரைபட்டன.

"ஹாய் நந்து...!" சங்கர் உள்ளே வந்துவிட்டான். குரல் கேட்டு குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தாள் நந்தினி.

சங்கர் அவளை அதிசயமாகப் பார்த்தான். வாரிமுடிக்கப்படாத அவளுடைய கூந்தலும் வாடிச்சிறுத்த அவளுடைய முகமும் சங்கரைத் திகைப்பில் ஆழ்த்தின.

"அண்ணி, ரீ றெடி!" மதுராவின் அறிவிப்பு அவள் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. நந்தினி கழுத்துச் செயினை வாயில் வைத்துக் கடித்துக் கொண்டிருந்தாள்.

"நந்து, நவீன் எங்கே?"

"பக்கத்து வீட்ல விளையாடப் போயிருக்கான்." சுரத்தில்லாமல் சொன்னாள்.

"உனக்கென்னாச்சு?" சங்கர் அவளருகில் உட்கார்ந்து ஆதரவோடு கேட்டான்.

"ஒரு விஷயம் உங்ககிட்ட சொல்லணும்!"

"சொல்லு நந்து?"

"சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டீங்களே?"

"மாட்டேன்..."

"கோபிக்க மாட்டீங்களே?"

"இல்ல இல்ல..." சங்கரின் நெஞ்சம் அவசரமாய்ப் படபடத்தது.

"எத்தனை நாளைக்கு.. இப்பிடி இருப்பது? இது ஒரு வாழ்க்கையா?" நந்தினி தயங்கினாள். சங்கர் ஒன்றும் புரியாமல் குழம்பினான்.

"நீ என்ன சொல்கிறாய்?" சங்கர் அமைதியாகக் கேட்டான்.

"வாழ்க்கையை நானும் நீங்களும் தனியா என்ஞ்ஜோய் பண்ணணும்."

"அதுக்கென்ன பண்ணிக்குவோம்!" சிரித்துவிட்டான் சங்கர்.

"சிரிப்பு எதுக்கு? ஹுக்கும் எதைத்தான் நீங்க சீரியசா எடுக்கிறீங்க? இப்ப சொல்றேன் கேட்டுக்குங்க. உங்க அம்மா தங்கச்சியோட எத்தனை நாளைக்கு வாழ்க்கை நடத்துறது? ஒரே வீட்ல இப்பிடிச்சேர்ந்து வாழுற வாழ்க்கை போரடிக்குது. ஒரு மாற்றம் தேவைன்னு எனக்குப் படுது. மாமியார் வீடு மகா சௌக்கியம்னு இருக்கப் பிடிக்கல!" சங்கரின் தலை சிதறியது போல் ஓர் உணர்வு.

"நந்து நீ... நெஜமாத்தான் சொல்றியா?"

"நெஜமாத்தான். மாமியும் மதுராவும் அவங்க வீட்ல இருக்கட்டும். நாம வாடகைக்கு ஒரு வீடெடுத்துத் தனிக்குடித்தனம் போயிடுவோம்."

"தனிக்குடித்தனமா? வாடகைக்கு வீடா?" சங்கர் அதிர்ந்து போய்க் குரலை உயர்த்தினான்.

"இதிலென்ன தப்புங்க?"

"தப்பில்ல நந்து. நீ திடீர் முடிவுக்கு வந்ததுக்கு என்ன காரணம்? அம்மா உன்னத் திட்டினாவா?"

"இல்ல."

"மதுரா உன் கூடச் சண்டை போட்டாளா?"

"இல்ல."

"இந்த வீட்ல உனக்கு வேலை கூடிப் போச்சா?"

"அப்பிடி ஒண்ணுமில்லிங்க."

"அப்போ எதுக்குத் தனிக்குடித்தனம் போக யோசிச்சே?"

"எனக்கு இந்தக் கூட்டுக் குடும்ப வாழ்க்கை கொஞ்சம் கூடப் பிடிக்கலீங்க."

நந்தினியுடன் எதையும் பேசிப் பயனில்லை என்று உணர்ந்து கொண்டான் சங்கர்.

"சரி நந்து. உன் இஷ்டப்படியே செய்வோம். எனக்கு ஒருவார அவகாசம் குடு."

ஆவி பறந்த தேநீர்க் கோப்பைகள் இரண்டும் ஆறி அடங்கிப் போய்க் கிடந்தன.

"டேய் சங்கர், நந்தினி, ரீ ஆறிக் கிடக்கு. சூடாக்கட்டுமா? மதுரா முறுக்குப் போட்டிருக்கா மொறு மொறுன்னிருக்கு. வந்து சாப்பிடுங்க... நான் போய் நவீனைக் கூட்டியாரட்டுமா? மணி என்னாகுது? இன்னமும் விளையாடிண்டே இருந்தா எப்பிடி?"

சங்கர் அறைக்குள் இருந்தபடி "சரிம்மா!" என்று குரல் கொடுத்தான்.

சங்கர் அங்கும் இங்கும் அலைந்து ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்தான். அவன் தன் குடும்பத்துடன் குடிவந்து மூன்று மாதங்கள் நகர்ந்துவிட்டன.

நந்தினியின் முகத்தில் ஆரம்பத்தில் அருவியாய் வழிந்த மகிழ்ச்சி அடியோடு வற்றிப்போய்விட்டது போல் சங்கருக்குப் பட்டது. என்றுமில்லாத சிடுசிடுப்பு அவளைத் தொற்றிக்கொண்டது. அற்ப விஷயங்களுக்கெல்லாம் ஆத்திரப்படுவது சங்கரை வியப்பிலாழ்த்தியது. பாட்டியையும் மதுரா மாமியையும் விட்டுப் பிரிந்ததில் நவீனுக்குச் சந்தோஷமில்லை.

"அப்பா! அம்மா... சும்மா திட்டிற்றே இருக்கிறா.... அடிக்கிறா..." நவீனின் அழுகுரலைக் கேட்டுக் கேட்டுப் போதும் போதும் என்றாகிவிட்டது.

சங்கர் பொறுமை இழந்து கத்தினான். "நந்தினி உனக்கு என்னாச்சு? ஏன் இப்பிடி நடந்துக்கிறே? பேய் பிசாசு ஏதும் உன்னைப் பிடிச்சிருக்கா?"

"ஆமா பிடிச்சிருக்கு: நீங்க இதுவும் கேப்பீங்க-இன்னமும் கேப்பீங்க. நா ஒருத்தி தனியாக் கிடந்து சாகிறன். பள்ளிக்குப் போகணும். முந்திமாதிரி படிப்பித்தல் இல்ல ஏகப்பட்ட வேல. சமைக்கணும்; வீட்டக் கவனிச்சுக்கணும். நவீனுக்கு ஆகவேண்டிய அத்தனையும் என் கையாலே முடியணும். நான் என்ன மனுஷியா மிருகமா?" படபடவென்று சுடுகாய் வெடித்தாள் நந்தினி.

"நந்து உன்னை என்னால் புரிஞ்சிக்கவே முடியல்ல. கூட்டு வாழ்க்கை பிடிக்கல என்றாய்! சரி வந்தோம் நீ விரும்பியபடி என்ஜோய் பண்ண. இப்ப என்னாச்சு?" சங்கர் சாதாரணமாகக் கேட்டான்.

நந்தினியின் கண்களில் நீர் நிறைந்தது. மாமியும் மதுராவும் காட்டிய அன்பும், ஒத்தாசையும் அவள் நினைவில் ஒவ்வொன்றாய் வந்து மோதின.

"என்னங்க, நான் இப்பவே மாமியையும் மதுராவையும் பார்க்கணும். நான் இழந்த சொர்க்கத்தை மீண்டும் அடையவேண்டும். தனிக்குடித்தனம் வேண்டாங்க." நந்தினி கதறி அழுதாள். 'ஒன்றின் இழப்புத்தான் அதன் அருமையை உணர்த்துகிறது!' சங்கர் சிந்தனையுடன் புறப்பட ஆயத்தமானான்.

# பரிசு

**ஜெ. சூரியன்**



அந்த உலகக் கோப்பைக்கான இறுதிப் போட்டி முடிவைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்டெல்லாவின் மனதிலெழுந்த கிளுகிளுப்பு சொல்லி முடியாதிருந்தது. நாட்டிற்குச் சிறப்பைத் தேடித்தந்த பெருமையை அவள் கணவன் அந்த அணியின் காப்டனாக இருந்து பெற்றுத்தந்ததில் நிறையப் பூரித்துப் போனாள். என்னவொரு ஆரவாரச் சந்தோஷப் பரிமாறல்கள்.

பல. நாட்டுடன், பல நாட்களாக முகாமிட்டு போர்புரிந்து வெற்றிவாகை சூடியது போன்றதொரு பெருமிதக் களிப்பு அந்நாட்டு மக்களிடையே அலைமோதுவதை ரி.வி. வழியாக, வானொலி மூலமாக, நேரிடையாக பார்த்து கேட்டு இரசித்ததில் முழுப்பங்கும் அந்த டீமுக்கு தலைமை வகித்த தன் கணவனையே சார்ந்ததென்கிற எண்ணம் அவளை வானத்துக்கு தூக்கிப் போய்க் கொண்டிருந்த வேளையில், அந்தத் தொலைபேசி வாழ்த்து வந்தது அவளுக்கு.

சை! அத்தனை சந்தோஷப் பூக்களும் நிமிஷத்தில் வாடிக் கருகிப்போக சோர்ந்து போனாள். ரி.வியில் கப்பை வாங்கி வைத்திருக்கும் டேவிட்டை சூழ சக ஆட்டக்காரர்களது சுற்றிவளைப்பும், கை தட்டல்களும், இரசிகர்களது வாண வேடிக்கைகளுமாக, மைதானம் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்த காட்சி அவளுக்கு இப்போது பெரும் வெறுப்பை மூட்டியது.

ரி.வியை நிறுத்திவிட்டு எழுந்து உள்ளே போனவள் மனது ஒரு நிலைப்பட மறுத்தது. எதையாவது உடைத்து நொறுக்கி, தன் மனசின் கோபத்தை, ஏமாற்றத்தை தீர்த்துக் கொள்ளும் தவிப்பில் களைத்துப் போனாள். என்னவொரு கேவலம். கேட்டது முதல் அவளுள் வெட்கமும், வேதனையும் பிராண்டின. 'இப்படி நாட்டை விற்க, விலை பேச எப்படி முடிகிறதோ இவர்களால்?' எண்ணம் தந்த சீற்றம் ஸ்டெல்லாவை கொதி நிலையில் வைத்தது.

விருந்தெல்லாம் முடிந்து வெற்றிக் களிப்புடன் உள்ளே நுழைந்த டேவிற்சன் பரிசுப் பொருட்கள், பணவவுச்சர், மேலும் தன் மனைவிக்காக வாங்கியிருந்த பரிசுப் பொருட்களையெல்லாம் உற்சாகமாக சீட்டியடித்தவண்ணம் எடுத்து மேஜைமீது வைத்துக் கொண்டவனாக மனைவியைப் பார்த்தான் ஓரவிழிகளால். அவள் எதையுமே தொட்டுப்பாராமல் முகம் கோபத்தில் ஆங்காங்கே திட்டுத்திட்டாக அழுத்திக் காட்ட நின்றிருந்தாள்.

புரியாத குழப்பத்துடன் "என்ன ஸ்டெல்லா எத்தனை பெருமையை நாட்டுக்கு தேடித்தந்துவிட்டு வந்து நிற்கிறேன். நீ எந்தவித வரவேற்பும் இல்லாமல் உம்மென்று இருக்கிறாயே?" என்று கேட்டான் டேவிற்.

மோவாயை தொட்ட அவனது கரங்களை தட்டிவிட்ட ஸ்டெல்லாவுக்குள் அந்த ஃபோன் வாழ்த்து மீண்டும் எதிரொலித்தது. கொதிப்பை ஏற்படுத்த அவனை எரித்து விடுபவள் போலப் பார்த்தாள்.

அவன் யோசனையானான். 'என்ன நடந்திருக்கும்..?'

"உங்க வெற்றிச் செய்தியைச் சொன்னார். உங்ககூட எதிரணியிலாடிய காப்டன்!"

"ஓ அதுவா கிடக்கிறான் விடு பிச்சைக்காரப் பரதேசிகள்" என்றான் கேலியாக.

"அப்போ அவங்க ஏழ்மையைப் பயன்படுத்திக்கிட்ட நீங்க பெரிய சாதனையாளர்களாக்கும்?" குத்தலாக கேட்டாள் ஸ்டெல்லா.

அவள் கேள்வியிலிருந்த இடறலையுணர்ந்தவன் அவளைத் திரும்பி நோக்கினான். "இதோபார்! எங்களுக்கு வேண்டியது உலகத்தின் பார்வையில் வெற்றிக்கான பரிசு!" அவர்களது குறி பணத்தின்மீது. வந்திருந்த நாடுகளில் மற்ற எந்த நாடுமே பணத்துக்காக விட்டுக்கொடுக்கமாட்டார்கள். அவங்களுக்கு நாட்டு நலன் பிரதானமான குறிக்கோள் என்பது தெரியும். ஆனா இந்த அணியினர் நம்முடன் ஃபைனலில் மோதியது நம்மதிர்ஷ்டமே. இலேசில் வெல்ல முடியாத அணி. பயங்கரமாக ரன் குவிக்கும் ஆட்டக்காரர்கள். அசத்தலாக பந்துவீசி விக்கட்டை விழுத்தும் திறமைசாலிகளைக் கொண்டிருந்தாலும், பணத்தின் முன் பலவீனமானவர்களென்பது எமக்கு தெரியும். வெற்றிக்கோப்பை தரும் பணத்தைப் போல இரு மடங்கு தருவதாக பேரம் பேசினேன் விக்கட் போச்சு, கப் எங்கள் கைவசம் வந்தது!" என்றான் எகத்தாளமாக.

"அதான் வாழ்த்தோடு உங்க வஞ்சகமான லஞ்ச ஊழலையும் கோடுகாட்டி தமாஷாக கூறுவது போல் கூறினார் அந்த காப்டன். எனக்கு மானமே போய்விட்டது. நினைத்துப் பார்த்தேன். அவர்களது ஏனோதானோ வென்ற ஆட்டம் அதனை ஊர்ஜிதப்படுத்தியது. கூர்ந்து பார்த்தால் எவருக்குமே புரிந்துவிடும். சே.திறமை, உழைப்பு, நேர்மையில் கிடைக்கும் வெற்றிதான் பெருமைக்குரியது. அவ்வகையில் தோல்வியேயானாலும் பாராட்டுக்குரியது." என வெறுப்பாக பேசினாள்.

"என்ன சொல்கிறாய்?" என்றான் அதிர்ந்தவனாக.

"என்ன சொல்லக்கிடக்கிறது? என் கணவனது தலைமையில் எடுத்த வெற்றிக்கனி எப்படிப்பறிக்கப்பட்டதென்பது எனக்குத்தான் தெரியும். இப்படிப்பட்டதொரு நயவஞ்சகமான வெற்றிக்கு நீங்கள் காப்டனென்று சொல்லி பெருமைப்படுவதைவிட கேவலம் வேறேதாவது இருக்கா? எதிலும் நேர்மையை, அதன் செயல்பாடு தரும் பலன் எதுவானாலும் அதை, அதையேதான் எதிர்பார்ப்பவள். அதில்தான் என்றென்றும் பெருமைப்படும் விஷயங்கள் நிரம்ப இருக்கும். அதை நீங்கள் தராவிட்டாலும் பரவாயில்லை. ஆசை இதன் மூலம் நாட்டையல்லவா அசிங்கப்படுத்திவிட்டீர்கள். இது தெரியவரும்போது எப்படியிருக்கும். சே. உங்களைப் பார்க்கவே பிடிக்கவில்லை, ஒரு நேர்மையற்ற, ஏமாற்றுக்காரருடன் வாழப்பிடிக்கவில்லை!" என ஆத்திரமாக வெடித்தவள் அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டாள்.

ஆங்காங்கே சிதறிக்கிடந்த பரிசுப் பொருட்களெல்லாம் அவனைப் பார்த்து ஏளனமாகச் சிரித்துக் கொண்டிருந்தன இப்போது.

# வயலோர நினைவுகள்

**வீரமுனை வானவர்கோன்**

மோட்டார் சைக்கிளை வீதியால் விரைவாகவும் ஓட்ட முடியுதில்ல. கண்ட கண்ட இடத்திலெல்லாம் வேகத் தடையும் காணாக்குறைக்கு சோதனைச் சாவடிகளும்.. மோட்டார் சைக்கிளை மெதுவாக உருட்டிச் சென்று எதிரே நிற்கும் ஆமிக்காரனிடம் அடையாள அட்டையைக் காண்பித்து, அவனின் சைகை கிடைக்கும் வரை காத்து நின்று, அடையாள அட்டையை வாங்கிக் கொண்டு பயணத்தை ஆரம்பித்தேன்.



இன்று ஞாயிற்றுக்கிழமை, முருகேசையும் கூட்டிக் கொண்டு வயலுக்குப் போயிற்று வருவம். ஆத்தில குளிச்சி எவ்வளவு நாளாயிற்று? அந்தப் பசுமையான வாழ்க்கை எல்லோருக்கும் அமைந்து விடுவதில்லை. பசுமையான சூழல் கூடவே இருந்தும் அனுபவிக்கத் தெரியாதவர்களும் இருக்கிறார்கள் தானே? அந்த வரிசையில்தான் நானும் இருக்கிறேனோ!

பச்சைப்பசேலென கண்ணுக்குக் காட்சி தரும் வயல்வெளியில் தலையைக் குனிந்து காற்றின் சுருதி லயத்துக்கு ஏற்றபடி சாய்ந்தாடும் பொன் நிறமான நெற்கதிர்கள் மனதுக்கு எவ்வளவு நிறைவைத் தருகின்றன.

தென்றலுடன் கலந்து வரும் குளிரும், அந்த நேரத்தில் வரம்பில் நடக்கும் போது தடக்கி விழுந்து சேற்றைப் பூசிக் கொள்ளும் நினைவுகளும் விட்டபாடில்லை. பாலனுக்கு இப்படியொரு கதி ஏற்படுமென்று தெரிந்திருந்தால் அவனைக் கூட்டிக் கொண்டு போகாமல் விட்டிருக்கலாம். அல்லது தென்னந்தோட்டத்துக்குள் இளநீர் குடிப்போமென்று போன எமக்கு களவாகக் கள்ளுக் குடிக்கும் ஆசை ஏற்பட்டிருக்கக்கூடாது. சுறுசுறுப்புக்குப் பெயர் பெற்றவனல்லவா பாலன்? இளநீர் கீழே விழுந்தால் உடைந்துவிடுமென்று வாயினால் கவ்விக் கொண்டு இறங்கி வந்து பதமாக வெட்டித் தருவானே!

பதினைந்து வருசத்துக்கும் மேலாக வயலில் முல்லைக்காரனாக இருந்தாலும், நண்பனாகவே பழகியவன். கடவுள் இப்படியொரு திடீர் முடிவை எடுத்திருக்கக்கூடாது. இன்னும் எவ்வளவோ காலத்துக்கு வாழ வேண்டியவன், சின்ன வயதில் கலியாணம் செய்ததால் பொம்புளப்புள்ளைகள் மூன்றுக்குத் தகப்பனல்லவா பாலன்? அவன் என்னை ராசேந்திரன் என அழைக்கும் குரலோசை அடிக்கடி வந்து போகின்றது. "ஓசிக் கள்ளென்றபடியினால கூடக் குடிக்காதையுங்க, தூக்கிச் சாத்த என்னால முடியாது!" என்றெல்லாம் பல தடவை கூறியிருப்பானே, அவனுக்கா இந்தக் கதி! கண்ணி வைத்து கொக்குகளைப் பிடித்தெடுப்பதில் கில்லாடி அவனைத் தவிர வேறெவரையும் நான் பார்க்கவேயில்லை.

"மச்சான் கதைத்துக் கொண்டிருங்க, அஞ்சு நிமிசத்தில வந்திருவன்." என நரலால் பின்னப்பட்ட கண்ணிவலையை எடுத்துச் சென்று கொஞ்ச நேரத்துக்குள்ளேயே கொக்குகளைப் பிடித்து உரித்தெடுத்து இறைச்சியாகக் கொண்டு வருவான் பாலன். "இப்படியே ஒன்றும் செய்யாமல் கதைத்துக் கொண்டிருந்தால் பாலன் வந்தால் ஏசுவான்!" எனக்கூறி அடுப்பை மூட்டித் தேநீர் வைக்கத் தொடங்குவான் முருகேசு. அத்தோடு கறிக்குத் தேவையான உப்பு, கொச்சிக்காய்த்தூள், வெங்காயம் போன்றவற்றைத் தயார்ப்படுத்தி வைப்பான்.

அந்த நேரத்தில் எனக்கும் முருகேசுக்குமிடையே சிரிப்பும் கும்மாளமும் தாராளமாக வந்து போகும். இடையிடையே கேலிப் பேச்சுகளும் ஊர்க்கதைகளும் எட்டிப் பார்க்கும். சில வேளைகளில் காதல்கதைகளும் வந்து செல்லும். அதில் கட்டுக் கதைகளுக்குப் பஞ்சம் இருக்காது. இதில் சூடு பிடித்தலும் ஒருவரையொருவர் துரத்தி ஓடி, ஓட முடியாமல் வயலுக்குள்ளால் பாய்ந்து ஓடி விழுந்து சகதியை உடலெல்லாம் பூசி, அருகிலுள்ள ஆற்றுக்குச் சென்று குளித்துவிட்டு வருவது அடிக்கடி நிகழும் சம்பவம்.

கொக்கு வேட்டையை முடித்து, வயலின் வீடான பறணை நோக்கிப் பாலன் வரும் போது அங்கு அடுப்பு அணைந்து நெருப்பில்லாமல் கிடக்கும். கொண்டு வந்த இறைச்சியை தனது கையாலே துண்டு துண்டாக வெட்டி சுவையாகச் சமைத்து, கறிச்சட்டியைப் பறணில் வைத்துவிட்டு எங்களைத் தேடி ஆற்றங்கரைக்கு வருவான் பாலன். எங்களைக் கண்டதும், "டேய் ராசேந்திரன் அறிவு இல்லையாடா உங்களுக்கு? போன என்னைத் தேடி பார்ப்போமென்றில்லாம விளையாடிக் கொண்டிருக்கிறீங்க!" எனக் கோபமாக முகத்தைக் காட்டிக் கொண்டு ஆற்றினுள் குதிப்பான்.

குளித்து முடிந்ததும் பறணுக்கு வந்துவிட்டால் பழையபடி சிரிப்புத் தொடங்கிவிடும். மோட்டார்சைக்கிள் பையில் இருந்த போத்தலை வெளியே எடுத்தபோது சந்தோசத்தின் உச்சிக்கே சென்று விட்டனர் பாலனும் முருகேசுவும். கொஞ்சங்கொஞ்சமாகப் பருகி, நேரம் போனதே தெரியாமல் உள்ளேயிருந்ததை மூவரும் முடித்துவிட்டோம். பாலன் சமைத்த கொக்குக்கறி எவ்வளவு சுவையாக இருக்குதென்று முருகேசு பாலனைப் புகழ்ந்து கவிதை பாடினான். முருகேசுவுக்குப் போதை தலைக்கேறினால் அங்கு கவிதைக்கும் பாட்டுக்கும் பஞ்சமிருக்காது.

தண்ணீர் எடுப்பதற்கென வாய்க்காலுக்குச் சென்ற பாலனை, "பாலா பாலா ஓடி வா இறைச்சிக்கறி சமைப்போம் ஓடி வா!" எனக் கேலியாக அழைத்துச் சிரிப்போம். அச்சந்தோசமான சூழலில் தவழ்ந்து வரும் தென்றல் எங்களைத் தாலாட்டி நித்திரைக்கு அழைத்துச் செல்லும்.

"ராசேந்திரன் எழும்புடா. தண்ணி அள்ளப் போன பாலனை இன்னும் காணல்ல, போய்ப் பார்த்திட்டு வருவம்!" எனக் கூறி என்னைத் தட்டி எழுப்பினான் முருகேசு.

அவன் சென்ற வழியே போய்ப் பார்த்த போது, வரம்போரத்தில் உணர்வற்று விழுந்து கிடந்தான் பாலன். அவனது முகம் சேற்றினுள் புதைந்து இருந்தது. இருவருமாகச் சேர்ந்து பாலனைத் தூக்கி பாதையோரத்துக்கு கொண்டு வந்தபோது பாலனின் உயிர் அவன் உடலில் இருக்கவில்லை, அவனுடன் பழகிய வயலோர நினைவுகள் மட்டும் இடைவிடாமல் வந்து செல்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்

# பெண்

தருவது ராதிகன்



சுவாசிக்கும் காற்றும் சுதந்திரமாய் இல்லை!
அந்நியர் மூச்சு காற்றிலும் கலந்தது!
மண்ணின் மார்பில் மாற்றார் காலடி!
கண்ணின் மணியான பொன்னான பூமி புண்ணாகிப் போனது!
முற்றத்திற்கு வந்தது குற்றமுள்ள பகை!
வீரபாண்டியன் வெஞ்சமர்க் களத்தில்!
அவனும் படைகளும் எழுகதிராய் சமரில்!
சூரிய பூமிரிது சூரிய பகைவரினும் வீரியம் கெடாது!
வெற்றி பெற்றால் மகிழ்வோம்! வீழ்ந்து போனாலும் கலங்கோம்!
வாழும் போது வீரக் கதை படைப்போம்! வீழும் போது வீர விதையாக விழுவோம்!
வீரபாண்டியன் படைகள் உரமோடு சமராடின!
மலையாக வந்த பகை மலைத்து நிற்க அலை அலையாக மக்கள் படை திரண்டது!
பாண்டியர் பலம் கண்டு பகைவர் கலங்கினர்!
களத்தில் படை நடத்திய வீரபாண்டியனின் வெற்றிச் செய்திக்காக காத்திருந்தாள் கண்மணி!
அவள் வீரபாண்டியனிடம் இதயத்தை இழந்தவள்!
இரவல் இதயத்தோடுதான் வீர பாண்டியன் புரவியில் ஏறி களம் புகுந்தான்!
கண்மணியின் இதழ்களை சுவைத்து அமுதினைப் பருகிவிட்டே பொன் மகன் புறப்பட்டான்!
நெற்றியோடு நெற்றி மோதிட, நெஞ்சோடு நெஞ்சு மோதிட, தழுவித் தேய்கையில் வழுவிப்போகும் மனம்!
பூங்கொத்து அவள் மாங்கொப்பு அவன்! கொப்பில் கொடிபடர தோப்பில் தீ பரவும்!
அம்பினில் குஞ்சை கூட்டினில் வைத்ததுபோல் நெஞ்சினில் வைத்த காமம் நினைவெல்லாம் தீயாக்கும்!
பற்றி எரிந்தன தேகங்கள்! இன்னும் தா தா என்று கேட்கும் தாகம்!
இளமையின் தேடல் வேகம்! இனிமையை நாடும் மோகம்!
தனிமையை வெல்லும் சங்கமம்! எங்கும் பொங்கும் காதல் மங்களம்!
தணிக்க தணிக்கத்தான் பெருகும்! இறைக்க இறைக்கத்தான் ஊறும்!
வற்றாத கிணறுதான் ஆசை! முற்றாத கதைதான் காமம்!
வீரபாண்டியனும் கண்மணியும், கரை காணத்தான் துடித்தார்கள்!
கைக்கெட்டும் தூரம் போல் கண்ணுக்குத் தெரியும்! நெருங்க நெருங்க எட்டிப் போய்க்கொண்டிருக்கும்! அந்த கரை போன்றதே காதலும், காமமும்!
கரையை காண்பதற்கான சங்கம யுத்தம் காலமெல்லாம் தொடரும்! அந்த யுத்தத்தில் சித்தமெல்லாம் இனிக்கும்!
கண்மணி இப்போது கடலில் தனித்திருந்தாள்!
கரைகாணும் நீச்சலுக்கு துணைக்கு ஜோடி இல்லை!
இப்போது அவள் உள்ளமெல்லாம் வீரபாண்டியன் வெற்றியோடு வரவேண்டும், வீரநடையோடு திரும்பவேண்டும் என்பதுதான்!
களத்தில் நிகழ்ந்ததோ வேறு கதை!
பகைவன் ஒருவன் பதுங்கியிருந்து எறிந்த வேல் பாண்டியன் மார்பில் பாய்ந்துவிட்டது!
வீரர்கள் கலங்கினர் விழிகளில் கடல்!
பாண்டியன் உதட்டில் புன் முறுவல்! மதயானையின் பிளிறலாய் உயர்ந்தது அவன் குரல்.
"வீழ்ந்தது நான் மட்டும்தான்! வெல்வது நாங்களாக இருக்கட்டும்!
என்னை அழிக்கலாம் எங்களை அழிக்கமுடியாது!"
பாண்டியன் படைகள் சிலிர்த்து நிமிர்ந்தன! படுகளம் புகுந்து பகையுடன் பொருதின!
கண்மணிக்கு களச் செய்தி கிடைத்தது!
அவள் நெஞ்சுக்குள் புயலடித்தது!
சோகம், சோகம் ஆறாத சோகம்!
யானையாக நடந்து புரவியிலே பாய்ந்து புயலாக போனவன் போயே விட்டான்! இனி வரவேமாட்டான் கனிவான முகம் காட்டமாட்டான்!
நினைக்க நினைக்க நெஞ்சு கனத்தது!
திடமான மனதோடு முடிவொன்று செய்தாள்!
உள்ளே போனவள் முள்ளாய் வந்து நின்றாள்.
பகையைக் குத்திக் கிழிக்கும் முள்!
"களத்திற்கு, பெண்கள் வருவது முறையா? பகைவரை எதிர்க்கும் உரமுண்டா உடலில்?"
கண்டவர் வியந்தனர் விலகினர் வரைந்தனர்!
"வேந்தன் நெஞ்சிலே வேல் பாய்ந்து மாண்டதும், 'ஏந்தடா வேல்' என்று மைந்தனை அனுப்பிய மாதாவின் கதையுண்டு! அது புறநானூறு!
வேந்தன் வீழ்ந்தான் என்பதை அறிந்ததும் வெஞ்சமர்க் களத்துக்கு துணைவி செல்வது புது நானூறு!"
புகுந்தாள் களத்திலே பிளந்தாள் பகைவரை!
வெற்றிக்கொடி கட்டினாள். வீர நடை காட்டினாள்!
"பாண்டியன் மனைவி வீரத்தில் தேவி!" படை ஆர்ப்பரித்தது!
முலைப்பாலுடன் வீரம் புகட்டுவதும் பெண் தான்!
வார்த்தைகளால் துணைவனுக்கு வீரம் ஊட்டுவதும் பெண்தான்!
வாளேந்தி பகை துடைக்கும் வீரமுள்ளவளும் பெண்தான்!
காதலும் செய்வோம் காதகரையும் கொல்வோம்!
காதலுக்கும் இனியோம் சாதலுக்கும் அஞ்சோம்
அன்புக்கு பூ ஆவோம் எதிரிக்கு முள் ஆவோம்!"
அவள் அன்று கூறியதைத்தானோ பாட்டுக்கு ஓர் புலவன் பாரதியும் பின்னாளில் பாட்டாக்கினான் இப்படி;
"திறமையால் இங்கு மேனிலை சேர்வோம்
தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்;
குறைவிலாது முழு நிகர் நம்மை
கொள்வ ராண்க ளெனிலவ ரோடும்
சிறுமை தீரநம் தாய்த் திரு நாட்டைத்
திரும்ப வெல்வதில் சேர்ந்திங் குழைப்போம்!
அறவி முந்தது பண்டை வழக்கம்
ஆணுக்குப் பெண் விலங்கெனும் அஃதே"

# சிந்தியா பதில்கள்

✿ ஆட்சியில் இருந்து வெளியேறப்போவதாக அமைச்சர் அஷ்ரப் கூறியுள்ளாரே?

எஸ்.இமாம், கல்முனை.

இது எத்தனையாவது முறை?!

✿ முன்னாள் அமைச்சர் செ.இராசதுரைக்காக மலர் ஒன்று வெளியிடப்பட்டுள்ளதே? பார்த்தீரா?

எல்.சீனிவாசகம், கொழும்பு-11

பார்த்தேன்! ஆனால் தேனல்ல- திகட்டல்! எமது கௌரவ ஆசிரியர் கொடுத்த பாராட்டுக்கூட இடம்பெற்றுள்ளது. எனினும் உண்மையைக் கூறவேண்டும் தானே! தமிழர் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டதாக அவரைப் பலரும் போற்றி எழுதியுள்ளனர். ஆனால் மலரில் ஈழத் தலைவர்களுடன் இணைந்து நின்ற படங்களோ, போராட்டங்களில் பங்கு கொண்ட படங்களோ இல்லையே! அந்தப் படங்களைவிட, அயல் நாட்டு, பிறநாட்டு பெரும் தலைகளோடு நின்று எடுத்த படங்களைத்தான் பெருமையாகக் கருதி வெளியிட்டுள்ளனர். மலரின் முகப்பிலும் இலங்கை என்று குறிப்பிடாது தமிழிலும் சிறீலங்கா என்று பொறித்துள்ளனர். அந்நாள் இலட்சியங்களை மறந்த முன்னாள் அமைச்சர் என்பதே பொருத்தம்!

✿ அமைச்சர் கதிர்காமர் ஐ.நா.சபையை நுளம்புக்கு மருந்தடிக்குமாறு கூறியுள்ளாரே?

வி.அருள்மேரி, கொழும்பு-12.

ஆனால் தாம் மட்டும் ஆயுதங்களையும், குண்டுகளையும் வாங்கி தமிழ் பேசும் மக்களை அடித்துக் கொண்டிருப்போம் என்கிறார். நல்ல கொள்கை!

✿ நல்ல ஆசிரியர்கள் அமைந்தால்கூட சில மாணவர்கள் மக்குகளாக இருக்கிறார்களே?

எம்.மகேஸ்வரி, கொழும்பு-06.

அறிவு, ஞானம் என்பவை பிறர் கற்றுக்கொடுத்து வருவதில்லை. அவரவர் அனுபவத்தில் வரவேண்டும். இதோ ஒரு குட்டிக் கதை:

ஒருவர் ஞானம் பெற குருவைத் தேடிப் போனார்.

"எனக்கு ஞானம் ஏற்பட ஒருவழி சொல்லுங்கள்?" என்று கேட்டார்.

குரு எழுந்து, "எனக்கு ஒண்ணுக்கு வருகிறது. போய்க் கழித்துவிட்டு வருகிறேன்!" என்று ஒதுக்குப்புறமாகச் சென்றார்.

ஞானம் பெற வந்தவருக்கு ஒரே குழப்பம். ஞானம்கேட்டால் இவர் ஒண்ணுக்கு போகிறாரே என்று குழப்பம்.

குரு திரும்பிவந்தார். ஞானம் பெற வந்தவரிடம் குரு கூறினார்:

"ஒவ்வொருத்தரும் ஒண்ணுக்குப் போவதென்றால் அவரவர்தான் போகவேண்டும். எனக்காக இன்னொருவர் ஒண்ணுக்குப் போக முடியுமா?"

தேடி வந்தவருக்கு ஞானம் கிடைத்து விட்டது.

✿ "தமிழை தாய் மொழியாகக் கொண்டவரே இலங்கையை ஆட்சி புரியப் போகிறார்!" என்று சோம தேரர் என்பவர் கூறியுள்ளாரே?

க.சந்திரசேகரன், வவுனியா.

அதே அச்சம்தான் ஆட்சியில் இருப்போருக்கும். அதனால்தானே தமிழ் மாணவர்களிடம் சிங்களத் திணிப்புக்கு திட்டமிடப்பட்டுள்ளது! எனவே தேரர் வேறு- ஆட்சித் தேரில் உள்ளோர் வேறு அல்ல!

✿ குற்றவாளிகளை நாடுகடத்தும் ஒப்பந்தத்தில் அமெரிக்காவும், இலங்கையும் கையொப்பம் இட்டுள்ளனவே?

ஏ.ஆதாம்லெப்பை, மட்டக்களப்பு.

யுத்தத்தில் அப்பாவி மக்கள்மீது குண்டுகளைப் போடுவது குற்றம்தான். அதே குற்றத்தை அமெரிக்காவும் செய்துள்ளது. இலங்கையும் செய்துள்ளது. இவர்களை எங்கிருந்து எங்கே கடத்துவதாம்!

✿ சிந்தியா! இந்தியா சகல ஆட்டங்களிலும் தூள் கிளப்பிவிட்டு, இறுதிப் போட்டியில் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியிடம் கோட்டைவிட்டுள்ளதே?

பி.புஸ்பராணி, பசறை.

சென்ற வார பதிலைப் பார்க்கவும்.

✿ ரசியா- செச்னியா மோதல் பற்றி என்ன கூறுகிறீர்?

மா.ஜெகநாதன், திருமலை.

சோசலிச ஆட்சி வீழ்ந்ததை முதலாளித்துவ உலகம் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. சோசலிசத்தை இழந்ததால் முன்னாள் சோவியத் யூனியனாக இருந்த நாடுகள் இன்று சிதறுண்டு திண்டாடிக் கொண்டிருக்கின்றன.

✿ தம்பட்டம் அடிப்பவர்களை மட்டம் தட்ட ஒரு யோசனை கூறுங்கள்?

எம்.சாமிலா, மன்னார்.

யோசனை அல்ல; அயலகக் கதை ஒன்று கைவசம் உண்டு:

தமிழ் ஆசிரியர் ஒருவர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். தம்பட்டம் அடிப்பது அவர் வழக்கம்.

"நான் பள்ளியில் படிக்கும்போது திரு.நடேசமுதலியார், தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாத ஐயரின் சீடர் சிவப்பிரகாசம், முத்தமிழ் அறிஞர் சி.ஆ.பெ.விசுவநாதம் போன்ற பெரிய தமிழறிஞர்கள் எல்லோரிடமும் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இப்படி எனக்குக் கிடைத்த பெருமையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

அதற்கு ஒரு மாணவன் எழுந்து கூறினான்:

"பரவாயில்லை ஐயா! உங்களுக்காவது நல்ல வாத்தியார் கிடைத்தாரே!"

✿ இலங்கையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவை என்று ஆசிய மனித உரிமைகள் அமைப்புக் கூறியுள்ளதே?

ஆர்.குமாரலிங்கம், வவுனியா.

இங்கு ஒரு தீர்வு அவசியம் என்பதை உலகமே ஏற்று, தலையிடக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ் பேசும் தரப்பு ஒன்றுபட்டு நின்று, இந்த நாட்டுக்குள் பிரச்சனை தீராது. அரசாங்கத்தில் நமக்கு நம்பிக்கையில்லை என்று கூறினால் பெரும் தாக்கம் ஏற்படும்.

✿ 'செல்லுலார்' தொலைபேசியை கையடக்கத் தொலைபேசி என்று கூறுவது சரியா?

ஆ.பிரமிளா, வத்தளை.

'சக்தி' வானொலியில் அப்படிக் கூறப்படுகிறது. செல்லுலாரில் மட்டுமல்ல, சாதாரண தொலைபேசியிலும் கையடக்கத் தொலைபேசிகள் வந்துவிட்டன. அவற்றை ஆங்கிலத்தில் 'கோட்லஸ்' என்பர். செல்லுலாரில் கைக்குள் அடங்காத பெரிய அளவானவையும் உண்டு. 'செல்லிடப்பேசி' என்பதே செல்லுலாருக்கு தமிழக அரசு வெளியிட்ட அகராதியில் உள்ள பெயராகும். அதுவே பொருத்தமும்!

✿ வழி காட்டுபவர்கள் வழி மாறலாமா?

க.ஆனந்தன், யாழ்ப்பாணம்.

அறிஞர் ஒருவர் தம் சீடர்களுக்கு வெகு நேரம் உபதேசம் செய்தார். பின்னர் இறுதியாகக் கூறினார்:

"எல்லோரும் என்னையே பின்பற்றுங்கள். முடிந்தால் எனக்கு முன்னே செல்லுங்கள்!"

அன்றிரவு அவர் தம்மை அழகாகச் சிங்காரித்துக் கொண்டு விபச்சாரி ஒருத்தியின் வீட்டுக்குச் சென்றார்.

கதவைத் திறந்தார்.

உள்ளே சீடன் விபச்சாரியோடு கொஞ்சிக் கொண்டிருந்தான்.

"ஏன்டா மூடா, ஏன் இங்கே வந்தாய்?" என்று சீறினார் அறிஞர்.

"உங்களுக்கு முன்னே செல்லச் சொன்னீர்களே?" என்று பணிவுடன் பதிலளித்தான் சீடன்.

✿ விஜய்யின் 'மின்சாரக்கண்ணா' பிரசாந்த் 'ஜோடி' இரண்டில் எது அசத்தல்?

கி.செல்வமலர், தெகிவளை.

'ஜோடி'க்கு அடுத்ததுதான் 'மின்சாரக் கண்ணா' இசை, இயக்கம் இரண்டிலும் 'ஜோடி' முந்திவிட்டது.

✿ தொல்லை தவிர்ப்புக் குழு வாரத்துக்கு ஒரு தடவை கூடுகிறதே?

மி.சூசைப்பிள்ளை, கொச்சிக்கடை

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசுக்கு ஏற்படும் தொல்லைகளைத் தவிர்ப்பதில் வெகுகரிசனையுடன் செயற்படுகிறார்கள் என்ற அர்த்தம்!

✿ புளொட்டுக்குள் உள் முரண்பாடு இருந்ததை சித்தார்த்தன் ஒப்புக்கொண்டுள்ளாரே?

சி.வசந்தகுமார், வவுனியா.

'முரசு' கூறியது உறுதியாகியுள்ளது! முரண்பாடே இல்லை என்றவர்கள் இப்போது ஒப்புக்கொண்டுள்ளனர்!

✿ மாணிக்கதாசன் மறைவுக்கு புளொட் இயக்கத்தினர்கூட வருத்தம் காட்டவில்லையே? கொல்லப்பட வேண்டியவர் என்பது போலத் தானே அவர்களது நடவடிக்கைகள் உள்ளன?

மு.விக்னேஸ்வரா, நேரியகுளம்.

ஆம்! 'கொல்லப்பட வேண்டியவர்தான் ஆனால் நாம் கொல்லவில்லை' அதுதான் மறைமுகமாகத் தொனிக்கிறது! அண்மையில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில்கூட தாசனுக்காக யாரும் வருந்தவில்லை!



'குஷி' படத்தில் விஜய்-ஜோதிகா

(ஸ்போர்ட்ஸ்)

## லாராவின் எச்சரிக்கை

பிரையன் லாரா தலைமையிலான மேற்கிந்தியத் தீவு அணி வீரர்கள் பங்களாதேஷிற்கு குறுகிய கால சுற்றுப் பயணம் செய்துள்ளனர். மேற்கிந்தியத்தீவுகள் அணி, பங்களாதேஷை எதிர்த்து 3 நாள் போட்டி, மற்றும் 2 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடும் திட்டத்துடன் புறப்பட்டது.



இந்தச் சுற்றுப் பயணம் தொடர்பாக மேற்கிந்தியத்தீவு கப்டன் பிரையன் லாரா கூறும்போது,

"பங்களாதேஷ் அணியைக் குறைத்து மதிப்பிட்டு விடக்கூடாது. அந்த அணியினரைச் சமாளிக்க எம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும், என்று எங்களது அணிவீரர்களுக்கு நான் எச்சரிக்கை விடுத்துள்ளேன்!" என்று தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய அணியின் பயிற்சியாளர் கிளைவ் லொயிட் கருத்துத் தெரிவிக்கும்போது,

"பங்களாதேஷ் அணி, வலுவான அணி என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அந்த அணி வீரர்கள் உலகக் கோப்பைப் போட்டியின்போது, பலம் வாய்ந்த பாகிஸ்தான் அணியையே தோற்கடித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியவர்கள். எனவே அந்த அணியுடனான போட்டிகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும்!" எனக் கூறியுள்ளார்.

## அவுஸ்திரேலியாவுக்குப் பயணம்

கென்யாவின் தலைநகரான நைரோபியில் இந்தியா, தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே, கென்யா ஆகிய 4 நாடுகள் பங்கு பற்றிய எல்.ஜி. போட்டியில் கோப்பையை தென்னாபிரிக்கா கைப்பற்றியுள்ளது. லீக் போட்டிகளில் தென்னாபிரிக்கா, ஸிம்பாப்வே, கென்யா ஆகிய 3 அணிகளை வென்ற இந்தியாவும், ஸிம்பாப்வே, கென்யா ஆகிய அணிகளை வென்ற தென்னாபிரிக்காவும் இறுதிப் போட்டியில் மோதின.

முடிவில் 28 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது. இப்போட்டியின் பின் நாடு திரும்பிய இந்தியா, நியூஸிலாந்து அணியுடன் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

நியூஸிலாந்துடனான போட்டிகளை முடித்துவிட்டு அடுத்த மாத இறுதியில் இந்தியா, அவுஸ்திரேலியாவுக்குச் செல்லவுள்ளது. அங்கு அவுஸ்திரேலியாவுடன் இந்தியா 3 டெஸ்ட் போட்டிகளில் மோதவுள்ளது.

முதல் டெஸ்ட் டிசம்பர் 10ம் திகதி முதல் 14ம் திகதி வரை அடிலெய்ட்டிலும், 2வது டெஸ்ட் டிசம்பர் 26ம் திகதி முதல் 30ம் திகதி வரை மெல்போர்னிலும், 3வது டெஸ்ட் அடுத்த வருடம் ஜனவரி 2ம் திகதி முதல் 6ம் திகதி வரை சிட்னியிலும் நடைபெறவுள்ளன.

இந்திய அணி அவுஸ்திரேலியாவுடன் டெஸ்ட் போட்டிகளில் விளையாடத் தொடங்குவதற்கு முன் பாகிஸ்தானுடன் அவுஸ்திரேலியா 3 டெஸ்ட் போட்டிகளில் மோதவுள்ளது.

அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய 3 நாடுகள் கலந்து கொள்ளும் ஒரு நாள் போட்டித் தொடர் அடுத்த வருடம் ஜனவரி 9ம் திகதி முதல் பெப்ரவரி 6ம் திகதிவரை அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

## டெண்டுல்கரின் கதாநாயகன்

முதுகுவலிக்கு சிகிச்சை பெற்று தாயகம் திரும்பியுள்ள இந்திய அணியின் கப்டன் சச்சின் டெண்டுல்கர் தற்போது பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார். அண்மையில் பயிற்சி பெற மைதானத்திற்கு வந்த டெண்டுல்கர் நிருபர்களிடம் அளித்த பேட்டியில்,

"இந்தியக் கிரிக்கெட் அணிக்கு கபில்தேவ் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருப்பது எனக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. அவர்தான் எனது கதாநாயகன். அவருடன் சேர்ந்து விளையாட மாட்டேனா என்று கனவு கண்டு கொண்டிருந்தேன். அது ஒரு நாள் நிறைவேறியது. அப்போது நான் மிகவும் சந்தோஷப்பட்டேன்.

அவுஸ்திரேலியாவில் இருந்து வந்தது முதல் தினமும் பயிற்சி பெற்று வருகிறேன். தற்போது முதுகில் வலி எதுவுமில்லை," என்று தெரிவித்தார்.

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 21

ஆண்டவருடைய திருக்குமாரரான இயேசுபிரான், தான் மாநிடனாக மாநிலத்தில் வந்துதித்து ஆற்ற வேண்டியிருந்த அரும் பணிகள் முடிவுறும் காலம் வந்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்டார். இதற்கான அறிகுறிகளைத் தமது சீடர்களிடம் அடிக்கடி கூறிவந்தார். இயேசுபிரானின் கூற்றினை அவருடைய சீடர்கள் அனைவரும் தெளிவாக அறிந்து கொண்டனர் என்று கூறிவிட முடியாது.

எருசலேம் ஆலயத்தைவிட்டுப் புறப்படக் கருதிய இயேசுபிரானை, அவருடைய சீடர்கள் அவ்வாலயத்தின் பல பகுதிகளுக்கும் அழைத்துச் சென்று காண்பித்தார்கள். அவற்றையெல்லாம் பார்வையிட்ட பின்னர் இயேசுபிரான் இவ்வாறு குறிப்பிட்டார்:


"இங்கே கற்கள் ஒன்றின்மேல் ஒன்று இராதபடி எல்லாம் இடிக்கப்படும் என்று உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்!"

இதனைக் கேட்ட சீடர்கள் துணுக்குற்றனர். ஆலயத்தை விட்டு வெளியேறி, ஒலிவ

# சீடர்களுக்கான அறிவுரைகள்

மலைமீது இயேசுபிரான் ஏறினார். சீடர்களும் அவருடன் தொடர்ந்து சென்றனர். சீடர்கள் தங்களுக்கேற்பட்ட சந்தேகங்களுக்குரிய விளக்கங்களைக் கூறுமாறு இயேசுபிரானிடம் கேட்டுக் கொண்டனர்.

"தாங்கள் கூறியபடி எப்போது நிகழப்



போகின்றன? தங்களுடைய வருகைக்கும் இவ்வுலக முடிவுக்குமான அறிகுறிகள் என்ன?" என்று வினவினர்.

இவ்வினாக்களுக்கு விடை அளிக்கு முகமாக, வரப்போகும் கேடு பற்றி எச்சரிக்கை விடுக்குமாப்போல், இயேசுபிரான் இவ்வாறு கூறினார்:

**இராஜகுமாரன்**

### வரப்போகும் கேடு

"உங்களை யாரும் நெறிதவறச் செய்யாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் பலர் என் பெயரை வைத்துக் கொண்டு வந்து, 'நானே மெசியா' என்று சொல்லிப் பலரை நெறி தவறச் செய்வர். போர் முழக்கங்களையும் போர்களைப்பற்றிய செய்திகளையும் கேட்கப் போகிறீர்கள். ஆனால் திடுக்கிடாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். இவை நிகழத்தான் வேண்டும். ஆனால் இவையே முடிவாகா. நாட்டை எதிர்த்து நாடும் அரசை எதிர்த்து அரசும் எழும். பல இடங்களில் பஞ்சமும் நில நடுக்கங்களும் ஏற்படும். இவையனைத்தும் பேறுகால வேதனைகளின் தொடக்கமே. பின்பு உங்களைத் துன்புறுத்திக் கொல்வதற்கென ஒப்புவிப்பர்.

என் பெயரின் பொருட்டு எல்லா மக்களினத்தவரும் உங்களை வெறுப்பர். அப்பொழுது பலர் நம்பிக்கையை இழந்துவிடுவர்; ஒருவரையொருவர் காட்டிக்கொடுப்பர்; ஒருவரையொருவர் வெறுப்பர். பல போலி இறைவாக்கினர் தோன்றிப் பலரை நெறிதவறி அலையச் செய்வர். நெறிகேடு பெருகுவதால் பலருடைய அன்பு தணிந்துபோகும். ஆனால் இறுதிவரை மன உறுதியுடன் இருப்பவரே மீட்ப்புப் பெறுவர்.

உலகமெங்கும் உள்ள எல்லா மக்களினத்தாரும் ஏற்றுக்கொள்ளுமாறு விண்ணரசைப்பற்றிய இந்நற்செய்தி உலகமெங்கும் அறிவிக்கப்படும். அதன் பின்பு முடிவு வரும்.

இறைவாக்கினர் தனியேல் உரைத்த, 'நடுங்கவைக்கும் தீட்டு' திருவிடத்தில் நிற்பதை நீங்கள் காண்பீர்கள். அப்பொழுது இதைப் படிப்பவர் புரிந்து கொள்ளட்டும். யூதேயாவில் உள்ளவர்கள் மலைகளுக்குத் தப்பி ஓடட்டும். வீட்டின் மேல்தளத்தில் இருப்பவர்கள் கீழே இறங்கித் தம் வீட்டிலிருந்து எதையும் எடுக்காது ஓடட்டும். வயலில் இருப்பவர் தம் மேலுடையை எடுக்கத் திரும்பி வரவேண்டாம். அந்நாள்களில் கருவுற்றிருப்போர், பாலூட்டுவோர் ஆகியோரின் நிலைமை அந்தோ பரிதாபம்! குளிர்காலத்திலோ ஓய்வு நாளிலோ நீங்கள் ஓடவேண்டிய நிலை ஏற்படாதிருக்க இறைவனிடம் வேண்டுங்கள். ஏனெனில் அப்போது பெரும் வேதனை உண்டாகும்.

உலகத் தோற்றமுதல் இந்நாள்வரை இத்தகைய துன்பம் உண்டானதில்லை; இனிமேலும் உண்டாகப்போவதில்லை. அந்நாள்கள் குறைக்கப்படாவிட்டால் எவரும் தப்பிப் பிழைக்க முடியாது. எனவே தாம் தேர்ந்து கொண்டவர்களின் பொருட்டுக் கடவுள் அந்நாள்களைக் குறைப்பர். அப்பொழுது யாராவது உங்களிடம், 'இதோ, மெசியா இங்கே இருக்கிறார்! அதோ, அங்கே இருக்கிறார்' எனச் சொன்னால் நீங்கள் நம்ப வேண்டாம். ஏனெனில் போலி மெசியாக்களும், போலி இறைவாக்கினர்களும் தோன்றி, முடியுமானால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களையே நெறி தவறச் செய்ய பெரும் அடையாளங்களையும் அருஞ் செயல்களையும் செய்வார்கள்.

இதை முன்னதாகவே நான் உங்களுக்குச் சொல்லி விட்டேன். ஆகையால் எவராவது உங்களிடம் வந்து, 'அதோ, பாலைநிலத்தில் இருக்கிறார்' என்றால் அங்கே போகாதீர்கள்; 'இதோ, உள்ளறையில் இருக்கிறார்' என்றால் நம்பாதீர்கள். ஏனெனில் மின்னல் கிழக்கில் தோன்றி மேற்குவரை ஒளிர்வது போல மானிட மகனின் வருகையும் இருக்கும். பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் கூடும்.

"துன்பநாள்கள் முடிந்த உடனே கதிரவன் இருண்டுவிடும்; நிலா தன் ஒளி கொடாது; விண்மீன்கள் வானத்திலிருந்து விழும்; வான்வெளிக்கோள்கள் அதிரும். பின்பு வானத்தில் மானிட மகன் வருகையின் அறிகுறிதோன்றும். அப்போது மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும் மானிட மகன் வானத்தின் மேகங்களின்மீது வருவார். இதைக் காணும் மண்ணுலகிலுள்ள எல்லாக் குலத்தவரும் மாரடித்துப் புலம்புவர்.

அவர் தம் தூதரைப் பெரிய எக்காளத்துடன் அனுப்புவார். அவர்கள் உலகின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிவரை நான்கு திசைகளிலிருந்தும் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார்கள்.

### அத்திமர உவமை

அத்தி மரத்திலிருந்து ஓர் உண்மையைக் கற்றுக்கொள்ளுங்கள். அதன் கிளைகள் தளிர்த்து இலைகள் தோன்றும்போது கோடைக்காலம் நெருங்கி வந்துவிட்டது என நீங்கள் அறிந்துகொள்கிறீர்கள். அவ்வாறே இவற்றையெல்லாம் நீங்கள் காணும் போது மானிடமகன் கதவை நெருங்கி வந்துவிட்டார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இவை அனைத்தும் நிகழும்வரை இத்தலைமுறை ஒழிந்து போகாது என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும். ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா.

"அந்த நாளையும் வேளையையும் பற்றித் தந்தை ஒருவருக்குத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. விண்ணகத் தூதருக்கோ மகனுக்கோ கூடத் தெரியாது. நோவாவின் காலத்தில் இருந்தது போலவே மானிட மகன் வருகையின்போதும் இருக்கும். வெள்ளப் பெருக்குக்கு முந்தைய காலத்தில், நோவா பேழைக்குள் சென்ற நாள்வரை எல்லாரும் திருமணம் செய்து கொண்டும் உண்டும் குடித்தும் வந்தார்கள். வெள்ளப்பெருக்கு வந்து அனைவரையும் அடித்துச் செல்லும்வரை அவர்கள் எதையும் அறியாதிருந்தார்கள். அப்படியே மானிட மகன் வருகையின்போதும் இருக்கும்.

இருவர் வயலில் இருப்பர். ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார்; மற்றவர் விட்டு விடப்படுவார். இருவர் திரிகையில் மாவரைத்துக் கொண்டிருப்பர். ஒருவர் எடுத்துக் கொள்ளப்படுவார்; மற்றவர் விட்டுவிடப்படுவார். விழிப்பாயிருங்கள்; ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது.

இரவில் எந்தக் காவல் வேளையில் திருடன் வருவான் என்று வீட்டு உரிமையாளருக்குத் தெரிந்திருந்தால் அவர் விழித்திருந்து தம் வீட்டில் கன்னமிடவிடமாட்டார் என்பதை அறிவீர்கள். எனவே நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார்.

### நம்பிக்கைக்குரிய பணியாளர்

தம் வீட்டு வேலையாள்களுக்கு வேளா வேளை உணவு பரிமாறத் தலைவர் அமர்த்திய நம்பிக்கைக்கு உரியவரும் அறிவாளியுமான பணியாளர் யார்? தலைவர் வந்து பார்க்கும் போது தம் பணியைச் செய்துகொண்டிருப்பவரே அப்பணியாளர். அவர் பேறு பெற்றவர். அவரைத் தம் உடைமைகளுக்கெல்லாம் அதிகாரியாக அவர் அமர்த்துவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

அப்பணியாள் பொல்லாதவனாய் இருந்தால், தன் தலைவர் வரக் காலந் தாழ்த்துவார் எனத் தன் உள்ளத்தில் சொல்லிக் கொண்டு, தன் உடன் பணியாளரை அடிக்கவும் குடிகாரருடன் உண்ணவும் குடிக்கவும் தொடங்குவான்.

அப்பணியாள் எதிர்பாராத நாளில், அறியாத நேரத்தில் அவனுடைய தலைவர் வருவார். அவர் அவனைக் கண்டந்துண்டமாய் வெட்டி வெளி வேடக்காரருக்கு உரிய இடத்திற்குத் தள்ளுவார். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும்.

### மணமகளின் தோழியர்

அந்நாளில் விண்ணரசு எவ்வாறு இருக்கும் என்பதைப் பின்வரும் நிகழ்ச்சி வாயிலாக விளக்கலாம்:

மணமகனை எதிர்கொள்ள மணமகளின் தோழியர் பத்துப்பேர் தங்கள் விளக்குகளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றார்கள்.

அவர்களுள் ஐந்து பேர் அறிவிலிகள்; ஐந்து பேர் முன்மதி உடையவர்கள். அறிவிலிகள் ஐவரும் தங்கள் விளக்குகளை எடுத்துச் சென்றார்கள்; ஆனால் தங்களோடு எண்ணெய் எடுத்துச் செல்லவில்லை. முன்மதியுடையோர் தங்கள் விளக்குகளுடன் கலங்களில் எண்ணெயும் எடுத்துச் சென்றனர்.

மணமகன் வரக் காலந் தாழ்த்தவே அனைவரும் தூக்க மயக்கத்தால் உறங்கிவிட்டனர். நள்ளிரவில், 'இதோ மணமகன் வருகிறார். அவரை எதிர்கொள்ள வாருங்கள்' என்று உரத்த குரல் ஒலித்தது. மணமகளின் தோழியர் எல்லாரும் எழுந்து தங்கள் விளக்குகளை ஒழுங்குபடுத்தினர். அப்போது அறிவிலிகள் முன்மதியுடையோரைப் பார்த்து, 'எங்கள் விளக்குகள் அணைந்துகொண்டிருக்கின்றன; உங்கள் எண்ணெயில் எங்களுக்கும் கொடுங்கள்' என்றார்கள். முன்மதி உடையவர்கள் மறுமொழியாக, 'உங்களுக்கும் எங்களுக்கும் எண்ணெய் போதுமான அளவு இராமல் போகலாம். எனவே வணிகரிடம் போய் நீங்களே வாங்கிக்கொள்வதுதான் நல்லது' என்றார்கள்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை [பு-ஆ] 18 விடை:** ஆண்டவருக்கு அடுக்காத தீய செயல்கள் பலவற்றைக் கண்டார்.

**பரிசு பெறுவோர்:**

1. எப். சிந்தியா, இல. 30/2, புஷ்பதான மாவத்த, கண்டி.
2. யூ.எல்.எம். அஸாம், 28, 3ம் குறுக்குத் தெரு, புத்தளம்.
3. பா. சுபா, 25/22, ஹோல் புறூக், அக்கரபத்தனை.
4. செல்வி வ. மரிய சுசிலா, இல. 97/2, தாழையடி, கடற்கரை, சிலாபம்.
5. எம். நகோமி திலகவதி, மேதடிஸ்த பெண்கள் விடுதி, அரசடி, மட்டக்களப்பு.

**திருமறை [பு ஆ] 21 வினா :- மீட்புப் பெறுபவர் எவர்?**

ஒக்டோபர் 16 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:
**திருமறை பு.ஆ.21—தினமுரசு வாரமலர், த.பெ.இல—1772, கொழும்பு.**

# கந்தசாமியும் முத்துத்தம்பியும்

காபூக: அண்ணே வணக்கம். நம்முடைய வெளிநாட்டமைச்சர் வெளுத்து வாங்கியிருக்கிறார் பார்த்தியளோ? ஐ.நா.சபையில் நுளம்பு பிரச்சனை பற்றித்தான் பேச வேண்டுமாம். இனப்பிரச்சனை போன்ற சமாச்சாரங்களை 'டச்' பண்ணக்கூடாதாம்.



மு: நுளம்புப் பிரச்சனை பற்றி பேசுவதானால் அமைச்சர் ஏன் ஐ.நா.சபைக்கு போனவராம்! நேராக கொழும்பிலுள்ள மாநாகர சபைக்குப் போயிருக்கலாமல்லோ?

காபூக: அடிக்கடி அமைச்சர் குழம்பிப் போகிறார் போலகிடக்கு?

மு: குழப்பமில்லை ஐசே, கலக்கம்! எங்கே அவை தலையிட்டால், கூடுதலாகக் கொடுக்கவேண்டி வருமோ என்று கலக்கம். போரை நிறுத்தினால் புள்ளடி கிடைக் காமல் போகுமோ எண்டு கலக்கமோ கலக்கம்!

காபூக: உலகப் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

மு: அது மட்டும் என்ன கொசு ஒழிப்புப் பிரச்சனையோ? ரொம்பத்தான் முரண்பாடாக பேசுகினம்.

காபூக: அம்பாறையில் குடியேற்றவாசிகளை புலிகள் தாக்கினவையல்லோ? உடனே இயந்திரத் துப்பாக்கிகளை அள்ளிக் கொடுத்திருக்குது அரசாங்கம். பொறுப்பு உணர்ச்சியைப் பாராட்டலாமல்லோ?

மு: தாராளமாகப் பாராட்டாம். ஆனால் ஒன்று...

காபூக: என்ன அந்த ஒன்று?

மு: கோணகலவில் தரையால் போய் தாக்குதல் நடந்தது. அதனால் தரையில் சண்டைபோடக் கூடிய ஆயுதங்களை அரசாங்கம் கொடுத்திருக்குது. புதுக்குடியிருப்பில் வான் வழியாக சனம் தாக்கப் பட்டது. புதுக்குடியிருப்பு சனத்துக்கு ஏவுகணையல்லோ கொடுக்க வேணும்? கொடுப்பினமோ?

காபூக: கோணகல சனத்துக்கு ஏ.கே 47, புதுக்குடியிருப்பு சனத்துக்கு ஏவுகணை. யோசனை நல்லாத்தான் இருக்குது. கேட்டால் காதுகிழிந்து போகும். ஜாக்கிரதை.

மு: எல்லாம் சரி ஐசே. ஒரு விஷயத்தைக் கவனித்தனீரோ?

காபூக: சும்மா இப்படி மொட்டையாகக் கேட்டால் எப்படி?

மு: அப்ப! ஹிப்பித் தலையோட நின்றோ கேட்கிறது?

காபூக: பகடி விடாமல் விஷயத்துக்கு தாவுங்கோ.

மு: புதுக்குடியிருப்பு, கோணகல சம்பவங்கள் சமாதானத்தை வலியுறுத்துதாம். அறிக்கைகள் விட்டவை சொல்லுகினம்.

காபூக: அதுக்கு என்ன குறை?


மு: சனத்துக்கு படை நல்லாக் குண்டு போடவேணும். புலிகள் நல்லா பதிலடி நடத்தவேணும். அப்பத்தான் சமாதானத்தின் அவசியம் தெரியும் எண்டமாதிரி ஊக்குவிப்பு அறிக்கைகளாக இருக்குதல்லோ?

காபூக: அதுதானே! இதே மாதிரி இன்னொரு அறிக்கை முன்பும் வந்தமாதிரிக் கிடக்கு?

மு: நீலன் கொலை அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்துவதாகக் கூட்டணிக்காரர் அறிக்கை விட்டிருந்தவை. அப்படியானால் என்ன அர்த்தம்? நீரே யோசித்துப் பிடியும். நான் சொல்லுற மாதிரியில்லே. நன்றி வணக்கம். ■




## கத்தரித்த கருத்துப் படம்




## காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com

Regd. as a News Paper at the G.P.O. (QD/40/NEWS/99)





பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:
105. காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

436331




## சீமைக்கு சென்ற திருத்தேர்





SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


≺ இலண்டன் மாநகர், மனோர்ப் பார்க்கில் உள்ள ஸ்ரீ மஹாலட்சுமி ஆலய தேர்த்திருவிழா அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றபோது தேர் பவனிவருவதை இங்கு காணலாம்.

இத்தேர் யாழ் மயிலிட்டி சரவணன் கவின் கலையகத்தின் பிரதம ஸ்தபதியும் தலைவருமான சரவணமுத்து ஜெயகாந்தன் அவர்களால் கொழும்பிலுள்ள கலைக்கூடத்தில் வடிவமைக்கப்பட்டு, கொள்கலன் மூலம் கப்பலில் இலண்டனுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

16 1/2 அடி உயரமான தேக்கு மரத்திலான இத்தேர் ஆக 21 நாட்களில் செய்துமுடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## முதல்வி



▲ மனிஷா கொய்ராலா, இந்திப் பட உலகின் கனவுக்கன்னி. தமிழ்ப் பட உலகுக்கும் அறிமுகமானவர்தான்.

தற்போதும் ஷங்கரின் 'முதல்வன்' படத்தில் முதல்வி இவரே.

இவர் சமீபத்தில் கூறியுள்ள கருத்து குண்டாக வெடித்திருக்கிறது. 'ஐஸ்வர்யா ராய் உலக அழகியாகத் தெரிவானதற்குக் காரணம் அவரது அழகல்லவாம். அந்த அழகை யாருக்குக் காணிக்கையாகக் கொடுக்க வேண்டும் என்று விவரம் தெரிந்திருந்ததால் வெற்றிக் கொடி நாட்டிவிட்டாராம்.

அழகிப்போட்டி பற்றிய பிரமிப்புக்களையே குண்டு வைத்துத் தகர்த்துவிட்டார் மனிஷா. ஐஸ்வர்யா ராய் மட்டுமல்ல, முன்னாள், இந்நாள் இந்திய அழகிகளும் மனிஷா வீசிய குண்டால் கொதித்துப் போயிருக்கிறார்கள்.

ஐஸ்வர்யா ராய்க்கும் சல்மான் கானுக்கும் இடையே ஏற்பட்ட நெருக்கம்தான் மனிஷாவுக்கு கடுப்பேற்றியதாம்.



உடல்கள் ஒட்டிப் பிறந்தால் பிரித்து விடலாம்! உடல் ஒன்று தலை இரண்டு என்றால்?



## இரண்டு

படைப்பில் தான் எத்தனை விநோதங்கள்! மனிதரில் மட்டுமல்ல சகல ஜீவராசிகளிலும் விநோதங்கள் உள்ளன!



▲ ஒட்டிப்பிறந்த இரட்டையர்கள் பற்றிய பல தகவல்களை 'முரசு' தந்துள்ளது. ஒட்டிப் பிறந்தால்கூட பிரித்துவிடலாம்.

ஆனால் இங்கு படங்களில் உள்ள குழந்தையும், விலங்குகளும் சற்று வித்தியாசமானவை. ஓர் உடம்பு ஆனால் இரு தலைகள்.

ஒட்டிப் பிறந்தவர்களைப் பிரிப்பதற்கு இப்போது மருத்துவம் முன்னேறிவிட்டது. ஆனால் ஒரே உடல் இரு தலைகளோடு பிறப்பவர்களுக்கு ஒரு தலையை தனியாகப் பிரிப்பது ஆபத்தானது என்கிறார்கள், மருத்துவர்கள்.

இரு தலையுடன்பிறந்த குழந்தை, இரு தலையுடன் பிறந்த பன்றி, இரு தலை செம்மறியாடு போன்றவையே இங்கு படங்களில் உள்ளன.

'முரசு' 256இல் இந்தப் பன்றி பற்றிய தகவல் வெளியாகி இருந்தது.

குழந்தையும், செம்மறியாடும் இன்னமும் உயிரோடு உள்ளனவா என்பது தெரியவில்லை. இந்தப் பன்றி மட்டும் அமெரிக்காவில் 'அயோவா' என்ற பகுதியில் படு ஆரோக்கியமாக வாழ்ந்து வருகிறது.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



ஆதித்தியன்
13.10.1999

திருக்கோணமலையைச் சேர்ந்த காண்டீபன்-தீவகலா தம்பதியினரின் செல்வப் புதல்வன் ஆதித்தியன் தனது 1வது பிறந்தநாளை 13.10.1999 அன்று 41, சென்ற்.அன்ரனிஸ் வீதி, திருக்கோணமலை இல்லத்தில் கொண்டாடுகிறார். ஆதித்தியனை அன்பு அம்மா, அப்பா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா தீவன் அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அத்தைமார், மாமாமார் சுவிஸிலுள்ள தீவன் மாமா, மனோ சித்தி, மச்சாளமார்களான புவி, செந்தூரன், ஸ்ரீதரன், மச்சாளமார்களான ஸ்ரீதரி, வதனி, சிந்து, சுஜி, நிவேதா அக்காமார்களான லக்ஷி, ஷமி, அபி கனடாவில் வசிக்கும் விந்யாதா அண்ணா, தங்கை ஆரண்யா மற்றும் உறவினர் நண்பர்கள் அனைவரும் திருக்கோணமலை ஸ்ரீ பத்ரகாளி அம்மன் அருளும், நல்லாசியும் பெற்று பண்பின் பிறப்பிடமாய் செல்வச் செழிப்புடன் சகல கலைகளும் கற்று சகதீபமாய் பல்லாண்டு காலம் வாழ்கவென அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: ரவீந்தரன் (பெரியப்பா) தீவரஞ்சனி (பெரியம்மா)
282, BRIDLE TOWN CIR., SCARBOROGH ON MFW 2G8, CANADA

## சுருள் மேனி



இது உடலா? அல்லது ரப்பரா? சூப்பராக இருக்கல்லவா?

சிறுவயதில் இருந்தே தன் உடம்பை நினைத்தபடி வளைக்கும் பயிற்சி செய்து பதப்படுத்தி வைத்திருக்கிறார்.



◄ தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போன்று, இவரும் நேராகத் தொட வேண்டியவற்றை முதுகைச் சுற்றி தொடுகிறாரே என்று நினைக்கிறீர்களா?

சாதனை முயற்சி என்றால் சும்மாவா? குனிந்து நிமிரவே உடம்பு முரண்டு பண்ணுகிறது. இந்த மனிதர் மடக்கி நிமிர்த்தி மாயாஜாலம் அன்றோ காட்டுகிறார்!

(பட உதவி: எம்முபாலிர், ஜெட்டா—சவுதி)